Registered as a News Paper
பக்கம் - 24
விலை: 16.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-36 05-11 நவம்பர் 2004



## உள்ளூர் உற்பத்திகள் எங்கே?



## பலவீனமான முன்னுதாரணமா...?

# திருமுக அறிமுகம்

அவர் மதுரகவி மட்டுமல்ல, அமர கவியும் கூட நமக்குத் தொழில் கவிதை என்று அறைகூவல் விடுத்த மகாகவி பாரதியின் அடிச்சுவட்டில் கவி புனைந்த தமிழ்க்கவிஞன், தமிழீழக் கவிஞன்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட "பூம்புகாரில் ஒருநாள்" என்ற கவிதைப் போட்டியில் விருதுபெற்ற இரு ஈழக்கவிஞர்களில் ஒருவர்.

நாகராஜன் என்றால் மதுரகவி, மதுரகவி என்றால் நாகராஜன் என்று விதந்துரைக்கப்படுபவர்.



## மதுரகவி இ.நாகராஜன்

இ.நாகராஜன் ஈழகேசரி பாரம்பரியத்தில் வளர்ந்தவர். நேர்நோக்கு இலக்கியவாதி, கவிஞர், எழுத்தாளர், மனிதநேயமும், குழந்தை மனமும் கொண்ட எளிமையான தோற்றம் கொண்ட பண்புக்குரியவர்.

குழந்தை இலக்கியத்தில் அதீத கரிசனை கொண்டவர். இவரது "நிறைநிலா" என்ற சிறுகதைத்தொகுதி ஈழத்தமிழ் இலக்கியத்தின் தரச்சிறப்புக்கு ஒரு சான்று.

தத்துவநோக்கு இயல்போடு ஒட்டிய சிந்தனை கலைச்சிறப்பு மனித வாழ்வியலில் பல்வேறு பரிமாணங்களையும் ஊடுருவித் தரிசிக்க வைக்கும் எழுத்தாற்றல் நாகராஜனிற்கேயுரிய ஆக்கவியல் சிறப்பம்சம் ஆகும்.

முழுநேர எழுத்தாளனாகவும், கவிஞனாகவும் வாழ்ந்து தன்னை இலக்கியவாதியாக மட்டும் இனங்காட்டியவர்.

விருத்தம் எனும் வெண்பாவில் இருந்து கைவண்ணம் பல வகையில் மிளிர்வதை இவரது பாடல்களில் காணமுடியும். கவியரங்குகளில் அவரது குரல் கம்பீரமாக ஒலிக்கும் போதெல்லாம் சபை மெய்மறந்திருக்கும் வரலாறு அவரின் திறமைக்குச் சான்றாகும்.

யாழ்.இலக்கிய வட்டத்தின் உப தலைவர்களில் ஒருவராக இலக்கியப்பணியாற்றியவர்.

குழந்தைகளுக்காக சிறுவர்பாடல் என்ற அற்புதமான கவிதைத் தொகுதியை. எழுதி வெளியிட்டவர்.

"சிலம்பு சிரித்தது" என்ற தனித்துவமிக்க கவிதை நாடக நூலை யாத்தவர்.

ரசிகமணி கதை செந்தில்நாதன் அவர்களால் உற்சாகம் என்ற படைப்பாளர், உண்மை நட்புக்குரிய பண்பாளர் என்று புகழப்பட்டவர்.

அமரகவி ஆகிவிட்ட அந்த மதுரகவியின் ஆக்கங்கள் அனைத்தும் முழுமையாக நூலாக்கம் பெறின் அவரது கலை இலக்கி வெளிப்பாடுகளின் முழுப்பரிமாணத்தையும் தமிழ் உலகம் முழுமையாக அறிந்துகொள்ள முடியும்.

# காரசாரம்

## பரிவு காட்டுங்கள்...!

குழந்தைப்பிள்ளை வாட் ஆஸ்பத்திரிக்க கொடுமையான இடம் இதுதான். பால் மணம் மாறாத பச்சைக்குழந்தையள் பல விதமான நோயளால வாடிக் கொண்டிருக்கும், பெற்றதாய்மார் எவ்வளவு மனக்கொதியோட தவிப் போட வேதனையோட துடிச்சுக் கொண்டு பிள்ளையளோட நிப்பினம். பிள்ளை இருமினா, ஒரு தாய்க்கு தான் பல தடவை இருமுவது போல தொண்டை எரியும். அவளின்ர உயிரே ஒடுங்கிப்போய் நிப்பாள். உளவியல் ரீதியாக மிக மோசமாகத் தாக்கப்பட்டு நிற்பாள் அவள். பாலூட்டும் தாய்மாருக்கு பலவித உடல் உளத்தாக்கங்கள் உண்டு. ஒரு குழந்தை பருப்புக் கறிச் சட்டியை இறக்கி வைக்க, அதற்குள் தடுமாறி உட்கார்ந்து முனகிக் கொண்டு எட்டுமாதக் குழந்தை திணறிக்கொண்டிருக்கிறது. எதையோ காதுக்குள் போட்டுவிட்டு மயக்க மருந்துகொடுத்து எடுத்துவிட்டு மயக்கம் தீராமல் ஒன்று, பல விதமான நோய்கள் சிரங்கு, வயிற்றோட்டம், காய்ச்சல் எனப்பல. தினமும் இரவும் பகலும் விழிமூடாது நிற்கும் தாய்மாரின் சோர்வு கண்களில் வேதனையோடு அப்பிக் குலைந்துபோய் நிற்கிறார்கள். சின்னஞ் சிறிய கட்டில் குழந்தைக்கு அதில் உட்காரமுடியாது. குழந்தைக்கான துணிவகை, சோப், சுடு தண்ணி போன்ற பொருட்களை வைக்க மேசை கிடையாது. கட்டிலருகே கால் அசந்து போனால் உட்கார ஒரு முக்காலி கிடையாது. காலை மாற்றி மாற்றி நின்று பார்த்து இயலாமல் பிள்ளையின் கட்டிலிலேயே ஒரு புறமாய் ஏறிக்குந்தும் தாய்மார், தாதியின் வரவு கண்டால் பயத்துடன் இறங்கி நிற்கின்றனர். தாதியின் வரவு அந்த தாய்க்கு அச்சமூட்டுகிறது எல்லா தாதியர்களையும் கண்டல்ல.

விட்டது. பிட்டம் அரை என்பன வெந்துவிட்டது. வயதும் ஒரு ஒன்று ஒன்றரை இருக்கும். இதற்குத்தாயைக் குறைசொல்ல முடியாது. ஒரு அறை கொண்ட கொட்டில் வீடு- பிள்ளைகளும் வெளியே போக முடியாது. தாய் அடுப்பில் வேலையாயிருக்கும் போது குழந்தை தாயின் முதுகைப் பிடித்த வாறே நின்றது. தாய் கறி இறக்குவதற்கு உடலை அசைக்க குழந்தை நிலைதவறிவிட்டது. யார் காரணம். மிக்சியில் அரைத்து, காஸ் குக்கரில் சமைத்து ஹோலில் பிள்ளைகளை விட்டுவிட்டு, கிச்சினில் நின்றுகொண்டே சமைக்கும் வசதியுள்ளவர்களுக்கு இந்த ஏழை வீட்டுக் குடிசை வாழ்வு புரியாது. பாவம் குழந்தை அனுபவிக்கும் வேதனை யைவிடக் கூடுதலான வேதனையோடு அந்தத்தாய் இருக்கிறாள். சளித்தொல்லையில்

"கவிதா...கவிதா...ஆரப்பா கவிதா-" கீச்சிட்ட குரலில் அவர் கத்தும்போது அனைவர் நெஞ்சங்களும் துடிக்க மறந்து போய் அடுத்து யாருக்குப்பேச்சு விழப்போகிறதோ என்ற பதைப்போடு நிற்க, முகத்தில் சினத்துடன் மீண்டும் கடூரமாக, "கவிதா...கவிதா..." அந்தக்குழந்தை வாந்தியெடுக்கவே அதன் தாய் வெளியே கொண்டு போயிருந்தாள். சாவசாசமாக வருகிறாள்.

"என்ன உமக்கு வாயில லயே-மசறிக்கொண்டு வாறீர். இனி ஆளில்லாட்டி ஆளில்லயெண்டு எழுதிப்போட்டுப் போயிருவன்."

"செல்வன்...செல்வன்...பிள்ளையள்ள அக்கறையில்ல...ரெண்டு தரங்கூப்பிட்டுப்பாப்பன் இல்லாட்டி விட்டிட்டுப் போயிருவன்..." ஆளில்லையெண்டு எழுதிப்போட்டுப் போவன். என்ன கட்டில்ல உவள சாமான், வீட்டிலயுமிருந்தாக் கொணந்து வையுங்கோ.

"ஆரப்பா...பிள்ளையளக் கொண்டாங்கோ...."

கட்டிலுக்குக் கட்டில் மருந்து வண்டியைத் தள்ளிய வாறே வரும்தாதி அவரவர் மருந்தை வாயில்போட்டு நீருமூற்றி விடுவதுதான் கடமை. இங்கே கையில் கொடுக்கும் மருந்தை குடிக்கலாம். குடிக்காமலும் விடலாம். வண்டிலைத்தள்ளி வாசலில் விட்டதாதி மீண்டும் கத்தினார். "மருந்துக்கு வாங்கோ." "கூப்பிட்ட உடன வராட்டி ஆளில்லையெண்டு எழுதிப் போட்டுப் போயிருவன்." இந்தாங்கோ. ரெண்டு மணிக்கு வந்து ஊசிபோடுங்கோ....

"உங்களுக்குமருந்தில்ல... கடையில வாங்கிப் போடுங்கோ... (கடையில வாங்கிப் போடுற தெண்டா ஏன் வாட்டில நிக்க) இப்ப காது வருத்தத் துக்கு?! கொண்டு வந்து கிடத்தின குழந்தை காதைப் பொத்தியபடி தாயைக் கேட்டது. "அம்மா வீட்டபோவம் இஞ்ச பேசுகினம்...."

ஆசுப்பத்திரிக்கு நோயாறத்தான் போறது. புதிசா நோய் வாங்கயில்ல. ஒருவர் வாட்டில கிடக்கவேண்டியநிலை வந்தா மானம் மரியாதை, சூடு சுரணை எல்லாத்தையும் மறந்துபோக வேணும் எண்டது மாதிரி அந்தத் தாதி நடந்துகொண்டார். ஒரு ஆறுதல்வார்த்தை. ஒரு மென்மையான பார்வை, இன்முகம் என்னால் கேட்கவோ பார்க்கவோ முடியவில்லை.

"வைத்தியர் வந்தாத்தான் ஆள் சாது. அவரும் அங்கால போக இஞ்சால தர்பார்தான்.

என்ன செய்யிறது வருத்தம் மாற வேணுமெண்டா எல்லாத்தையும் தாங்கத்தானே வேணும். இப்படி எல்லாத் தாதிமாரும் அல்ல. ஏனோ ஒரு சிலர் இப்படியிருக்கினம்.

மாயா

## நாங்கள் மாறினாத்தான் நாடு முன்னேறும்...!

என்ன பட்டதாரியளுக்கெல்லாம் பயிற்சி குடுக்கினமாம், அரசாங்கம் பாவம் படிப்பிச்சு முடிஞ்சு பயிற்சி, பயிற்சிக்கால சம்பளம், முடிய சேவைக்கால சம்பளம், முடிய ஓய்வூதியம், "கோழி மேய்க்கிற வேலையெண்டாலும் கோறண மேந்தில மேய்க் கோணும்" எண்டு சொல்லுவினம் என்ன வேலைக் காலம் முடிஞ்ச பிறகும் பெஞ்சன் வரும் எண்டு தான். வேற என்ன? சரி வேலையற்ற பட்டதாரியள் எண்டு ஆரும் இருக்கினமோ, வவுனியா நகருக்குள்ள போய்ப் பாருங்கோ. ஒரு இருவத்தைஞ்சு சேட்டைக் கொழுவிக் கையில கொண்டு திரிஞ்சு விக்கிறவை. அப்பிள் மங்குஸ்தான் விக்கிறவை, லொத்தர் சீட்டு விக்கிறவை, புத்தகம் விக்கிறவை, முச்சக்கரவண்டி ஓட்டிகள், என்று ஏராளமான இளைஞர்கள் வேலை செய்யினம்- கட்டில் அலுமாரி, போன்ற தளபாடப் பொருட்களைக் கம்புகளில் மாட்டித் தூக்கிக் கொண்டு செல்லும் வியாபாரிகள். இவர்களெல்லாம் மாதமொண்டுக்கு எட்டாயிரத்துக்கு மேல் உழைக்கிறார்கள். கல்லுடைக்கும் தொழிலாளியின் நாட்கூலி அறுநூறு ரூபாய் வாயைப்பிளக்க வேண்டாம். மேசன் கூலி பற்றிப் பார்ப்போம். கடந்த இருபது ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்ட கட்டடங்கள் கடந்த இரண்டு வருடங்களில கட்டுவதற்கு எவ்வளவு தொழிலாளர் தேவை. தென்னிலங்கையிலிருந்தும், இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்தும் வந்து தொழில் செய்யும் மேசன்மார். நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் ரூபா உழைக்கிறார்கள் (பொருத்தம்) தச்சு வேலை செய்பவர்களும் அவ்வாறே.

ஒரு பட்டதாரிக்கு வரப் போகும் சம்பளம் ஆறாயிரம் ரூபா என்பது பேச்சு. வரப்போவது ஐயாயிரம் தானாம் கேள்வி. பயிற்சியளிப்பதற்கென்று யாரும் நிபுணர்மு வில்லை. விஞ்ஞானப்பட்டதாரிக்கு நடனம், சங்கீதம், பொறியியல் பட்டதாரிக்கு சமயம், அழகியல் பட்டதாரிக்கு கணிதம், விஞ்ஞானம், எனப்பயிற்சி நடக்கிறது. என்ன எல்லாருக்கும் எல்லாந் தெரிஞ்சிருக்கோணும் எண்டுதான். இந்த மூண்டு மாதப் பயிற்சியோட ஒரு பரீட்சை நடத்தி அதில பாஸ் எண்டாத்தான்... வேலையாம். ஒரு கதை ஒரு கிராமத்திலிருந்து ஒருவர் மகனைக் கூட்டிக் கொண்டுபெரியாஸ்பத்திரிக்குப் போனார். அவன்ர நோய் உள்ளூர் ஆஸ்பத்திரியில மாறயில்லை எண்டுதான். பொடியன் ஆசுப்த் திரிக்கை போன உடன பாத்தா எல்லா அறை வாசலிலும் சனம், எல்லா அறைக்குள்ளையும் டொக்டர்மார். சரி இது தான் பெரியாஸ்பத்திரி "சனங் குறைவா நிக்கிற டொக்டரட்ட காட்டுவமப்பூ "எண்டான். தேப்பன்காரன் சொன்னார். "தம்பி அவர் கண்டாக்குத்தர். இஞ்சாலகாது டாக்குத்தர். அதுக்க காயம்பாக்கிறவர். மேல பல்லு டாக்குத்தர். இவர் தொண் டையும் மூக்கும் காதும் சேத்துப் பாப்பார். அவர் காய்ச்சல் தடிமன் பாப்பார். எண்டு விளக்கமாச் சொன்னார். பொடியன் சொன்னான். "அப்பவா அப்பு ஊருக்குப் போவம் அங்கயிருக்கிற டாக்குத்தர்தான் கெட்டிக்காறன் எல்லாத்தையும் பாப்பார். எண்டு.

உதுதான் நடக்கப் போகுது பட்டதாரியளுக்கு ஏதோ ஜே.வி.பி.க்காறர் கத்துறாங்கள் எண்டு வெறுங்கையால முழம் போட வெளிக்கிடுறா சந்திரிகா அம்மா. எங்கட பட்டதாரியள் என்னடா எண்டால் அரசனை நம்பி புருசனைக் கைவிட்டுப் போகுதுகள். நீங்கள் என்னத்தைச் சொல்லுங்கோ உழைக்கத்தான் வேணுமெண்டா எங்கயும் எப்பிடியும் உழைக்கலாம். சவடாலா வாழவேணும் எண்ட நினைவோட உள்ளவைய மாத்தேலாது. நாடும் நாட்டுக்குள்ள வீடும் வீட்டுக்குள்ள நாங்களும் எண்டு நிக்கிறவைய உலகம் ஒரு நாளும் கிறேட்வண்'ணாப் பாக்கிறதுண்டோ? கிடையாது. கொலரில அழுக்குப் படாம ஏதும் வேலை செய்யினமெண்டாத்தானே மதிப்பும் மரியாதையும். கலியாணச் சந்தையும் கொஞ்சம் கலகலக்கும். "ம்... நாங்கள் மாறினாத்தானே நாடு முன்னேற."

# சமாதானமும் தமிழ் ஊடகங்களும்

நிலாந்தன்

இப்பத்தியின் வாசகரும் இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்தவரும் இப்பொழுது வர்த்தகருமான ஒருவர் என்னிடம் கேட்டார்..."ஏன் எப்பொழுதும் சமாதானத்தைப் பற்றியே எழுதிவருகிறீர்கள்?" என்று.

அண்மையில், இலக்கியகாரரான ஒரு நண்பர்கேட்டார்... "எமதுதமிழ் ஊடகங்கள் சமாதானத்தைக் கையாண்டுவரும் விதம் திருப்திகரமானதாக உள்ளதா?" என்று. "சில குறிப்பிட்டபத்தி எழுத்தாள்களைத் தவிர பெரும்பாலான அரசியல் பத்தி எழுத்தாளர்கள் சமா தானத் தைப் பற்றிமயக்கம்தரும் விதத்தி லேயே எழுதிவருகிறார்களே... ஏன்?" என்று.

உண்மைதான் சமாதானத்தைப் பற்றிச் சாத்ரண தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் சித்திரம் அதிகம் கலங்கலானதாகவே காணப்படுகிறது என்பதால்தான் சமூகத்துக்குச் சரியானதை எடுத்துக்கூறவேண்டிய பொறுப்பு மிக்க படைப்பாளிகளே சமாதானத்தைப்பற்றிய சரியான விளக்கமின்றி ஆளுநர்விருது, சாகித்திய விருது போன்றவற்றைப் பெறும் ஒரு நிலை காணப்படுகிறது.

முன்பு, யுத்தம் செய்த நாட்களில் சாகித்திய விருது, ஆளுநர் விருது போன்ற விருதுகளை நிராகரிக்கும் ஒரு போக்கே தமிழ்ப் படைப்பாளிகள் மத்தியில் காணப்பட்டது. இந்தவிருதுகளை நிராகரிப்பது என்பது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி என்றும் கருதப்பட்டுவந்தது. ஆனால், இப்பொழுது இத்தகைய விருதுகளைப் பெறுவது தவறில்லை என்பதான ஒரு சிந்தனை காணப்படுகிறது. ஏன் என்று கேட்டால் "இப்பொழுது சமாதான காலம்தானே எனவே மேற்படி விருதுகளைப் பெறுவதில் தவறென்ன?" என்ற தொனிப்பட பதில் வருகிறது.

அதாவது நிலவும் சமாதானத்தைப்பற்றிய ஒரு தெளிவான தரிசனம் தமிழ் படைப்பாளிகள் பலரிடமும் இல்லை. கடந்த ஆண்டு கொழும்பில் நடந்த ஹீரு கலைக் கூடத்திலும் இது தெரிந்தது. தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஒன்றாகக் கூடிவாழ்ந்த ஒரு "பொற்காலத்தைப்" பற்றிச் சில தமிழ்ப்படைப்பாளிகள் அங்கே உரையாற்றியதை இங்கே சுட்டிக்காட்டலாம்.

படைப்பாளிகளின் கதியே இதுவென்றால் சாதாரண சனங்களைப் பற்றிக்கேட்கவா வேண்டும்?

இதற்கெல்லாம் காரணம் இம்முறை யுத்தநிறுத்தம் அசாதாரணமாக நூதனமாக நீடித்து நிற்பதே. அதிலும் குறிப்பாக அது ஒரு தற்கொலை குண்டுத்தாக்குதலையும் ஒரு மென்தீவிர யுத்தத்தையும் தாங்கி முறியாது ஜீவித்திருப்பதே. ஒப்பீட்டளவில் இது ஒரு பலமான சமாதானம்தான். இதுதான் சமாதானத்தைப் பற்றிய சரியான ஒரு சித்திரத்தை பெறுவதிலிருந்து கணிசமான அளவு சாதாரண தமிழர்களையும் ஏன் சில ஊடகவியலாளர்களையும் கூட தடுக்கிறது எனலாம். இது காரணமாகவே சமாதானத்தைப்பற்றி சாதாரண மக்களிடம் உள்ள பொதுவான சித்திரம் கலங்கலானதாகக் காணப்படுகின்றது.

இக்கலங்கலான சித்திரத்தை தெளிய வைப்பதில் தமிழ் ஊடகங்கள் எவ்வளவு தூரத்திற்கு வெற்றி பெற்றிருக்கின்றன? அல்லது பொறுப்போடு நடந்திருக்கின்றன?

இக்கேள்விகளுக்கு விடை காண்பது என்றால் முதலில் தமிழ் ஊடகங்கள் சமாதானத்தை எப்படி அணுகுகின்றன என்பதைப்பார்க்க வேண்டும்.

இது விசயத்தில் பொதுவாக இரண்டு பலமான போக்குகள் காணப்படுகின்றன. முதலாவது., சமாதானத்தை ஒரு விறுவிறுப்பான செய்தியாக மட்டும் பாவிப்பது. இதன்மூலம் ஒரு சந்தர்ப்பத்தில் சமாதானத்தைப் பற்றிய நம்பிக்கைகள் உயர்ந்து கொண்டுபோகும். இன்னொரு சந்தர்ப்பத்தில் இந்த நம்பிக்கைகள் சோர்ந்து விழும். இது சாதாரண வாசகர்களை எப்பொழுதும் திகில்நிறைந்த காத்திருப்போடு ஊசலாடும் ஒரு நிலையில் வைத்திருப்பதோடு அவர்களை முடிவெடுக்கும் சக்தியற்றவர்களாக செய்திகளின் பின்னோடிகளாக மாற்றி விடுகின்றது.

இரண்டாவது, சமாதானத்தை விமர்சனபூர்வமாக அணுகும் ஒரு போக்கு இதன்படி இப்பொழுது நிலவுவது சமாதானமேயல்ல இது ஒரு யுத்த ஓய்வு மட்டுமே என்பதோடு இது இதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு போகக்கூடிய ஒரு களயதார்த்தம் கொழும்பிலும் இல்லை இந்த பிராந்தியத்திலும் இல்லை என்பதை சுட்டிக் காட்டும் இப்போக்குக்குரியவர்கள் இந்த சமாதானத்தை நம்பி ஏமாந்து விடக்கூடாது என்றும் கூறுகிறார்கள்.

இந்த இரண்டு போக்குகளையும் மேலும் சிறிது விரிவாக பார்ப்பதன் மூலமே சமாதானத்துக்கான தமிழ் ஊடகதர்மம் எத்திசையில் செல்கிறது என்பதை சரியாக அடையாளம் காணமுடியும். எனவே இந்த இரண்டு போக்குகளையும் மேலும் ஆழமாகப் பார்ப்போம்.

முதலாவது போக்கின் படி, யாராவது வெளிநாட்டுத்தூதுவர்கள் வந்தால் அல்லது அரசாங்கம் ஏதாவது அறிக்கை விட்டால் அல்லது சந்திரிகாவோ அல்லது மங்கள சமரவீரவோ எதையாவது சொன்னால் அதை அண்ணாந்து பார்த்துக் கொண்டு ஏதோ ஒரு திருப்பம் வரப் போகின்றது என்று காத்திருப்பதும் பின்பு சிறிது காலம் செல்ல நம்பிக்கைகள் தளரும் போது முன்பு எழுதியதிற்கு மாறாக எழுதுவதும் பிறகு சிறிதுகாலம் செல்ல மறுபடியும் அறிக்கைகள் தூதுவர்களின் பின் இழுபடுவதுமாக வாசகர்கள் நப்பாசைகளுடன் வைத்திருக்கப்படுகின்றார்கள். சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களிலும் இந்தப்போக்கு காணப்படுகின்றது. குமார் ரூபசிங்க ஜெகான்பெரேரா போன்றோர் இத்தகைய ஒரு போக்கையே பிரதிபலிக்கிறார்கள்.

இந்த ஊடகக்காரர்கள் அல்லது விமர்சகர்கள் ஒன்றை நன்கு விளங்கி வைத்திருக்கிறார்கள். அதாவது சனங்கள் யுத்தமற்ற ஒரு சூழலை விரும்புகின்றார்கள் என்பது. எனவே சமாதானத்தின் மீதான நம்பிக்கைகளை அவற்றின் விறுவிறுப்புக்கெடாமல் வைத்திருப்பது இவர்களின் வேலையாக இருக்கிறது, இது உண்மையில் சலிப்பூட்டும் ஒரு விசயமும்கூட. சொன்ன பொய்களையே திரும்பத் திரும்ப வேறு விதமாக சொல்வதைப் போன்றது இது. வாசகர்களின் ஞாபகமறதிதான் இந்தப்போக்கின் பிரதான முதலீடு. சில பத்திரிகைகளின் தலைப்புச்செய்திகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொகுத்துப்பார்த்தால் இது தெரிய வரும். அங்கே சூடான செய்திக்கு முக்கியத்துவம் தருவது என்ற வணிகக் கோட்பாட்டுக்கும் அப்பால் வேறு எந்த ஆழமான கொள்கைகளும் இருப்பதில்லை.

இனி இரண்டாவது போக்கை பார்ப்போம். இதில் விவகாரங்கள் நிகழ்காலத்திற்குரியவைகளாய் மட்டும் அணுகப்படுவதில்லை. அவை அவற்றுக்கேயான வரலாற்றுப் போக்கில் வைத்து விளங்கிக் கொள்ளப்படுவதோடு அந்த வரலாற்று அனுபவங்களின்படி விமர்சிக்கவும் படுகின்றன.

இதன்படி இப்பொழுது நிலவும் சமாதான முயற்சிகளை குறித்து அநேகமாக எதிர்மறையான கருத்துக்களை வைக்கும் ஒரு போக்கு இது. சிங்களத்தலைவர்களை நம்ப முடியாது; அவர்கள் என்றைக்குமே திருந்தமாட்டார்கள்; எனவே இந்த சமாதான முயற்சிகள் ஒரு கட்டத்திற்கு மேல் வளரப் போவதில்லை போன்ற கருத்துக்களை நிறுவுவதன் மூலம் சமாதானம் எனப்படுவது ஒரு மாயையே தவிர வேறு ஒன்றுமில்லை என்ற சித்திரத்தை உருவாக்க இப்போக்கு முயல்கின்றது.

ஆனால், இப்படி சமாதானத்தை விமர்சிப்பது அதன் தர்க்கபூர்வ வளர்ச்சியின்படி ஒரு கட்டத்தில் யுத்தத்திற்குக் கிட்டப்போய் நிற்கிறது. அதாவது இழுபட்டுச்செல்லும் இந்த சமாதானத்தைவிடவும் யுத்தம் பரவாயில்லையா? என்று கேட்கத் தோன்றும். இது போன்ற சில கேள்விகள் அண்மையில் தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் வந்திருந்தன. வீரகேசரி வார வெளியீட்டில் சிவராம் எழுதிய ஒரு பத்தியின் மீதே தினக்குரல் ஆசிரியர் தலையங்கம் கேள்வி எழுப்பியிருந்தது. அதற்குச் சிவராம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரகேசரியில் பதில் கூறியிருந்தார். இந்த இரண்டாது போக்கில் உள்ள பிரச்சினையே இதுதான். இந்த சமாதானம் பொய் என்றால் யுத்தத்தை ஏன் தொடங்கக் கூடாது? என்ற கேள்வி இயல்பாகவே எழும்.

முதலாவது போக்கின்படி சாதாரண சனங்களை கையாலாகாத சமாதானத்தின் செயலற்ற பார்வையாளர்களாகக் காத்திருக்க வைப்பதை விடவும் இரண்டாவது போக்கின்படி அவர்களை என்றைக்கோ ஒரு நாள் வெடித்தெழப்போகும் ஒரு யுத்தத்தை நோக்கி தயார்படுத்தி வைத்திருப்பதே சரி என்று கூறுகிறார்கள், மேற்படி இரண்டாவது போக்குக்குரியவர்கள்.

ஆனால், சாதாரண சனங்களோவெனில் இந்த இரண்டு போக்குகளுக்குமிடையே கிழிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். யுத்தம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போல தோன்றிய சுமார் மூன்று தாசாப்தங்களைக் கடந்து வந்த மக்கள் இவர்கள். கடந்த முப்பது ஆண்டுகால அனுபவம் மட்டுமே அவர்களுக்குப்போதும். வேறு எந்த அரசியல் விளக்க கூட்டங்களோ அல்லது அரசியல் வகுப்புக்களோ தேவையில்லை. சமாதானத்தின் உள்ளுடனை அல்லது சமாதானத்தின் சூத்திரக்கயிறுகளை அவர்கள் கண்டுபிடிக்கிறார்களோ இல்லையோ அதன் நிச்சயமற்ற தன்மையை கண்டுபிடிப்பது அவர்களுக்கு பெரியவேலையில்லை.

இந்த சமாதானம் நிலைக்காது என்று அவர்களுக்கு தெரிகிறது. ஆனால், அது புத்திநிலைப்பட்ட ஒரு விளக்கம் மட்டுமே. அதேசமயம் மனமோ யுத்தமற்ற ஒரு சூழலைத்தான் விரும்புகிறது. கடந்த முப்பது ஆண்டுகால யுத்தக்களைதீர இந்த முப்பது மாதகால சமாதானம் போதுமா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், விருப்பத்திற்கும் புத்திபூர்வ விளக்கத்திற்கும் இடையில் சனங்கள் கிழிபடுகிறார்கள் என்பதே மெய்நிலை. சனங்களிடம் உள்ள இந்த ஈரூடக நிலையைத்தான் தமிழ் ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. ஒன்றில் சமாதானத்தை குருட்டுத்தனமாக விசுவாசிக்க வேண்டும். அல்லது அதை கடுமையாக விமர்சிப்பதன் மூலம் யுத்தத்தை தவிர வேறு தெரிவு இல்லை என்று நிறுவவேண்டும். கட்சிசார்ந்த ஊடகங்கள் அல்லது தீர்மானம் எடுக்கும் தரப்பினரின் உணர்வலைகளை பிரதிபலிக்கும் ஊடகங்கள் இது விசயத்தில் திட்டவட்டமான கொள்கை முடிவுகளை எடுக்கமுடியும். மாறாக, இவையல்லாத வேறு ஊடகங்கள் ஒருவித இரண்டும் கெட்டான் நிலைப்பாட்டையே எடுக்கின்றன. அதாவது அவை சாதாரண சனங்களின் ஈரூடக நிலையையே அதிகம் பிரதிபலிக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவரை சந்தித்தேன். "பாண்டியன்குளத்தில் காணியை பார்க்கப்போகிறேன்" என்றார்... "குடும்பம் எங்கே?" என்று கேட்டேன்... "யாழ்ப்பாணத்தில்தான்" என்றார். "தொழில் எங்கே" என்று கேட்டேன்... "யாழ்ப்பாணத்தில் தான்" என்றார். "பிறகெதற்கு பாண்டியன் குளத்தில் காணிவைத்திருக்கிறீர்கள்" என்று கேண்டேன். "யாழ்ப்பாணம் சொந்த ஊர்தான் என்றாலும் இடம் பெயர்ந்து வந்து வாங்கிய வன்னிக் காணியையும் கைவிடக்கூடாது இந்த சமாதானத்தை நம்பி ஆமிக்குள் போய் ஒரேயடியாக குந்திவிடக்கூடாது. வன்னியிலும் ஒருபிடி இருக்க வேண்டும்..." என்று அவர் சொன்னார்.

அவர் ஒரு ஈரூடகவாசி. தமிழர்களின் அரசியலும் அப்படித்தான். ஈரூடகத் தன்மை பொருந்தியதாகவே காணப்படுகின்றது. இதைத்தான் தமிழ் ஊடகங்களும் அதிகம் பிரதிபலிக்கின்றன. நிலவும் ஒப்பீட்டளவில் மிக நீண்ட யுத்த நிறுத்தம் இந்த ஈரூடகத்தன்மையை மேலும் பேணி வைத்திருக்கிறதே தவிர குறைக்கவில்லை. அக்காசி வந்தென்ன பீற்றசன் வந்தென்ன ஆர்மிரேஜ் வந்தென்ன இந்த ஈரூடக நிலை பெரியளவில் மாறப்போவதில்லை. ஏனெனில், யுத்தத்தை ஒத்திவைப்பதுதான் சமாதானம் என்ற ஒரு நிலை உள்ளவரை நாட்டின் அரசியலானது ஈரூடக தன்மை பொருந்தியதாகக் காணப்படுவதே இயல்பு.

இந்த சமாதானம் நிலைக்காது என்று அவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் அது புத்திநிலைப்பட்ட ஒரு விளக்கம் மட்டுமே. அதேசமயம் மனமோ யுத்தமற்ற ஒரு சூழலைத்தான் விரும்புகிறது. கடந்த முப்பது ஆண்டுகால யுத்தக்களைதீர இந்த முப்பது மாதகால சமாதானம் போதுமா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், விருப்பத்திற்கும் புத்திபூர்வ விளக்கத்திற்கும் இடையில் சனங்கள் கிழிபடுகிறார்கள் என்பதே மெய்நிலை. சனங்களிடம் உள்ள இந்த ஈரூடக நிலையைத்தான் தமிழ் ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. ஒன்றில் சமாதானத்தை குருட்டுத்தனமாக விசுவாசிக்க வேண்டும். அல்லது அதை கடுமையாக விமர்சிப்பதன் மூலம் யுத்தத்தை தவிர வேறு தெரிவு இல்லை என்று நிறுவவேண்டும். கட்சிசார்ந்த ஊடகங்கள் அல்லது தீர்மானம் எடுக்கும் தரப்பினரின் உணர்வலைகளை பிரதிபலிக்கும் ஊடகங்கள் இது விசயத்தில் திட்டவட்டமான கொள்கை முடிவுகளை எடுக்கமுடியும். மாறாக இவையல்லாத வேறு ஊடகங்கள் ஒருவித இரண்டும் கெட்டான் நிலைப்பாட்டையே எடுக்கின்றன. அதாவது அவை சாதாரண சனங்களிண் ஈரூடக நிலையையே அதிகம் பிரதிபலிக்கின்றன.

# நறுக்கென...

## அதிகார அரசியலும் தீராத பதவி மோகமும்



சமாதானத்தையும்- அமைதிமுயற்சிகளையும் எதிர்க்கவென்றே கூட்டணி சேர்ந்தவர்களின் சுயநல அரசியல் போக்குகள் மெல்லமெல்ல விஸ்வரூபம்கொள்ளத் தொடங்கியுள்ளன. அதுதான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஐக்கியமின்மை வளர்ந்து வருவதைத்தான் சொல்கிறேன். அதிகார வெறியும் மேலாதிக்க போக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான தலைமைகள் மத்தியில் முரண்பாடுகளை அதிகரிக்கச்செய்துள்ள நிலையில் ஆளை ஆள் பகிரங்கமாகவும், கீழ்த்தரமாகவும் விமர்சிக்கும் அவமானகரமான நிலை வலுப்பெறத் தொடங்கியுள்ளது.

ஜே.வி.பியின் அந்தத் தாடிக்கார அதிகப்பிரசங்கியான விமல் வீரவன்சவின் தொலை நோக்குச் சிந்தனையற்ற 'வெத்துவேட்டு' அரசியல் பேச்சுகளும், அறிக்கைகளும் கடந்த சில வாரங்களாகவே சனாதிபதியையும் தாம் பதவிப்பதர்களாகி ஒட்டிக்கொண்டிருக்கும் அரசையும் மட்டரகமாக விமர்சிப்பதிலும் அச்சுறுத்துவதிலும் முனைப்புக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பலவீனமான அரசின் ஒரே பலம் தாங்கள்தான் - தங்களைவிட்டால் அரசுக்கோ சனாதிபதிக்கோ எந்தவிதமான ஆதாரபலமும் கிடையாது என்பதை ஜே.வி.பியினர் நம்புவதாலேயே கிடைத்த வாய்ப்பை வைத்துக் கொண்டு தங்களை தனிப்பட்டமுறையில் அரசியல் ரீதியில் வலுப்படுத்திக்கொள்ள, மிரட்டல் அரசியல் தந்திரோபாயங்களை கையாளத்தொடங்கியுள்ளனர் என்றால் அது மிகையில்லை....

அவதந்திரம் தனக்கந்தரமாகிவிட்ட அவலம் சந்திரிகாவுக்கு. சாத்தான்களுடன் கூட்டுக் சேர்ந்ததால் ஏற்பட்டவிளைவுகளை அவமானத்துடன் எதிர் கொள்ளவேண்டிய சூழலில் தனது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தில் அல்லாடிக்கொண்டிருக்கும் அவருக்கு என்ன செய்வது என்று தீர்மானிக்கமுடியாதநிலை....

50 சதத்திற்குக் கூடப் பெறுமதியற்றவராக இருந்த சனாதிபதியை... ஓய்வுபெற்ற பொலிஸ்காரரின் தரத்திற்கும் கீழிறங்கிய நிலையில் இருந்த அவரை தாங்கள் தான் இன்று இந்த நிலைமைக்கு உயர்த்தியுள்ளோம் என வீரவன்ச வரட்டுத் திமிருடன் பேசியதையடுத்து ஐ.ம.சு. முன்னணிக்குள் முரண்பாடுகள் அதிகமாகிவிட்டுள்ளதுடன் மோதலும் தீவிரமாகத் தொடங்கியுள்ளது.

வீரவன்சவின் இந்தக் கூற்று பைத்தியக்காரத்தனமானது என்று பதில்கூறியுள்ள சந்திரிகா. ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிக்குரிய ஆகக்குறைந்த தகுதி கூட ஜே.வி.பிக்கு கிடையாது எனவும் வர்ணித்துள்ளார்.

இதற்குப் பிறகும் கூட ஜே.வி.பியினர் அரசில் ஒட்டிக் கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் அரசியல் கொள்கையோ கோட்பாடோ அற்ற வெறும் பதவிப் பதர்கள் என்பதே அர்த்தம்.

இப்படிக் கூறிவிட்டும் அவர்களை சந்திரிகா கூட்டணியைவிட்டு துரத்தாமல் இருப்பாரேயானால் அவருக்கு ரோஷம்கிடையாது என்றே அர்த்தம். இருதரப்பினரும் என்னதான் செய்யப் போகிறார்களாம்? அதிகார அரசியலில் ரோஷம் வெட்கம் பார்த்தால் பதவியைப் பாதுகாக்கமுடியுமா என்று கேட்கிறீர்களா? அதுவும் உண்மைதான்.

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது?



கடைசியில் ஹெல உறுமயவினர்க்கும்- அதாவது ஜாதிக ஹெல உறுமயப் பிக்குகளுக்கும், சிகல உறுமய- சிங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற ஆதிக்க அதிகாரப் போட்டியில் பிக்குகள் அணி வென்றுவிட்டதாகக் கூறவேண்டும்.

ஜாதிக ஹெல உறுமய மட்டுமல்ல ஒட்டுமொத்த சிங்கள பௌத்த இனவாதச்சிந்தனையாளர்களும்கூட கருத்தியல் மோதல்களுக்குள் தற்போது சிக்கியுள்ளதாகவே கூறவேண்டும்.

சில வருடங்களின் முன்னர்தான் சிங்கள மக்களின் நலன் பேணும்- தமிழ்மக்களுக்கு எதிரானதும், அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கும் நோக்கிலானதுமான ஒரு அமைப்பாக சிகல உறுமய உருவானது. அது உருவானபோது பௌத்த சிங்கள மக்களிடையே ஒரு தற்காலிக பரபரப்பு ஏற்பட்டதென்னமோ உண்மைதான். எஸ்.எல். குணசேகர, திலக்கருணாரத்ன சம்பிக்க ரணவக்க போன்றோருடன் முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகள் பௌத்த பிக்குமார் என்று ஒரு பேரணியே திரண்டதுடன், அந்தப்பிரசித்திபெற்ற இனவெறியரான கே.எம்.பி. ராஜரத்னா அவர்களின் ஆலோசகராகவும் அமர்ந்தபோது பேரினவாத சக்திகள் ஒரு பெரும் வீச்சுடன் ஒன்றுதிரண்டுள்ளார்கள் என்றே அச்சம் கொள்ளவும் வைத்தது.

ஆனால், எல்லாம் வெறும் பதவி வெறியர்களின் கோமாளிக் கூத்துத்தான் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவர்கள் சந்தித்த முதல் தேர்தலிலேயே அவர்களுக்குக் கிடைத்த தோல்வி மாபெரும் தோல்வியாகும். போனஸ் சலுகைமூலம் கிடைத்த ஒரேயொரு ஆசனத்திற்காக அவர்கள் ஆடிய ஆட்டமும் மோதலும் இருக்கிறதே...! சீ....பேரினவாத வெட்கம் அதுவாகும்.

முதலில் பெருந்தலையான எஸ்.எல் குணசேகரா கிறிஸ்தவர்-பௌத்தரல்ல என்ற காரணத்திற்காக சிங்களவராக இருந்தும் தூக்கியெறியப்பட்டவர்.

திலக்கருணாரத்னவும் சம்பிக்க ரணவக்கவும் பதவிக் கதிரைக்காக இழுபறிப் பட்டுக் கொண்டே கட்சியை இழுத்தனர்.

கடந்த தேர்தலில் சிகல உறுமய பிக்குகளின் தலைமையில் ஜாதிக ஹெல உறுமய என உருமாற்றிக்கொண்டு தர்மராஜ்ஜிய அமைப்புக்கொள்கையை முன்வைத்து தேர்தலில் நின்றபோது 10 ஆசனங்களை வென்று அதிர்ச்சியை உண்டுபண்ணினர். அந்த 10 பிக்குகளையும் வைத்து அரசியல் நாடகம் ஆட முயன்ற திலக்கருணாரத்ன- சம்பிக்க ரணவக்க கும்பலை இப்போது பிக்குகள் புறக்கணித்துவிட்டனர்.

வேறு வழியின்றி புலம்பிக்கொண்டே வெளியேறிய திலக்கருணாரத்ன ஐக்கிய தேசியக் கட்சியின் காலில் சரண்புகுந்தது தான் பரிதாபகரமானது .

சம்பிக்க புது முகவரியொன்றை தேடுவதாகக் கேள்வி. எப்படியோ பேரினவாதிகளுள்ளும் பேரினவாதிகள் உள்ளனர் என்பது தெளிவான நிலையில் ஹெலஉறுமயபிக்குகள் கைதேர்ந்த மூன்றாந்தர அரசியல்வாதிகளாக தம்மை மாற்றி 'அரசியல் சரணம் கச்சாமி' என்று கோஷம் எழுப்பத்தொடங்கிவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

## ரணிலின் விருப்பும் சந்திரிகாவின் முறைப்பும்



எது எப்படியோ, சிறிலங்காவின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இப்போது சற்று தெம்போடும் நம்பிக்கையோடும் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் ஒருவராகவே காணப்படுகிறார்.

ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் மோதல்களும் அவருக்கு எதிர்பார்த்ததைவிடவும் அதிக மகிழ்ச்சியூட்டுவதாகவே உள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆளும் அரசுக்கும் சனாதிபதிக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்வகையில் சமாதான முயற்சிகள் தொடர்பான கருத்துக்களை துணிச் சலுடன் (விருப்புடன் என்று கூறமுடியாது...) கூறிவருகிறார்.

குறிப்பாக இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் திட்டவரைவை யொட்டி அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமேயானால் அதற்கு நிபந்தனையற்ற ஆதரவை தமது கட்சி- அதாவது ஐக்கிய தேசியக் கட்சி வழங்கத்தயார் என அறிவித்தமையானது ரணிலை அனைத்துத தரப்பினரையும் திருப்பிப்பார்க்க வைத்தது. சந்திரிகாவை மட்டும் முறைத்துப்பார்க்க வைத்தது....

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் அரசு முன்னெடுக்கும் முயற்சிக்கு எதிர்கட்சி ஆதரவு தர முன்வந்திருப்பது இதுவே முதன் முறையாகும். உண்மையில் ரணில் தெரிவிக்க முன்வந்திருக்கும் இந்த ஆதரவின் பின்னணியில் இருக்கும் நுட்பமான ராஜதந்திரப் பொறியே சந்திரிகாவை முறைத்துப் பார்க்க வைத்துள்ளதெனலாம்.

இதுவே இன்று ஐ.ம.சு. முன்னணிக்கூட்டுக்குள்ளும் நெருக்கடியை ஏற்படுத்தக் காரணமுமாகும். உண்மையில் அரசு இன்று எதிர்கொள்ளும் பன்முகப்பட்ட நெருக்கடிகளுக்கும் சமாதான முயற்சிகள் குறித்த சர்வதேச அளுத்தங்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கவே செய்கிறது. எனவே தான் ரணிலின் நகர்வுகள் அதனையொட்டியதாக உள்ளன எனலாம்.

அடுத்தது சந்திரிகாவின் அரசியல் யாப்பை தனது அரசியல் எதிர்காலநலனுக்கேற்ப மற்றும் சந்திரிகாவின் மூலோபாயங்கள் மீதான ரணிலின் தாக்குதலானது இன்னமும் சந்திரிகாவை அச்சுறுத்துவதாகவே அமைந்துள்ளது எனலாம்.

அதாவது குறுக்குவழியில் அரசியல்யாப்பை சனாதிபதி திருத்தமுயன்றால் நாடு பிளவுறுவதை அரசால் தடுக்கமுடியாது என்று ரணில் விடுத்துள்ள எச்சரிக்கையானது தேசியமட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் கூட அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் இத்தகைய யாப்புமாற்ற முயற்சியானது தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை மையமாகவைத்து அரசியலமைப்பு நிர்ணய சபையொன்றினை அமைப்பதற்கான நியாயபூர்வ சூழலை உருவாக்குவதற்கே வழிவகுக்கும் எனவும் அவர்கள் அவ்வாறு செய்வதனைத் தவிர்க்கவே முடியாதென்றும் ரணில் கூறியுள்ளதையடுத்து சனாதிபதி நெருக்கடி மிகுந்தவராகியுள்ளார்.

ரணில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடொன்றிலேயே இதனை கூறியுள்ளமைதான் கவனத்தை ஈர்க்கும் விடயமாகும்.

ரணில் இந்த நகர்வுகளுக்கு மாற்றீடாக சந்திரிகாவால் தற்போது எதிர்கொண்டு வரும் உள்ளக முரண்பாட்டு மோதல்களுக்கு மத்தியில் என்னதான் செய்யமுடியும்? பொறுத்திருந்து பார்ப்போம்!

## உள்ளொன்று வைத்து புறமொன்று பேசலாமா?



அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தன்னைச் சந்தித்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷியிடம் சிறிலங்கா சனாதிபதி கூறியிருக்கிறாராம்!

இதிலொன்றும் குறைச்சலில்லை....

தன்னைச் சந்திக்கும் அனைவரிடமும் சமாதானத்தின் அவசியம் பற்றிய தனது புரிந்துணர்வை வெளிப்படுத்த அவர் தவறியதே கிடையாது. அது ஒரு சம்பிரதாயமாகவே போய்விட்டது.

ஆனால், சமாதானத்தை முன்னெடுக்க அவர் எந்தளவுக்கு தீவிரமான பற்றுறுதியுடன் நகர்வுகளை மேற் கொள்கிறார் என்பது குறித்து எவருமே ஆராய்வதுமில்லை. கவனத்தில்கொள்வதுமில்லை.

அப்படி அவர்கள் ஆழமான அக்கறை கொண்டிருப்பார்களேயானால் சந்திரிகா சமாதான முயற்சிகளில் அரை அடி தூரமாவது முன்னேறியிருப்பாரே! மாறாக சந்திரிகாவின் சமாதானக் குதிரை பின்நோக்கிய நகர்வை மேற்கொண்டுவருவதை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அவர்களுக்குத்தெரியும் சந்திரிகாவின் சமாதானம் தொடர்பான உள்நோக்கங்கள் குறித்து.

ஆனால், ஆர்மிரேஜ், அகாஷி, மற்றும் சில சமாதான வலியுறுத்தலில் தீவிரம் காட்டும் அதிகாரிகளுக்கும், ராஜதந்திரிகளுக்கும் இவையெதுவும் புரிவதுமில்லை. அவர்கள் அதனைப் புரிந்துகொள்ள முயன்றதுமில்லை.

அவர்கள் அடிக்கடி வருவார்கள்,<br>
பார்ப்பார்கள்,<br>
பேசுவார்கள்,<br>
சமாதானத்தை வலியுறுத்துவார்கள்,<br>
தங்கள் விஜயத்தின் சுயநல நோக்கங்கள் நிறைவேறியதும் பறந்து விடுவார்கள்.<br>
தங்கள் நாடுகளுக்கு திரும்பியதும் ஒரு அறிக்கை விடுவார்கள் அவ்வளவு தான்.<br>
இப்போது அகாஷி வந்துவிட்டு போயுள்ளார், அடுத்து ஆர்மிரேஜ் வரவுள்ளார்.<br>
ஆனால் சமாதானம் எப்போது வரும்?<br>
அது ஒருவருக்கும் தெரியாது!

அகாஷியின் இந்தமுறை விஜயமும் அரசதரப்பிடம் இருந்து நம்பிக்கையூட்டும் வகையில் ஆக்கபூர்வமான புதிய யோசனைகள் எதனையும் சமாதானம் குறித்து பெற முடியாத ஒன்றாகவே போய்விட்டது.

சந்திரிகா புதிய மொந்தையில் பழையகள்ளையே வண்ணம் கலந்துகொடுக்க முயல்கிறார் அவ்வளவுதான்!

ஆனால், எவ்வளவு காலத்திற்குத்தான் சந்திரிகா இப்படி பேய்க்காட்டப் போகிறாராம்? அவரது ஆட்சிப்பங்காளிகளுக்குள்ளேயான உள் முரண்பாடுகளுக்கு சமாதானத் தீர்வைக் காண்பதே சாத்தியமற்ற விடயமாகப்போய்க்கொண்டிருக்கையில்....

நாட்டில் சமாதானத்தை அவரால் எப்படிக் கொண்டுவர முடியுமாம்?

இது குறித்து அகாஷிகளும் ஆர்மிரேஜ்களும் ஆழமாக யோசிப்பது மிகவும் நல்லது.

**செங்குட்டுவன்**

# உளவும் ஊடுருவலும்

அகிலத்திலுள்ள தேசங்கள் யாவும் பகைவர்களின் நோக்கங்கள், திட்டங்கள், பகைவர்களின் மறைப்பு உளவாளிகள் போன்ற அனைத்தினையும் தெரிந்து அறிந்துகொள்ள பகைவர்களுள் "ஊடுருவல்"களை மேற்கொள்கின்றன.

பன்னெடு காலமாகவே உளவுமுறைகளுள "ஊடுருவல்" உளவு மரபு ஆகவும், வலுமிக்க ஆயுதமாகவும் பேணப்பட்டுவருகின்றது.

"ஊடுருவல்" பகைவர்களின அச்சுறுதல்களை முறியடித்து தேசத்தைகாக்கவும், பகைவர்களோடுபோர் புரியும்போது வெற்றி பெற்று தேசத்தைகாக்கவும் பக்கபலமான ஆயுதமாக இருந்துவருகின்றது.

"ஊடுருவல்" செய்யும் உளவாளிகள பொதுமக்களுள்ளும், உள்ளக நிர்வாகப் பிரிவுகளினுள்ளும், அதிஉயர் இரகசிய கட்டமைப்புக்களுள்ளும் ஊடுருவி செறிந்து நிலைபெறுகின்றனர்.

அவ்வாறாக ஊடுருவி இருக்கும் உளவாளிகள் சரியான தருணத்தில் அறிவுபூர்வமாக இயங்க வல்லவர்களாக இருக்கின்றார்கள்.

அவர்கள் எவரும் சிறிதளவேனும் சந்தேகப்படாதவாறு தங்களை மறைத்துக் கொள்கின்றனர். அதாவது மொழி, கலை கலாசாரம், பண்பாடு, மதம், சமூக பழக்கவழக்கங்கள், இடச்சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப தங்கள மறைப்பை தயார்செய்துகொள்கின்றனர்.

அவர்கள் பாதுகாப்புப் பலவீனங்களை, பொதுமக்களின் பலவீனங்களை, ஊடுருவல்

> **"ஊடுருவல்"களை பகை உளவுப் பிரிவினர் தமிழர் தாயகப் பகுதிகளுக்குள்ளும் உள்நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள்ளும் அதிஉயர் இரகசிய வட்டத்தினருக்குள்ளும் மேற்கொள்ளவே முயற்சிக்கின்றன. அதற்கான காய்களையும் நகர்த்திவருகின்றன.**
>
> **இந்த உளவு முயற்சியின் இலக்கு என்னவெனில் தமிழர்களின் படை பலத்தை உடைத்து, சிதைவுபடுத்தி பலவீனமாக்குவதாகவே இருக்கின்றது.**

செய்யவேண்டிய இலக்கின் பலவீனங்களையும் கண்டறிந்து அவற்றை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றனர்.

அவர்கள் தங்கள் உண்மை முகத்தை மறைத்து தங்களுக்குப் பொருத்தமான முகமூடிகளை அணிந்து மாறுவேடங்களில் இயங்குகின்றனர்.

அவர்கள் திட்டமிட்டு இலக்குவைத்து பழகுபவர்களுடன் நெருக்கமான நட்பை ஏற்படுத்திக்கொள்ளும் உளவியலாளர்களாக செய லாற்றுகின்றனர். அதாவது எந்தவொரு இரகசியத்தையும் தம்மோடு கதைக்கும் மனச்சூழலை உருவாக்கிக்கொள்கின்றனர்.

அவர்கள் "ஊடுருவல்" மேற்கொள்ளவேண்டிய அதிஉயர் இரகசிய மையத்துடன் தொடர்புபட்டிருக்கும் ஐந்து உறவு வட்டங்களுள்தான் ஆரம்பமாக நுழைகின்றனர். அதாவது பொதுமக்கள், தெரிந்த

**நீலன்**

வர்கள், சாதாரணமாக தொடர்புபட்டிருப்பவர்கள், நெருக்கமானவர்கள், மிக நெருக்கமானவர்கள் என அவைகள் அமைகின்றன.

இவ்வாறாக படிப்படியாக ஊடுருவி அதிஉயர் இரகசிய மையத்தினுள் உளவாளிகள் நிலைபெறும்போது பாதுகாப்பிற்கான இரும்புத்திரை நீங்கிவிடுகின்றது. அதனால் அந்தரங்க இரகசியத் தகவல்களை பாதுகாக்க முடியாமலும், தாக்குதல மற்றும் நாசவேலைகளை முறியடிககமுடியாமல் போய்விடுகின்றது.

உளவு அமைப்புக்கள் உளவாளிகளால் செய்யப்படும் "ஊடுருவல்"கள்தான் பெறுமதி வாய்ந்ததாகக் கருதி அவர்களை உச்ச இரகசிய வட்டத்தினுள் நாட்டுகின்றன. அவ்வாறாக "நாட்டுதல்"களை செய்து உளவு வலையமைப்பை அமைத்து நெருங்கமுடியாத பல இலக்குகளை அழித்துவருகின்றன.

இவ்வாறான உளவு அணுகுமுறைகளால்தான் அண்மையில் இந்தியாவில் வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டான். வெளியாகியுள்ள தகவல்களின்படி வீரப்பனின் மரணச் சம்பவத்திற்குப் பின்னால் உளவுப் படையினரின் மாறுபட்ட அணுகுமுறைகள் 100 சதவீதம் இருந்துள்ள தகவல்களை ஆய்வாளர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

வீரப்பனை ஒழித்துக்கட்டுவதற்கு பல ஆண்டுகளாக, பல பல்வேறு முயற்சிகளை அதிரடிப்படையினர் மேற்கொண்டபோதும் அவைகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. அண்மையில் "பட்டுப்பூச்சி" என பெயரிடப்பட்டு வீரப்பன் மீதான தாக்குதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

அதாவது அதிரடிப்படை வீரர்கள் சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனிப்பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. அதில் புலனாய்வுக் குழுவினர் வீரப்பனுக்கு உதவிசெய்யும் மக்களோடு மக்களாக இரண்டறக்கலந்தனர்.

அவர்கள் கிராமங்களில் தோட்ட வேலையாட்கள், மரமவெட்டுபவர்கள், ஆடு மேய்ப்பவர்கள், பார்வையற்றோர்கள், பிச்சைக்காரர்கள், சாமியார்கள், என பல்வேறுபிரிவுகளில் நிலைபெற்றிருந்தார்கள். அத்துடன் காட்டுப் பகுதியில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் நடத்துனர்கள், சாரதிகள் என ஒரு வருக்கொருவர் தெரியாதவகையில் தொழிலாற்றினார்கள.

இவ்வாறு ஒருபுறமாக உளவு வலைப் பின்னல் பின்னப்பட மறுபுறமாக 'வெள்ளத்துரை' என்கிற உளவாளி வீரப்பன் ஆட்களுடன் நெருக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டார். கால நகர்வில் வெள்ளத்துரை வீரப்பனின் மிக நம்பிக்கைக்குரிய ஒருவரானார்.

இப்படியாக உளவுப் பிரிவினரின் ஆக்கிரமிப்பிற்குள் வீரப்பன் வாழும் போதுதான் அவருக்கு கண்புரை நோய்க்கு சிகிச்சை பெற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இது சரியான தருணத்தை பார்த்திருந்த உளவுப் பிரிவினருக்கு வாய்ப்பாக அமைந்தது.

வெள்ளத்துரை வீரப்பனின் கண் நோய்க்குரிய சிகிச்சைக்கான ஒழுங்குகளை செய்தார். வீரப்பன் உளவுப் பிரிவினர் விரித்த சிகிச்சை வலைவிரிப்பில் தானாகவே வந்து வீழ்ந்தான். அவரின் 17 ஆம் ஆண்டுகால காட்டு ஆட்சியும் வீழ்ச்சியுற்றது.

தமிழக, கர்நாடக மாநிலங்கள் தங்கள படைப்பலத்தால் வீரப்பனை தீர்த்துக்கட்ட முடியாமல் திக்குமுக்காடி இருக்கும் சமயத்தில்தான் உளவுப்பிரிவினர் "ஊடுருவல்" என்கிற வலுமிக்க ஆயுதத்தின் துணையோடு வீரப்பனை தீர்த்துக்கட்டி அவரின் காட்டு வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

வீரப்பனை அழித்தொழிக்கும் முயற்சி யில் உளவுப் பிரிவினர் உயிரைப் பணயம் வைத்தனர். இத்தகைய அர்ப்பணிப்புக்களை மிஞ்சும்வகையில் பண்டைய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த உண்மையான "ஊடுருவல்" சம்பவத்தை இங்கு பார்ப்போம்.

பாரசீயக மன்னன் "டாரியஸ்" தனது படைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி பபிலோனியர்கள் மீது படையெடுத்தான். அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களின் கோட்டையை முற்றுகையின் கீழ் கொண்டு வந்தான்.

அந்த முற்றுகை ஒருவருடம் ஏழு மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் அந்த கோட்டையை கைப்பற்ற முடியாமல் மன்னனும், அவர் போர் வீரர்களும் தோல்வியின் விளிம்பில் இருந்தனர். மன்னனால் சகல போர்த்தந்திரங்களையும், யுக்திகளையும் பயன்படுத்தப்பட்டும் எதுவுமே பயனளிக்கவில்லை.

பபிலோனியர்கள் பாரசீயக போர் வீரர்களைப் பார்த்து நையாண்டி செய்தனர். அதாவது பாரசீயர்களே! திரும்பிச் செல்வதை விடுத்து ஏன்? அங்கே குந்திக்கொண்டிருக்கின்றீர்கள் என வார்த்தைகளாலும், சைகைகளாலும் கேலி செய்தனர். இவைகள் பாரசீயக படைத்தளபதியான சோப்பிரேஸ் மனதில் காயத்தை ஏற்படுத்தின.

சோப்பிரேஸ் பபிலோனியர்கள் கோட்டையின் வீழ்ச்சிக்குத்தான் மாத்திரமே தனிப்பொறுப்பை வகிக்கக்கூடியதான திட்டமொன்றை சிந்தித்தான். அதாவது கோட்டைக்குள் "ஊடுருவல்" ஒன்றைச்செய்வதற்கான திட்டத்தை வகுத்தான். அதற்காக தன்னை தியாகம்செய்யவும் தீர்மானித்தான்.

அவன் தனது மூக்கையும், செவிகளையும் வெட்டி நீக்கிவிட்டு, தன்னை மேலும் விகாரப்படுத்த மொட்டை அடித்துக்கொண்டான். இந்த உருமாறிய தோற்றத்தோடு மன்னன் டாரியஸ் முன்னால் வந்து நின்றான்.

மன்னன் தன் தளபதியை அவ்வாறான கோலத்தில் கண்டதும் அவர் பெரிதும் மனம் கலங்கிப்போய் யார்? உனக்கு இந்தக் கொடுமையை இழைத்தார்கள் என பெரும் கோபத்தோடு, ஆவேசக் குரலில் கேட்டான்.

சோப்பிரேஸ். மன்னனே! இது என்னுடைய வேலையே என சொல்லி அடுத்து தன் "ஊடுருவல்" நோக்கத்தை, திட்டத்தை மன்னனுக்கு விபரித்தான். அதாவது மன்னன் டாரியஸுக்கும் தனக்கும் ஏற்பட்ட முரண்பாட்டால் மன்னனால் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையே இது என்று சொல்லி பபிலோனியர்களிடம் சரணடைகிறேன் என்றான்.

மேலும் சோப்பிரேஸ் தான் சரணடைந்த பத்தாவது நாளில் தங்களிடமுள்ள ஆற்றல்கள் குறைந்த ஆயிரம் போர்வீரர்களை பபிலோனியர் கோட்டை "செமிரமிஸ்" நுழைவாயிலிற்கு முன்பாக நிறுத்துங்கள்.

இதன் பின்னர் ஏழாவது நாளில் "நினெவைன்ஸ்" நுழைவாயில் முன்னால் மீண்டும் இரண்டாயிரம் போர்வீரர்களை நிறுத்துங்கள்.

அந்த ஏழாவது நாள் முடிந்ததும் இருபது நாட்களின் பின்னர் "சல்டீன்" நுழைவாயிலில் நாலாயிரம் போர்வீரர்களை விடுங்கள்.

இந்த நாட்களுக்குப் பிற்பாடு இருபதாம் நாள்முடிய பாரசீயக அனைத்து போர் வீரர்களையும் பபிலோனியர் கோட்டை மதில் முழுவதையும் சுற்றித்தாக்க உத்தரவிடுங்கள். என்றான்.

> **பகைவர்களின் ஆபத்துமிக்க "ஊடுருவல்" முயற்சிகளை நிர்மூலமாக்க, தமிழர்கள் தமிழ்த்தேசிய பக்தியோடு, தங்களை சுற்றியிருக்கும் ஐந்து உறவு வட்டத்தினுள் புதிதாக உறவுகொள்பவர்கள் விடயத்திலும், தங்களுடன் வலிந்து நட்புக்கொள்ள முயல்பவர்கள் விடயத்திலும் விழிப்பாக இருக்கவேண்டும்.**

இப்படியாக சோப்பிரேஸ் தன் நோக்கத்தை, திட்டங்களை மன்னனுக்கு விபரித்த பிற்பாடு பபிலோனியர்களிடம் சரணடைந்தான்.

பாரசீயகர்களின் கௌரவத் தளபதி மூக்கு, காதுகளும் வெட்டப்பட்ட நிலையில் இரத்தம் கசிந்துகொண்டிருந்தநிலையில் தம்மிடம் வந்திருப்பதைக் கண்ட பபிலோனியர்கள் தங்கள் நண்பனாக இருப்பதற்கே வந்திருக்கின்றான் என்று அவனை முழுமையாக நம்பினர்.

பபிலோனியர்கள் தம்மிடமுள்ள படைப்பிரிவொன்றை சோப்பிரேசிடம் வழங்கி போர்க்களத்தில் இறங்கினர். அவன் பபிலோனியர்களின் படைப்பிரிவொன்றிற்கு தலைமை தாங்கி டாரியஸின் மூன்று போர் முயற்சிகளையும் முறியடித்து பபிலோனியா கோட்டையை காப்பாற்றினான்.

பபிலோனியர்கள் தங்களை காத்ததற்காகவும் சோப்பிரேசின் வீரத்திற்காகவும் அவர்களின் படைகள் அனைத்தினதும் தளபதியாகவும் கோட்டை மதிற்சுவர்களின் காவலர் தலைவராகவும் அவரை ஆக்கினர்.

இருபதாம் நாள்முடிய மன்னன் டாரியஸ் தன் அனைத்துப் போர் வீரர்களையும் ஒன்றுதிரட்டி பபிலோனிய கோட்டையைச் சுற்றித்தாக்கினான். போர் கடுமையாக நடந்து கொண்டிருக்கும்போது டாரியஸின் போர்வீரர்கள் கோட்டை கதவுகளைதிறந்து உள்ளே நுழைந்தபோதுதான் பபிலோனியர்கள் ஏமாந்து தோற்றுப் போனார்கள். பாரசீயர்களிடம் பபிலோனியா கோட்டை வீழ்ச்சியுற்றது.

மன்னன் டாரியஸின் பெரும் படைப் பலத்தால் வெற்றிகொள்ள முடியாமல் இருந்த பபிலோனியக் கோட்டையை சோப்பிரேசின் "ஊடுருவல்" துணையோடு வெற்றிகொள்ளப் பட்டது.

மேலே எடுத்துச் சொல்லப்பட்டுள்ள இரு உண்மை "ஊடுருவல்" சம்பவங்களும் ஊடுருவலின் வலிமையையும் பலத்தையும் இடித்துரைத்துள்ளது.

இதுபோன்ற "ஊடுருவல்"களை பகை உளவுப் பிரிவினர் தமிழர் தாயகப் பகுதிகளுக்குள்ளும்,உள்நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள்ளும் அதிஉயர் இரகசிய வட்டத்தினருக்குள்ளும் மேற்கொள்ளவே முயற்சிக்கின்றன. அதற்கான காய்களையும் நகர்த்தி வருகின்றன.

இந்த உளவு முயற்சியின் இலக்கு என்னவெனில் தமிழர்களின் படை பலத்தை உடைத்து, சிதைவுபடுத்தி பலவீனமாக்குவதாகவே இருக்கின்றது.

இந்த இலக்கை எட்ட பகை உளவுப் பிரிவினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விசுவாசமாக உழைக்கக் கூடியவர்களாகத் தமது உளவாளிகளை தயார்ப்படுத்தி ஆங்காங்கே நாட்டுகின்றனர். அவ்வாறு நாட்டப்படுகின்ற உளவாளிகள் ஆழமாக வேரூன்றி நீண்டகால அடிப்படையில் உளவுப்பணிகளை செய்கின்றனர்.

இவ்வாறான பகைவர்களின் ஆபத்துமிக்க "ஊடுருவல்" முயற்சிகளை நிர்மூலமாக்க, தமிழர்கள் தமிழ்த்தேசிய பக்தியோடு, தங்களை சுற்றியிருக்கும் ஐந்து உறவு வட்டத்தினுள் புதிதாக உறவுகொள்பவர்கள் விடயத்திலும், தங்களுடன் வலிந்து நட்புக்கொள்ளமுயல்பவர்கள் விடயத்திலும் விழிப்பாக இருக்கவேண்டும்.

அவ்வாறாக தமிழர்கள் விழிப்போடு இல்லாது இருப்பின் அது தங்களைச் சுற்றியிருக்கும் உளவு வட்டத்தினரையும் பகைவர்களையும் அறியாமல் இருப்பதாகவே இருக்கும். அப்படி அறியாமல் இருந்தால் தமிழர்களால் தமிழர்களே பெரும் பாதிப்புக்குள்ளாகவேண்டியே ஏற்படும்.

ஆகவே தமிழர்கள் பகைவர்களையும் தங்களைச் சுற்றியிருக்கும் உறவு வட்டத்தினரையும் அறிந்துகொள்ளும்போதே தமிழர் கோட்டைக்குள் பகைவர்கள் "ஊடுருவல்"களை தடுத்திடமுடியும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 05 . 11 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## விழிப்புடன் இருப்போம்..!

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன யாழ்ப்பாணத்திற்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுதிரும்பியுள்ளார்.

ஆளுநர் விரும்பியதற்கு மாறாக இந்த விஜயம் ஒரு இரகசிய விஜயமாக அமைவதற்கு காரணம் அவரின் வருகையையொட்டி யாழ்ப்பாணத்தில் பொது அமைப்புக்கள் காட்டியபகிரங்க எதிர்ப்புகளும் கண்டனங்களுமே ஆகும்.

இதே நேரம் ஆளுநர் அசோக ஜெயவர்த்தன யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம் தொடர்பாக ஒரு நாடித்துடிப்பை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட இலக்கிய விழாவின் ஊடாக முன்னதாக மேற்கொண்டிருந்தார்.

இந்த பின்னணியில் நடந்து முடிந்த இலக்கிய விழா அவருக்கு அளித்த சிறுதெம்பை அடுத்து ஆளுநர் விஜயம் முடக்கிவிடப்பட்டது.

இங்கே தான் தமிழ் மக்களின் எண்ணங்களை நாடிப்பிடித்தறிய முடியாத ஒரு நிலையில் அரசும் அரச பிரதிநிதிகளும் திணறிவருகின்றமை வெளிப்பட்டு நிற்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான ஆளுநரைக் கொண்டு அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரசின் அபிவிருத்தி பணிகள் ஒரு நகர்வு போக்கில் இருப்பதாக காட்ட முயல்வதோடு மாகாண சபையும் உயிர்த்துடிப்போடும் இருப்பது போல காட்ட பலமானமுயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னரும் திருகோணமலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கென ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பு விடுக்கப்படடடிருந்தமையும் அதனை தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்திருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது.

இப்போது யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை ஆளுநர் மேற்கொண்டு சென்றுள்ளார். இவர் வவுனியாவுக்கும் ஒரு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கென கொண்டுவரப்பட்ட மாகாண சபையையும் தமிழ் மக்கள் எப்போதோ நிராகரித்துவிட்டனர்.

வடக்கு கிழக்குக்காக நிறுவப்பட்ட இந்த மாகாண சபையானது தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அப்பால் அவர்களின் விருப்பங்களைப் புறக்கணித்து தமிழ் மக்களின் அரசியல் வாழ்வுக்கு சாவு மணியடிக்க நிறுவப்பட்ட ஒரு அமைப்பாகவே தமிழ் மக்கள் இன்று வரை பார்க்கின்றனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தால் பிரசவிக்கப்பட்ட இந்த மாகாண சபையோ அதன் பிரதிநிதிகளையோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

உறுப்படியான அதிகாரங்கள் எதனையும் கொண்டிராமல் அரச தலைவரின் கட்டளைகளை நிறைவேற்றுகின்ற ஒரு அதிகாரியாக செயற்படும் வடக்கு கிழக்கு ஆளுநர் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் அக்கறையுள்ளவராகவும் அது தொடர்பாக செயற்படுவது போன்று காட்ட் முயல்வது மக்களை மிகவும் சீண்டுகின்ற காரியமாகவே பார்க்கப்படும்.

ஒரு ஏமாற்று நாடகத்தை இன்று இயக்குகின்ற ஒரு இயக்குநராக இருக்கும் அசோக ஜெயவர்த்தன போன்ற முன்னாள் இராணுவ அதிகாரிகள் தமது பல தோல்விகளிலிருந்து இன்னமும் தான் பாடங்களைக் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை.

ஆனால் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு பிரதேசம் என மார்தட்டும் ஒரு மாவட்டத்துக்கு கேவலமானமுறையில் ஒளித்துவந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருக்கிறார்கள் என்றால் அது தமிழ்மக்கள் தமது அரசியல் அபிலாசைகள் தொடர்பாக விழிப்பாக இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

## நாடாளுமன்ற கொண்டாட்டமும் மறைந்திருக்கும் சூட்சுமங்களும்



இந்து கலாசார அமைச்சினால் இம்முறை வாணிவிழா நிகழ்வுகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளன. குறிப்பிடும்படியான முக்கிய நிகழ்வாக நாடாளுமன்றத்தில் வாணி விழாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இது இலங்கை வரலாற்றில் பெருமைப்படவேண்டிய விடயம் என சிலர் கூறிக்கொள்வதையும் அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

இந்த சாதனை மூலம் மக்களுக்கு என்ன செய்தியை தெரிவிக்க முற்படுகிறார்கள் என்பது தான் புரியாத புதிராகவுள்ளது. பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் பிறமதங்களையும் பௌத்தத்திற்கு சமனாக ஏற்றுக்கொண்டு விட்டார்களா? இலங்கை ஒரு மதசார்பற்ற நாடு என்று கூறிக்கொள்வதை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டதன் வெளிப்பாடுதான் நாடாளுமன்ற வாணி விழாக்கொண்டாட்டமா? என்றெல்லாம் எவரும் குழம்பத்தேவையில்லை. அரசின் கொள்கையிலோ, அணுகுமுறையிலோ எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

பௌத்த மதத்தை பேணிக்காக்க வேண்டும் என்பது சிங்கள ஆட்சியாளருக்கு கடமையாக வரிக்கப்பட்டுள்ளது. இலங்கை முழுவதும் பௌத்த சிங்களவருக்கே சொந்தமானது. பௌத்த மதத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்துவதன் மூலம் நாட்டில் இன சுத்திகரிப்பொன்றை மேற்கொள்ள முடியுமென்பதே இனவாதிகளின் நீண்டகால திட்டமாகவுள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் மாற்றுக் கருத்தின்றி ஒரேவகையான பிரதிபலிப்பையே வெளிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் நடக்கின்ற தேசிய விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் பௌத்த மதத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அரசின் மீது கண்டனங்கள் எதுவும் வந்துவிடக்கூடாது என்பதற்காக சர்வமத சடங்குகளை நடத்தியும் மத தலைவர்களை அழைத்து கௌரவிப்பதையும் ஒரு வழக்கமாகக் கெண்டிருக்கிறார்கள். பௌத்தம் அல்லாத மதங்களையோ அல்லது சமயவிடயங்களையோ ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. மத குருமார்களையும் மதிப்பது இல்லை. அவர்களின் பேச்சைக் கூட பொருட்படுத்துவதில்லை.

இந்த வகையில் பௌத்த மதத்தின் மேலாதிக்கம் நாட்டை வழிநடத்தும் அளவுக்கு தனது செயற்பாட்டுப் புலத்தை விஸ்தரித்துள்ளது. பௌத்த பீடாதிபதிகளின் ஆலோசனைகளையும் வேண்டுகோள்களையும் புறந்தள்ளிவிட்டு எவரும் இதுவரை ஆட்சிசெய்ததில்லை. அந்த அளவுக்கு அரசியலில் பௌத்த மதத்தின் ஆதிக்கம் உள்ளது.

பௌத்த மதத்தின் மேலாதிக்கம் ஏனைய மதங்களைப் புறந்தள்ளுவதுடன் நின்றுவிடாது ஏனைய மத சமூக மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் வணக்க தலங்களை செயலிழக்கச் செய்யவும் தவறவில்லை. இதற்கு இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு அதே இடத்தில் அல்லது அவ் இடங்களுக்கு மிக அருகில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளமைக்கு எத்தனையோ உதாரணங்களைக்கூறலாம். வடக்கு கிழக்கின் பல பகுதிகளில் இந்த நிலைமை தொடர்கிறது.

மத மேலாதிக்கத்தினூடாக ஏனைய மதங்களை பின்பற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு துணை நிற்கும் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் வாணி விழாவை நடத்தியதன் மூலம் எதை சாதிக்க முயல்கிறது? அல்லது இப்படி ஒரு விழாவை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதா எனவும் சிந்திக்க வேண்டியுள்ளது.

தற்போதைய உலக ஒழுங்கில் மத அடிப்படையிலான சட்டங்களும் அரசியலமைப்புக்களும் உற்று நோக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் அரசியலில் மதம் எந்த அளவுக்கு தாக்கம் செலுத்துகின்றது. என்பதை உலக நாடுகள் கூர்ந்து கவனிக்கின்றன. இந்த வகையில் சிறுபான்மை சமயங்கள் மீதான அடக்குமுறைகளும் புறக்கணிப்புகளும் கவனத்துக்கு உள்ளாகின்றது. மத அடிப்படைவாதம் என்ற விடயம் நுட்பமாக பரிசீலிக்கப்படுவது இன்றைய நடைமுறையாகி விட்டது.

இந்த வகையில் இலங்கையில் நடக்கின்ற மத வன்முறைகளும் அடக்குமுறைகளும் செய்திகளாக வெளிஉலகிற்கு சென்றுகொண்டிருக்கின்றன. இவ் விடயங்களை அரசாங்கம் எப்படி கையாளுகிறது என்பதும் வெளிவந்து கொண்டுதான் உள்ளது.

பௌத்த மதத்தவர்களால் ஏனைய சிறுபான்மை மதத்தவர்கள் மீதானதாக்குதல்களும் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு கண்டனங்களை வாங்கிக்கொடுத்துள்ளன. நாட்டிற்கு இதனால் அவப்பெயர் ஏற்பட்டது. இதன் உச்சக்கட்டமாக மதமாற்றம் தடைச்சட்டமூல விவகாரம் இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையை ஒரு மதசார்பற்ற நாடு என காட்டவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காக சர் வதேச மட்டத்தில் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. பெரிய பிரசார களமாக அமையக்கூடிய விழாக்களை நடத்து வதுடன் அதில் முக்கிய அமைச்சர்கள் கலந்து கொள்வதினூடாக தமது பிரசார இலக்கை அடையத் திட்டமிட்டுள்ளனர். இதன் ஒரு வெளிப்பாடு தான் நாடாளுமன்றத்தில் வாணிவிழா.

இதே நேரம் அரசாங்கத்தின் இருப்பிற்கும் பிரசார வேலைகளுக்கும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த சிலர் உதவி புரிந்துவருகின்றனர். இவர்களை பிரபலியப்படுத்தவும் திருப்திப்படுத்தவும் அரசாங்கம் விரும்புகிறது. இந்த நபர்களின் செயற்பாடுகள் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சிக்கு அழுத்தம் ஏற்படுவது குறைக்கப்படுகிறது. இதனால் அரசின் சில திட்டங்கள் இலகுவாக நிறைவேறுகின்றது. இந்த வகையில் தான் கடந்த ஆட்சியின் போது தீபாவளிக் கொண்டாட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டதையும் தற்போது நாடாளுமன்றில் வாணிவிழா கொண்டாடப்பட்டதையும் நாம் பார்க்கவேண்டும்.

நாட்டின் சிறுபான்மை மதங்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்படவேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தால் முதலில் ஏனைய மதங்களின் வழிபாட்டு இடங்களையும் மக்களையும் ஆக்கிரமிப்பதை நிறுத்தவேண்டும்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

சபேசன்

# சனநாயக உரிமை



சனாதிபதியின் பதவிக் காலம் எப்போது முடிவடைகிறது?என்ற சர்ச்சை கடந்த வருடம் எழுந்து அடங்கியது. பின்னர் மீண்டும் இப்பொழுது எழுந்திருக்கிறது.1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தெரிவு செய்யப்பட்டு பதவிஏற்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக் காலம் சிறிலங்காவின் அரசியலமைப்பின்படி 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்குவர வேண்டும். இதிலென்ன சர்ச்சை இருக்கிறது என்ற கேள்வி எழுந்தால், இதற்கெல்லாம் சிறிலங்காவின் ''சனநாயகத்தில்'' இடமுண்டு என்றே பதிலளிக்க வேண்டும்.

1994ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற சனா திபதித் தேர்தலின் மூலம் பதவி யேற்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முதலாவது பதவிக் காலம் 2000 ஆம் ஆண்டு. இறுதியில் முடிவு பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் ஒரு வருடம் முன்னதாக இரண்டாவது சனாதிபதித் தேர்தலை 1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் நடத்தி விட்டார். எனவே இரண்டாவது பதவிக்காலத்தின் போது முதலாவது பதவிக்காலத்தில் அவர் இழந்த ஒருவருடத்தையும் சேர்த்து ஏழுவருடங்களாக அவர் பதவியிலிருக்க முயல்கிறார் .இதற்கு ஏற்றாற்போல 1999 டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலின் போது வெற்றி பெற்று கண்ணீர் வடித்தவாறு பதவியேற்ற பகிரங்கப் பதவியேற்பு வைபவத்துக்குப்பின் 2000ஆம் ஆண்டில் இரகசியமாக ஒரு பதவியேற்பு வைபவம் நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே அரசியலமைப்புரீதியாகக்கூட அவர் 2006 ஆம் ஆண்டு இறுதிவரை சனாதிபதியாக இருக்கத்தகுதி வாய்ந்தவர் என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான மங்கள சமரவீரவின் கருத்து. அவர் இப்பொழுது ஏன் அதனைக்கூற வேண்டியேற்றபட்டது என்றால்,அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தத்தில் ஈடுபட வேண்டியுள்ள ஐக்கிய தேசியக்கட்சி,அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்போது?என்ற ஐயம் கொண்டதே அதற்குக் காரணமாகும்.

இப்பொழுது அரசாங்கம் 2006இன் இறுதிவரை சனாதிபதி பதவியிலிருப்பார் என அறிவித்து விட்டது. ஆனால், விடமாட்டோம் என்கின்றன் ஐ.தே.கயினா. இங்கு அரசியலமைப்புரீதியாகவோ அல்லது தார்மீக அடிப்படையிலோ எது சரியானது என ஆராய்வது பயனற்ற விடயம்.அதேவேளை இவ்விவகாரத்தை ஐ.தே.க உயர் நீதி மன்றத்துக்கு எடுத்துச் சொல்லப் போவதாகக் கூற வில்லை. மக்களிடம் எடுத்துச் சொல்லப்போவ தாகவே கூறுகிறது. எனவே மக்களின் தார்மீக ரீதியான பலத்தையே ஐ.தே.கவும் நம்புகிறது. எனினும் அதனையெல்லாம் ஆட்சியாளர்கள் பொருட்படுத்துவார்கள் என நம்பிவிட முடியாது. ஏனெனில் இவ்வாறான "நவீன சனநாயகச்'' செயற் பாடுகள் எல்லாம் சிறிலங்காவில் நடந்தேறியுள்ளன.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று பதவியேற்ற தற்பேதய சனாதிபதியின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க 1972 இல் புதிய அரசியலமைப்பின் மூலம் தேசிய அரசுப்பேரவையை (நாடாளுமன்றத்துக்குப்பதிலாக) உருவாக்கினார். அதன்பதவிக் காலம் 5 ஆண்டுகள் எனவும் நிர்ணயித்தார். 1970இல் நடைபெற்ற தேர்தலின்போது அவர் வெற்றி பெற்றதால் அவர் 5 ஆண்டுகளில் அதாவது 1975ஆம் ஆண்டில் பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் அவர் புதிய அரசியல் யாப்புக்கமையதான் 1972 இலிருந்து ஐந்து ஆண்டுகள் பதவிவகிக்கமுடியும் எனக்கூறி 1977 ஆம் ஆண்டு வரை 2 ஆண்டு காலம் கூடுதலாகப் பதவியிலிருந்தார். அவ்வேளையில் அதாவது 1975 ஆம் ஆண்டளவில் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு இருந்த அரசியல் செல்வாக்கு - மக்கள் ஆதரவு-பெருமளவில் சரிந்திருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அரசியல் குள்ளநரி என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால்கூட அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடமுடியவில்லை. இதேவேளை இவ்வாறானதொரு செயலை ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1982 ஆம் ஆண்டில் மேற்கொண்டார். 1977 ஆம் ஆண்டு ஐந்தில் நான்குபெரும்பான்மையுடன் பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன அந்த ஐந்தில் நான்கு பெரும்பான்மையை தனது பாதவிக்காலம் முழுவதும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்துதக்கவைத்துக்கொள்ளும் நோக்குடன் சர்வசன வாக்கெடுப்பை நடத்தினார். அதாவது 1977 இல் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றம் தொடர்ந்து நீடிப்பாதா? இல்லையா?என்பதை தீர்மானிப்பதற்கு சனநாயக ரீதியாக கருத்துக்கணிப்பு நடத்துவதாகக் கூறி 50 வீதத்துக்கு சற்று அதிகமான வாக்குகளை பெற்றதன் மூலம் நாடாளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பெரும்பான்மையை தக்கவைத்துக்கொண்டார். ஆனால், அன்றைய விகிதாசார தேர்தல் முறைமூலம் நாடாளுமன்றத்தேர்தல் நடைபெற்றிருக்குமாயின் அறுதிப் பெரும்பான்மை பெறுவதே அவருக்குச் சிரமமானதாக இருந்திருக்கக்கூடும். இதனைவிடவும் பல்வேறு "சனநாயக" வழிமுறைகள் கையாளப்பட்டிருக்கின்றமையை சிறிலங்காவின் வரலாற்றில் ஆங்காங்கே காணலாம்.

..வே சந்திரிகாவின் பதவிக் ..ம் தற்போதுள்ள நிலை ..குமாயின் 2006 இறுதிவரை தொடரவாய்ப்புகள் நிறையவே உண்டு.

அவர் அவ்வாறுபதவியைத்தொடர்ந்து இந்த அரசியலமைப்பும் தொடருமாயின் ஒரு ''சிறந்த'' முன்னுதாரணத்தை விட்டுச்செல்வதாகக் கருதலாம்.

அதாவது அடுத்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டும் ஒருவர் தனது செல்வாக்குச் சரியும் முன் அடுத்த சனாதிபதித் தேர்தலையும் நடத்தி விட்டுத்தொடர்ந்து 12 ஆண்டு காலம் பதவியிலிருக்கும் வாய்ப்பு ஏற்படலாம். இதனையெல்லாம் மக்களின் சனநாயக உரிமை என்று கூடஅவர் கூறலாம்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# திருகோணமலையில் படையினரின் நாடகம்

திருகோணமலைத் துறைமுகத்தைச்சுற்றி விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்துவருவதாக தொடர்ச்சியாக படைத்தரப்பால் குற்றம் சுமத்தப்பட்டுவந்த பின்னணியில் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை பாலம் பட்டாறில் விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான முகாம் ஒன்றை கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் தீமூட்டி எரித்ததாக படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

அத்தோடு அந்த முகாமிலிருந்த இராணுவ உபகரணங்கள் சிலவும் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தனர். இந்த உபகரணங்களாக கைக்குண்டுகளும் சமையல் உபகரணங்களும், உணவுப் பொருட்களும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதில் முக்கியமானது படைத்தரப்பினர் திருகோணமலை தொடர்பாக புலிகள் மீது தொடர்ச்சியாக சுமத்தி வந்த குற்றச்சாட்டை ஏதேனும் சாட்சியத்தோடு நிரூபிப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்று தோன்றுகிறது.

அத்தோடு திருகோணமலை துறைமுகத்தை சூழ புலிகள் முகாம் அமைத்துவருகின்றனர். என குற்றம் சுமத்தி வந்ததோடு இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒரு அறிக்கையை அரசு பெற்றுக் கொள்ளுமளவுக்கு நிலைமையைத்தீவிரப்படுத்துவதில் படைத்தரப்பும் அரசும் முழுமூச்சோடு செயற்பட்டது.

இந்த நிலையில் புலிகளுக்கு சொந்தமல்லாத ஒரு முகாமை புலிகளின் முகாமாக காட்டி தமது குற்றச்சாட்டுக்கு வலுசேர்ப்பதில் படைத்தரப்பு முன்னிற்கிறது.

ஆனால் படைத்தரப்பால் தீமூட்டி அழிக்கப்பட்ட முகாம் அமைந்திருக்கும் பிரதேசம் படையினரின் முக்கிய இராணுவ முகாம்கள் அமைந்திருக்கும் ஒரு பகுதியாகும். இத்தகையதொரு இடத்தில் புலிகள் இராணுவமுகாமை அமைத்து நிலைகொள்ளவேண்டிய தேவையோ தடயங்களை விடவேண்டிய அவசியமோ இந்த புரிந்துணர்வுகாலத்தில் இல்லை.

அத்துடன் படையினரோ அன்றி படையினரின் கைக்கூலிகளாக படைத்தரப்பால் பயன்படுத்தப்பட்டுவரும் குழுவினதுவோ தங்குமிடம் ஒன்றை படைத்தரப்பு புலிகள் மீது ஒரு அவதூறை ஏற்படுத்துவதற்கான ஒரு சாட்சிப்பொருளாக பயன்படுத்தினரா என்கிற சந்தேகம் ஏற்படுகிறது.

இந்த நிலையில் படையினரோ அன்றி படைத்தரப்பின் கைக்கூலிகளோ காட்டில் ஒரு முகாம் அமைத்து இரகசியமாக செயற்படுவதானது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை திருகோணமலைக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன் கூடியதாக அமைக்கப்பட்டிருந்த ஒரு முகமா? எனசிந்திக்கவேண்டி யுள்ளது.

எது எப்படியோ திருகோணமலையில் பாலம் பட்டாறில் கடற்படையினர் கண்காணிப்புக் குழுவினரை அழைத்துச்சென்று அழித்த முகாம் பகுதிக்கு புலிகளை ஏன் அழைத்துச் செல்லவில்லை.

அல்லது அந்த முகாம் தொடர்பாக அந்த முகாம் பகுதிக் கடற்படையினரும் ..ர்காணிப்புக் குழுவினரும் செல்லும் போதாவது அறிவிக்கப்படாதது ஏன்?

உண்மைக்கு மாறான ஒரு செயலை புலிகளுக்கு சம்பந்தமில்லாத ஒரு முகாமை புலிகளோடு தொடர்புபடுத்த முயுல்வதோடு புலிகளுக்கு எதிராக ஒரு பொய்ப்பிரசாரத்தையும், சர்வதேச ரீதியில் புலிகள் இராணுவ ரீதியிலான ஒரு முனைப்பின் மீது நாட்டம் கொண்டவர்கள் என்ற தோற்றப்பாட்டை காட்ட முயல்வதானது. அரசின் திரைமறைவில் மேற்கொள்ளும் சமாதானத்துக்கு விரோதமான செயற்பாடுகளை உலகின் கண்களிலிருந்து மறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சதியாகவே நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன் புலிகளுக்கெதிராக பிரசாரங்களை தீவிரப்படுத்தியிருந்த அரசும் படைத்தரப்பும் இப்பொழுது இந்த வதந்திகளுக்கு பொய்யான சாட்சியங்களை உருவாக்கவும் முயல்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

> *உண்மைக்கு மாறான ஒரு செயலை புலிகளுக்கு சம்பந்தமில்லாத ஒரு முகாமை புலிகளோடு தொடர்பு படுத்த முயல்வதோடு புலிகளுக்கு எதிராக ஒரு பொய்ப்பிரசாரத்தையும், சர்வதேச ரீதியில் புலிகள் இராணுவ ரீதியிலான ஒரு முனைப்பின் மீது நாட்டம் கொண்டவர்கள் என்ற தோற்றப்பாட்டை காட்ட முயல்வ தானது. அரசின் திரைமறைவில் மேற்கொள்ளும் சமாதானத்துக்கு விரோதமான செயற்பாடுகளை உலகின் கண்களிலிருந்து மறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சதியாகவே நோக்க வேண்டியுள்ளது.*

**வேறினி**

# கல்லுண்டாய் பதினாறு வீட்டுத்திட்டம் புனரமைத்துக் கொடுக்கப்படுமா...?

1979 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கல்லுண்டாய் வெளியில் பதினாறு வீட்டுத் திட்டம் அன்றைய அரசியல்



செல்வராஜா-ரமேஸ்

தலைவரான ஆர்-பிரேமதாஸா வினால் அமைத்துக்கொடுக் கப்பட்டது. வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட ஜே-136நவாலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள இக்குடியேற்றத் திட்டக் கிராமமானது மிகவும் வறுமை கோட்டிற்குட்பட்ட நவாலி, மானிப்பாய், பகுதி களில் வாழ்ந்த மக்களிற்கா கவே உருவாக்கப்பட்டது. அவர்களிடமே வீடுகளும் கையளிக்கப்பட்டன.

களினால் தமது வாழ்விடங் களையும், உடமைகளையும், சொத்துக்களையும் இழந் துள்ள ஒவ்வொரு மக்களிற் கும் உரிய இழப்பீடுகளை

வழங்கி அவர்களிற்கான கௌரவத்தையும், உரிய வாழ்க்கையையும் உரிய வர்கள் உரிய காலங்களில் வழங்க வேண்டும்.

கல்லுண்டாய் நரசிங்க வைரவர் கோவிலை அண் மித்தான இக்குடியேற்றத் திட்டத்திற்கு முன்பாக முன்னாள் இந்துக்கலாசார அமைச்சரான மகேஸ்வரன் இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு திருவாடு துறை ஆதீனம்

என்பதை விட்டு விட்டு கல் லுண்டாய் நரசிங்க வைரவர் மாதிரிக் கிராமமென பதினாறு வீட்டுத்திட்டத்திலுள்ள வீடு களைப் புனரமைத்து உரிய வர்களிடம் ஒப்படைத்து விட்டு மேலதிகமாக வீடுகள் தேவைப் பட்டிருந்தால் இவ் மாதிரிக் கிராமத்திலேயே தனது புதிய வீட்டுத் திட்டத்தையும் ஆரம் பித்திருக்கலாம்.முன்னாள் அமைச்சரிற்கு கல்லுண்டாய் பதினாறு வீட்டுத்திட்டம் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

நவாலி தெற்கில் கடந்த பத்து வருடங்களாக சமூக, சமய, பொதுப் பணி களை மேற்கொண்டு வரும் ஹேமலதா- செல்வராசா குழந்தைகள் ஞாபகார்த்த நிதியத் தலைவர் (H.S.C.M.F) செல்வராஜா-ரமேஸ் இக் குடியேற்றத்திட்ட மக்களுடன் நீண்ட காலமாக தொடர் புடையவர் என்றவகையில் இக் குடியேற்றத் திட்டம் தொடர்பாக எம்முடன் சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

நவாலி தெற்கிலுள்ள கல் லுண்டாய்க்கிராமம் அழி வடைந்து இன்றைக்கு பத்து வருடங்களாகியும் அதனை புனரமைத்து உரியவர்களிடம்

நரசிங்க வைரவர் மாதிரிக் கிராமமாக இதனை மாற்ற வேண்டும். இக்கிராமத்திற்கு அடிப்படையான சனசமூக நிலையம், கிராமஅபிவிருத் திச்சங்கம், சிறுவர்பாட சாலை, உபதபாற்கந்தோர், சந்தை, விளையாட்டு வசதிகள். என அமைப்பு ரீதியாக இவற்றை ஏற்படுத்த அரசஅதிகாரிகள், பொறுப் பான அமைப்புக்கள் முன்வர வேண்டும். ஒரு வரலாற்றை கொண்ட பதினாறுவீட்டுத் திட்டம் இன்று மரம் செடி களால் மறைக்கப்பட்டு வரு கின்றது. என தனது கருத் துக்களை நிறைவு செய்யும் செல்வராஜா- ரமேஸ் மானிப்பாய் பிரதேசசபை

இராணுவ தாக்குதல் களினால் சேதத்திற்குள்ளாகிய கிராமத்திற்கு இன்றைய போர் ஓய்ந்த காலத்திலாவது போய் வர இராணுவத்தினர் தடை விதித்து வருகின்றனர். கல்லுண்டாய் நரசிங்க வைரவர் கோவிலுக்கு முன்பாக கடந்த பல வருடங்களாக இராணுவ முகாமும் காவலரண்களும் உள்ளன. தமது பாதுகாப்பு கவசங்களாக பொது மக்களைப் பாவிக்கும் இராணு வத்தினர். இவர்களை வீடு களைப்பார்ப்பதற்காவது அனுமதிக்கலாம் தானே!

சில வேளை தாம் எடுத்தவற்றையும் அழித்த வற்றையும்திருப்பிக் கொடுத்து



விவசாயத்தையே தமது ஜீவனோபாய தொழி லாகக் கொண்ட இக் கல்லுண் டாய் கிராம மக்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து அகதிகள்



என்ற போர்வையில் சிதறுண்டு நகரின் பல பாகங்களில் உறவினர் நண்பர்களது வீடு களிலும் நலன்புரி நிலையங் களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களது சொத்து களும் உடமைகளும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாக் கப்படல் வேண்டும். நேரடி அல்லது மறைமுகமான தாக்கு தல்களிற்கும், இராணுவ இலக்குகளிற்கு பாதுகாப்புக் கவசமாக உபயோகிப் பதற்கும் உட்படுத்தாமல் இடம் பெயர்ந்தோர் விட்டுச்சென்ற உடமைகளையும் சொத்துக்களை யும் உரிய முறையில் பாது காத்து உரியவர்களிடம் கையளிக்க வேண்டியது சம்பந் தப்பட்ட அதிகாரிகளின் கடமையும் பொறுப்புமாகும்.

இராணுவநடவடிக்கை

என்ற பெயரில் புதிதாக வீட்டுத்திட்டம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார். இருந்தபோதிலும் அழி வடைந்துபோயுள்ள பதினாறு வீட்டுத் திட்டத்தை புனர மைத்து அதனுடன் சில புதிய

வீடுகளையும் அமைத்துக் கொடுப்பதை விட்டு விட்டு கடற்கரையோரமாக புதிய வீட்டுத் திட்டத்தை அமைத் ததன்நோக்கமென்ன?

இந்து கலாசார அமைச்சர் தனது அமைச்சுக்கு மீள் புனரமைப்பு இல்லை. இதற்கான அமைச்சரோ.

**இரா-வின்**

அமைச்சு அதிகாரிகளோ அதனைப்பார்த்துக் கொள்வார் கள் என்று முன்னாள் அமைச்சர் கூறலாம். ஆனால் வீட்டுத் திட்டம் அமைத்த இட மும் அமைத்த காலமுமே அவரது அமைச்சு எதுவென மக்கள் மத்தியில் கேள்வியாகியது.

இந்து மாநாட்டை முன்னிட்டே இப் பணியை அவர் மேற்கொள்வாராயின் திருவாடு துறை ஆதீனம்

கையளிக்க யாரும் முன்வர வில்லை. வீட்டுத்திட்டம் இருந் ததிற்கான அடையாளத்தை இழந்து வரும் இக் கிராமம் மிக விரைவாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பல வேறு இடங்களில் உறவினர், நண்பர்களது வீடுகளிலும் நலன்புரிநிலையங்களிலும் தங்கியுள்ள இப்பகுதி மக்களை மீள்குடியேற்றத்தின் கீழ் குடியேற்ற பொது அமைப்புகள் அரச அதி காரிகள் உரிய நடவடிக்கை களை மேற் கொள்ள வேண்டும்.

அழிவடைந்த பிரதே சத்தை மீள புனரமைப்பதன் மூலம் அதன் வளர்ச்சியால் பிரதேச அபிவிருத்தியை ஏற் படுத்த முடியும். பழைய கிரா மங்களை அழிவடைய விட்டு விட்டு புதிய வீட்டுத் திட் டத்தை மிக அருகில் அமைத் தமையானது அரசியல் காரணமாக கட்சி ரீதியான செல்வாக்கைப் பெறு வதற்காக என்று சொல்ல முடியாது. ஏனெனில் 1979 ஆம் ஆண்டு வீட்டுத் திட் டத்தை அமைத்துக் கொடுத்த சனாதிபதியும் 2002 ஆம் ஆண்டு அதற்கெதிராக புதிய வீட்டுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்த முன்னாள் அமைச் சரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இந்து கலாசார அமைச்சர் இந்து ஆலயத்திற்கு அருகிலுள்ள வீட்டுத் திட்டத்தை புனரமைக்காது அதற்கெதிராக புதிய வீட்டுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்துள்ளார். கல்லுண்டாய்

உள்ளூராட்சி உதவியாளராக கடமையாற்றி வருகிறார்.

கல்லுண்டாய் கிராம மக்கள் யாழ்அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிற்கு தமது வீடு களை மீட்டுப்புனரமைத்துத் தரு மாறு வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கையெழுத்து வைத்து இரண்டு காரணங் களை முன்வைத்து மகஜர் ஒன்றை அனுப்பியுள்ள னர். இதில் இராணுவத்தினர் எம்மை குடியிருக்காது தடுத்து வருகின்றனர். வீடுகள் குண்டு வீச்சு மூலம் சேதமுற்று குடியிருக்க முடியாத நிலையில் இருக்கின்றன. இவற்றுடன் அவ்மகஜரில்

விட்டே மக்களை குடியேற்ற வேண்டும் என்ற நல் மனத்துடன் நல்ல நாளை இராணுவத்தினர் எதிர்பார்த் திருக்கின்றனரோ தெரிய வில்லை. தமது வாழ்விடங் களை இழந்து நீண்ட காலமாக அவதியுறும் மக்களிற்குரிய நிவாரண உதவிகளையும் மீள் புனரமைப்பையும் உரியவர் கள் மேற்கொள்ளவேண்டும்.

இனியும் காலத்தை கடத்தாது துரித அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு கல்லுண்டாய் பதினாறு வீட்டுத் திட்டத்தை கல்லுண்டாய் நரசிங்க வைரவர் மாதிரிக் கிராமமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்



கல்லுண்டாய் 16 வீட்டுத் திட்ட வீடுகள்

எமது வீடுகள் யாவும் நவாலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவைச்சேர்ந்த கல்லுண் டாய் பகுதியில் அமைந் துள்ளன. இவ் வீடுகள் யாவும் எமக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங் கப்பட்டதெனவும் குறிப் பிட்டுள்ளனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

கொள்ள தகுதியான அதிகாரி களும் அலுவலர்களும் முன் வரவேண்டும். இக் கிராமத்த வர்களது அவல வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைத்து சமூக வாழ்விற்கு வழிசமைக்க வேண்டும். இதற்கு இவர்கள் இன்னும் எத்தனை வருடங்கள் தான் காத்திருப்பதோ....? ●

# அரபாத்தும் பலஸ்தீனமும் பலவீனமான முன்னுதாரணமா?

நாற்றிசை நடப்பு

ஐங்கரன்

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் தலைமையும் பலஸ்தீன அதிகார சபையின் சனாதிபதியுமான யசீர்அரபாத் மருத்துவச் சிகிச்சைக்காக பிரான்ஸ் கொண்டு செல்லப்பட்டுள்ளார். பிரான்ஸ் மருத்துவக்குழுவினரும் அரபாத்தின் உயிருக்கும் ஏதும் ஆபத்து இப்போதைக்கு இல்லையென கூறியுள்ளனர். அரபாத்தின் உடல்நிலை எப்படியிருந்தாலும் அவரது போராட்ட பலம், அரசியல்பலம் என்பன ஆபத்தான நிலைக்குள்ளேயே மூழ்கடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவரது பலஸ்தீன மக்கள் நிர்க்கதியான அரசியலுக்குள் தத்தளித்துக் கொண்டிருப்பதையும், அவரது வெற்றிடம் நிரப்பப்படாததொன்றாகவே உள்ளதென்பதும் தற்போதே புலனாகிவிட்டது. எனவே அரபாத் என்ற விடுதலைப்போராட்ட வீரனின் கடந்த காலத்தையும் அவருக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் பரிசீலிப்போம்.



1929 இல் ஜெருசலத்தில் பிறந்த யசீர்அரபாத் ஒரு பொறியியலாளராவார். ஆரம்பகாலத்தில் எகிப்தின் இராணுவ பொறியியல் பிரிவில் கடமையாற்றினாலும் AL-Fatah என்ற இஸ்லாமிய சகோதர அமைப்பின் உதவியாளராக விளங்கினார். 1964 இல் ஆரம்பிக்கப்பட்ட பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உறுப்பினரான அரபாத் 1969 இல் அவ் அமைப்பின் தலைவராக விளங்கினார். 1971 இல் பலஸ்தீன விடுதலை அமைப்பின் புரட்சிப்படைப் பிரிவின் கட்டளைத்தளபதியாக விளங்கினார்.

இஸ்ரேலிய கட்டுப்பாட்டுப் பகுதி மீது கொரில்லாப் போர் முறையை பிரயோகித்த பலஸ்தீன விடுதலை அமைப்பு குண்டுத்தாக்குதல்களையும் பதுங்கியிருந்து மேற்கொள்ளும் தாக்குதல்களையும் நடாத்தியது.

இஸ்ரேலிய கட்டுப்பாட்டுப் பகுதி மீது அரபாத்தின் புரட்சிப்படை நடாத்திய தாக்குதல்களை அடுத்து அரபாத் அரபுக்கள் மத்தியிலும், உலக நாடுகள் மத்தியிலும் எழுச்சியடையும் தலைவராக மாறிவிட்டார். இஸ்ரேலின் தாக்குதல்களையும் அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடிய அரபாத் மேற்காசியாவிலுள்ள அரபுநாடுகளின் செல்வாக்கையும் ஆதரவையும் பெறும் தலைவராக விளங்கினார். கூட்டாக அரபு நாடுகளின் படைகளின் உதவியோடு பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்பை முறியடிக்க பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புரட்சிப்படை செயல்பட்டது. 1956களில் நடந்தபோரில் இஸ்ரேலியரைவிட அரபுக்களின் கை ஓங்கியிருந்தது. ஆனாலும் யூதர்கள் தமது தந்திரத்தால் அரபுப் படைகளை தோற்கடித்தனர்.

யசீர் அரபாத்தின் ஆயுதப் போராட்ட அணுகுமுறை சிறப்பாக அமைந்ததுபோல் அரசியல் ரீதியாக பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் சர்வதேசமயப்படுத்துவதில் அதிக சிரத்தை கொண்டிருந்தார். 1974இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அரபு உச்சி மாநாட்டை கூட்டியபோது பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் அழைத்திருந்தமை அரபாத்திற்கும் பலஸ்தீன விடுதலைப் போருக்கும் வெற்றியாக அமைந்திருந்தது. இதனைத தொடர்ந்து பலஸ்தீன அமைப்பு ஐ.நாவின் அங்கத்துவத்தை பெற்றிருந்தது. அதன்பின்பு ஆயுதப் போராட்டத்திற்கு நிகராக அரசியல் போராட்டமும் சர்வதேச மயப்பட்டதுடன் உலக நாடுகளின் ஆதரவும் அவ்வமைப்புக்கு கிடைத்தது.

சோவியத்யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் ஆதரவைப் பெற்றபலஸ்தீன விடுதலைப் போராட்டம் அரபாத்தின் தலைமையில் எழுச்சியடைந்தது. சோவியத்யூனியன் தனது வீட்டோ வாக்கை பலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல், மற்றும் அமெரிக்க தரப்பால் முன்வைக்கப்படும். தீர்மானங்களுக்காக பலதடவை பயன்படுத்தியது. பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் சித்தாந்த அடிப்படையில் சோஸலிஸம் சார்புடைய தென்றவாதம் காணப்பட்டது. இஸ்லாமிய அமைப்பாக இருந்த போதும் பலஸ்தீன விடுதலை இயக்கம் சோஸலிஸ சித்தாந்தத்தை கவர்ந்த அமைப்பாகவும் அத்தகைய நாடுகளின் ஒத்துழைப்பை பெறும் அமைப்பாகவும் விளங்கியது. இதனால் உலகளாவிய சோஸலிஸ ஆதரவு சக்திகளும் தலைமைகளும் அரபாத்தின் போராட்டத்திற்கு ஆதரவளித்தன. நடுநிலைமை அணி சேராமை என தம்மை அழைத்துக் கொண்ட பின்தங்கிய நாடுகளும் அரபாத்தை ஆதரித்தன. இதனால் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் வளர்ச்சியை நோக்கிய போராட்டமாக அளவீடு செய்யப்பட்டது. சர்வதேச மட்டத்தில் பிரபல்யமான போராட்டம் என்பதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த அநேக சக்திகள் PLO வை பின்பற்றத் தொடங்கின. பல அமைப்புக்கள் பயிற்சிக்காகவும் அரசியல் அனுபவத்தைப் பெறுவதற்காகவும் தமது போராளிகளை PLOவுக்கு அனுப்பி தருவித்துக் கொண்டனர். இது அரபாத்தின் தனிமனித முயற்சியாகவும் உழைப்பாகவும் இருந்தபோதும் பலஸ்தீன மக்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

ஆனால், இந்த எழுச்சிக் காலம் 1979ஆம் ஆண்டு காம்டேவிட் எனும் உடன்படிக்கையோடு நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியது. காம்டேவிட்டில் நிகழ்ந்த உடன்படிக்கை PLO வோ, அரபாத்தோ சம்பந்தப்படாதிருந்தாலும் எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமான உடன்படிக்கையாக இருந்தது. இதனை அமெரிக்கா அனுசரணையாளராக நின்று செயல்படுத்தினாலும் உடன்பாடு அரபாத்தையும், PLO என்ற அமைப்பையும் நேரடியாகத் தாக்கத்துக்குள்ளாக்கியது.

அரபாத்தின் அரசியல் உபாயத்தால் இந்த உடன்பாட்டை நிறுத்த முடியவில்லை. எகிப்த் முதல் முதலில் இஸ்ரேலை அங்கீகரித்த முதல் மேற்காசிய நாடாகிய தென்பதைவிட PLOவுக்கான அனைத்து உதவிகளையும் எகிப்து நிறுத்தியதுடன் PLOவின் தளங்களையும் பயிற்சி மையங்களையும் அகற்றுமாறு PLO வின் தலைமைக்கு பணித்தது.PLO வின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் பெரும் பின்னடைவாக எகிப்தின் நடவடிக்கை அமைந்தது. அரபுக்களின் ஐக்கியம் படிப்படியாக உடைய ஆரம்பித்தது.

PLOதனது தலைமையை லெபனான் நோக்கி நகர்த்தியது. லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலும் ஊடுருவலும் PLO வை 1982 இல் அங்கிருந்து வெளியேற்றியது. 1983 இல் துனிசியஸ் PLO தலைமையை அமைத்தது. ஜோர் தான், சிரியா என்பன போதிய ஒத்துழைப்பு வழங்காமையால் PLO பெரும் நெருக்கடியை எதிர் கொண்டது. இத்தகைய நெருக்கடி உச்சக்கட்டத்தை அடையும் போது 1989 இல் சோவியத்யூனியன் தகர்ந்தது. சோவியத்தின் உடைவு அரபாத்தை- பெரியளவில் பாதித்தது. உலகளாவிய தேசிய சுய நிர்ணயத்துக்கான போராட்டங்கள் மிக மோசமான சூழலை எதிர்கொண்டது போல்PLO பாதிப்படைந்தது. மீண்டும் ஈராக் மீதான போரை அமெரிக்கா 1991 இல் பிரகடனப்படுத்தியது. போரினால் அதிக பாதிப்பை அரபாத் சந்தித்தமைக்கு பிரதான காரணம் சதாம் ஹுசைனை அரபாத் ஆதரித்ததேயாகும். இக்காலத்தில் ஐ.நா. சபையும் அமெரிக்காவும் முன்வைத்த தீர்வுத்திட்டமாக காஸா ஜெரிக்கோ உடன்படிக்கை அமைந்தது. இது 1993 இல் செய்யப்பட்ட போதும் இதுவரை அமுலாக்கம் எதுவும் சாத்தியப்படாத நிலையில் ஆபத்தான போக்கில் அரபாத்தினதும் PLO வினதும் அரசியல் எதிர்காலம் இருப்பது மட்டுமன்றி, பலஸ்தீன மக்களது அரசியலும் அவ்வாறான தொன்றாக வேயுள்ளது.

ஏன் அரபாத்தின் ஆயுதப் போராட்ட அணுகுமுறை தோற்றுப் போனது என்பதை விரிவாக நோக்குவோம். ஏனெனில் அரபாத்தின் எழுச்சிக்காலத்தில் அரபாத் பலஸ்தீனத்தை தெளிவாக உருவாக்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டு அவர் மீதுள்ளது. அவர் எப்போதும் தனது மக்களையோ, போராட்ட சக்திகளையோ நம்பியதைவிட தனது அயல் அரபு நண்பர்களை அதிகம் நம்பினார். அதுமட்டுமல்ல, அயல் நாடுகளின் போராட்டத்தையும் அதன் தயார்ப்படுத்தலையும் ஒப்படைத்துவிட்டு, அவர்களின் தயவில் போராட்டத்தை நடாத்தினார். இதனால் போராட்டத்தின் வெளித்தோற்றம் வளர்ந்ததேயன்றி உள்ளூர போராட்டம் பலமடையவில்லை. பிரதேச அடிப்படையில் பாதுகாப்புக்கள் சாத்தியப்படவில்லை. மக்கள் போராட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதற்கான சூழல் உருவாக்கப்படவில்லை. இக்காலப்பகுதியில் வெற்றிபெற்ற அனைத்துப் போராட்டங்களிலும் மக்களின் நேரடிப் பங்குபற்றல் இருந்ததோடு தொடர்ச்சியானதும் தெளிவானதுமான போராட்டத் தளத்தை அந்தந்த மக்கள் கொண்டிருக்கின்றனர். மக்கள் அரசியல் மயப்படுத்தப்படுவதிலும் போராட்டத்தின் போக்கு தங்கியுள்ளதென்பதற்கு தெளிவான பாதகமான எடுத்துக்காட்டு பலஸ்தீன விடுதலைப் போராட்டமாகும். ஏவுகணைகளோடும் டாங்கிகளோடும், குறிபார்த்து தாக்கும் ஆயுதங்களோடும் எதிரி ஆக்கிரமிக்கும்போது கற்களோடு வீதியில் குவிந்து என்ன பயன் ஏற்படப் போகிறது. இந்த பலவீனத்திற்கு அரபாத்தும் PLO வும் தான் காரணம் என்பதை மறுக்கமுடியாது. பலமான காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற்கொள்ளும் அமைப்புகள் மக்களையும் போராட்ட சக்திகளையும், பிரதேசபலத்தையும் தக்கவைத் திருப்பதோடு சொந்த மண்ணில் தங்கியிருக்கும் போராட்டமாக மாற்றுதல் வேண்டும். அதுமட்டுமன்றி தந்திரமாகவும் அரசியல் ரீதியாகவும் போராட்டத்தை எல்லைப்படுத்தி தீர்வை காண்பதற்கு தயாராக வேண்டும். ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களை நீடித்த காலத்திற்கு முன்னெடுத்துச் செல்வதில் அதிக ஆபத்துக்கள் காத்திருக்கின்றன.

அரபாத்திடம் காணப்பட்ட பிரதான இன்னோர் பலவீனம் மிதவாதத்தை மட்டுமே நம்பியமை. தீவிரவாதத்தை முற்றாக கைவிடும் காலத்தில் மிதவாதத்தை கையில் தூக்கியதன் வாயிலாக இஸ்ரேல் - அமெரிக்க கூட்டுச்சதிக்குள் வீழ்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. சதி அரசியல் என்பதை புரிந்துகொண்டே காஸ்- ஜெரிக்கோ உடன்பாட்டில் அரபாத் கைச்சாத்திட்டார். அது மட்டுமல்ல சதி அரசியலை அவரால் உடைக்கவோ நெருக்கடிக்கு உள்ளாக் கவோ அவரால் முடியவில்லை. சதி அரசியலை முறியடித்துக் கொண்டு போராட்டத்தை வளர்க்க அவரால் முடியவில்லை.

மேலும் அரபாத் மீது இன்று முன்வைக்கப்படும் பிரதான குற்றச் சாட்டு தலைமைத்துவ வெற்றிடமாகும். ஆயுதப்போராட்ட அமைப்புகளுக்கு இயல்பாக எழும் வரலாற்றுச் சிக்கல் தலைமைத்துவமாகும். எந்த தலைமையும் சரியானதாக தெளி க பலம்பொருந்தியதாக நுவிடுவதில்லை. அதனால் ப தலைமை மீது ஆயுதப் போராட்ட தலைமைக்கும் நம்பிக்கையுமில்லை. அவ்வாறு நம்புவதும் தவறான விளைவுகளைத்தரக் கூடியதாகவே அமையும். அரபாத்தும் பதில் தலைமையை உருவாக்காது வெற்றிடமாக விட்டுள்ளார் என்பதையே சுட்டிக்காட்டுவதைவிட அரபாத் தனது தலைமைக்காலத்தில் அதற்குரிய பங்கை ஆற்றாமல் அதனை வெற்றிடமாக விட்டுள்ளதால் அவரது தலைமை வெற்றிடமாகின்றது. உலகில் பிடல் காஸ்ரே வெற்றிகரமான ஆயுதப் போராட்ட தலைவராக விளங்குகின்றார். இந்தவரிசையில் மாவோசேதுங், கில்- மூர்சுங் போன்றவர்களைக்குறிப்பிட முடியும். காலத்தை துல்லியமாக மதித்து போராட்டத்தை சரிவர நிகழ்த்தி காட்டியவர்கள். லெனின்கூட தனக்கு அடுத்த நிலையில் ஸ்டாலின் இருக்கின்றார் என்பதை நினைத்து மரணப்படுக்கையில் கண்ணீர் வடித்ததாக தெரியவருகிறது. ஸ்டாலித் உண்மையில் ரஷ்யாவுக்கு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியேயுள்ளார்.



எனவே அரபாத் என்ற தனிமனித இராணுவ அரசியல் பலத்தைவிட பலவீனங்களை அதிகம் கொண்டதாக உள்ளது. உலகில் உள்ள ஆயுதப் போராட்ட தலைமைகளும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் அரபாத்தும் பலஸ்தீனமும் ஒரு பலவீனமான முன்னுதாரணமாகும்.

# மனிதனுக்கு இயற்கை மரணம் இல்லை...?



அறிவியல் எனும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மனிதனை மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வழிசமைக்கப்போகும் நாள் தொலைவில் இல்லை.

உயிர் பறிக்கவரும் இயமனைப் பார்த்து "இன்று போய் உயிர் பறிக்க நாளைவா" என ஏமாற்றும் நிலைக்கு மனிதன் முன்னேறியுள்ளான்.

உலகமெனும் இப்புவியில் மனிதனுக்கு நிகர் மனிதனே. அவனுடைய அறிவு வளர்ச்சியால் புதுமை நிறைந்த பூவுலகாக, நவீன நாகரிக உலகாக இப்புவி மாறிவருகின்றது. மனிதனின் இரகசிய ஆயுதமே விஞ்ஞானம் எனலாம். இந்த விஞ்ஞான வளர்ச்சி மனிதனை எவ்வாறு மாற்றியுள்ளது! விரைவில் நாமெல்லாம் வேற்றுக்கிரகத்திற்கு வேலைக்குப் போகவேண்டி ஏற்பட்டாலும் வியப்பில்லை. இவ்வாறு வளர்ந்துள்ள விஞ்ஞானத்தால் இனி வரும் காலங்களில் மனிதனுக்கு இயற்கை மரணம் நிகழவாய்ப்பில்லை. இந்த நூற்றாண்டுக்குள் இதனை எட்டிவிடக்கூடிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. தகவல் ஊடகங்கள் இவ்வரிய அறிவியல் தகவல்களை நமக்குச் சொல்கின்றன.

எண்ணற்ற அறிவியல் சாதனைகளைப்புரிந்துள்ள விஞ்ஞானிகள், இன்று மரணத்தையே வெல்லும் இரகசியத்தை அறிந்து கொள்வதிலும் வெற்றி முகம் கண்டுள்ளனர். மனித உடலின் இரகசியங்கள் அனைத்தையும உள்ளடக்கிய DNA என்ற அமைப்பின் இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில் பெருமளவு முன்னேறிவிட்டனர். நாட்டு அறிவியல் அறிஞர்களின் அயராத முயற்சியால் அபாரமான அதிசய இச்செய்திவரும் தலைமுறைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இணைந்து ஹியூமன் ஜினோம் புராஜக்ட் என்ற திட்டத்தின் கீழ் கடுமையாக உழைத்து திறமையாகச் செயற்பட்டு அரிய கண்டுபிடிப்பை அறிந்துள்ளனர். இந்த அபாரமான கண்டுபிடிப்பு மூலமாக மனித உடலின் அத்தனை இரகசியங்களும் விரைவில் அம்பலம் ஆகப்போகின்றன.

ஒவ்வொருவரும் குறிப்பிட்ட நோயால் அவதிப்படுவது ஏன்? சிலர் குண்டாகவும் சிலர் ஒல்லியாகவும் இருப்பது எதனால்? சிலர் புத்திசாலியாகவும் சிலர் முட்டாளாகவும் இருப்பது ஏன்? ஒருசிலருக்கு மரணம் விரைவில் ஏற்படுவது ஏன்? சிலர் அதிக காலம் வாழ்வது எப்படி? இப்படி மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகள் எதன் அடிப்படையில் ஏன் ஏற்படுகின்றன? இதற்கான இரகசியத்தை அறிந்துகொள்ளும் ஆய்வில் விஞ்ஞானிகள் தற்போது வெற்றியின் விளிம்பில் இருக்கிறார்கள் அறிவியல் அதிசயம் நிகழப்போகின்றது. ஆம்... இனி மனிதனின் ஆயுள ஆயிரம் வருடங்கள்வரை நீண்டு போகலாம். இந்த ஆய்வு முழுமை பெறும்போது ஒருவருக்கு தோன்றும் எந்தவிதமான நோயையும் முன்கூட்டியே கண்டுபிடித்து அதை அறுவைச்சிகிச்சையின்றி, மருந்து இல்லாமல் குணப்படுத்திவிடலாம். நமது உடல் வளர்ச்சியை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும். இந்த அரிய அறிவியல் ஆராய்ச்சி மனிதனுக்கு மரணமில்லா பெருவாழ்வை வழங்கும்.

கோடிக்கணக்கான செல்களின் மொத்தத் தொகுப்புதான் நமது உடம்பு. மைக்ரோஸ்கோப் கருவிமூலம் மட்டும் இந்த நுண்ணிய செல்லைக் காணமுடியும். நமது உடலின் எந்தப் பாகத்திலிருந்தும் ஒரு செல்லை மட்டும் தனியாகப்பிரித்து எடுக்கலாம். செல் எனப்படும் மிகச்சிறிய வட்ட வடிவிலான அமைப்புகுள்தான் நமது உடலின் அனைத்து இரகசியங்களும் புதைந்துகிடக்கின்றன. ஒவ்வொரு செல்லிலும் நியூக்ளியஸ் எனப்படும் உட்கரு உள்ளது. அந்த உட்கருவில் தன் குரோமோசோம் எனப்படுபவை இருக்கின்றன. இது எக்ஸ் (X) வடிவில் இருக்கும். ஒவ்வொரு செல்லிலும் இருபத்தி மூன்று ஜோடி குரோமோசோம்கள் இருக்கும்.

அதாவது ஒரு செல்லில் 46 குரோமோ சோம்கள் இருக்கும் ஆண என்றும் பெண் என்றும் குழந்தைகள் பிறப்பது இந்தக் குரோமோசோம்களின் விளைவால்தான். கடைசி ஜோடி XY என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. ஒரு செல்லில் இருக்கும் இந்த 23 ஜோடி குரோமோசோம்களின் கடைசி ஜோடியில் உள்ள இரண்டு குரோமோசோம்களும் எக்ஸ்களாக (XX) இருந்தால் அது பெண்ணைக்குறிக்கும். ஒன்று எக்ஸ், ஒன்று வை (XY) என்று ஜோடி சேர்ந்திருந்தால் அது ஆணைக்குறிக்கும். ஆண்களைவிட பெண்கள் அதிக ஆயுளுடன் விளங்கவும் இந்தக் கடைசி ஜோடி குரோமோசோம்களே காரணமாகும். அதாவது பெண்களுக்குள்ள இர ண்டு XX களில் ஏதாவது ஒன்றில் குறை ஏற்பட்டால் மற்றொரு X அந்தத் குறையை நிவர்த்தி செய்துவிடும். ஆனால் ஆண்களில் Y- இல் குறைபாடு ஏற்பட்டால் Xஆல் ஒன்றும் செய்ய இயலாது. இதன் விளைவுதான் பொதுவாக பெண்களைவிட ஆண்களுக்கு, ஆயுள் குறைந்து காணப்படுகின்றது. மேலும், ஆண்கள் மட்டும் அதிகளவில் வழுக்கைத் தலையர்களாக விளங்குவதும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ஒவ்வொரு குரோமோசோமையும் எடுத்துப்பார்த்தால் அதில் வளைந்து சுருள்போன்ற ஒரு அமைப்பு இருப்பதைக்காணலாம். இந்த அமைப்பே 'டிஎன்ஏ' (DNA) எனப்படுகின்றது. இதில்தான் மனிதனின் உடல் இரகசியங்களுக்கு காரணகர்த்தாவான திருவாளர் ஜீன் இருக்கின்றார். ஏறத்தாழ எண்பதாயிரம் ஜீன்களில் உள்ள 320 கோடி இரகசிய குறியீடுகளில்தான் மனிதனின் உடல்வாகு, குணம், நோய் நொடி ஆயுள் உட்பட அனைத்தும் அடங்கியுள்ளன. ஜீன்களில் உள்ள இரகசிய குறியீடுகள்தான் ஒவ்வொரு செல்லுக்கும் எந்த அளவில் தாதுப்பொருட்களைச்சேர்க்க வேண்டும் என்று கட்டளையிடும் எஜமான். ஜீன்களில் கோளாறு இருந்தால் கட்டளைகள் மாறுபட்டு செல்களின் இயக்கமும் மாறுபடுகின்றது. இதனால்தான் குறிப்பிட்ட நோய்கள் உடலைத் தாக்குகின்றன. எனவே கட்டளையிடும் இரகசிய குறியீட்டைத் திருத்தி அமைத்துவிட்டால் எல்லாமே சரியாகி நோய் வராமல் தடுத்து விடலாம். இந்த இரகசிய குறியீடுகளைப் படிக்க முடியாமல் திணறிய விஞ்ஞானிகள் இன்று இதில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துவிட்டனர். மரபியல் மற்றும் மரபணுக்கோளாறு காரணமாக ஒரு மனிதனுக்கு ஆறாயிரம் வியாதிகள்வருகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது அப்பாவிற்கு நீரழிவுநோய் இருந்தால் மகனுக்கும் மகளுக்கும் அந்த நோய் வர அதிக வாய்ப்பு உண்டு. எதிர்காலத்தில் இது போன்ற மரபணுக் கோளாறு காரணமாக ஏற்படும நோய்களை முற்றிலுமாக ஒழித்து இனி யாருககும இந்நோய்கள் வராமல் செய்து விடலாம்.

ஜீன்களில் உள்ள இரகசிய குறியீடுகளில் 97 சதவீதத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டனர். இதில் 85 சதவீதம் மிகவும் துல்லியமாகக் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. மீதம் உள்ள குறியீடுகளையும் விரைவில் கண்டுபிடித்துவிடுவோம் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதுபோல, ஜீன் இரகசிய குறியீட்டைப் படிப்பதன் மூலமாக அனைத்து நோய்களையும் தடுக்கமுடியும், குணநலன்களையும் மாற்றமுடியும். முக்கியமாக ஒருவரின் ஆயுட்காலத்தை ஆயிரம் ஆண்டுகள்வரை நீடிக்கமுடியும். எதிர்பாராத விபத்துகள். இயற்கைப் பேரிடர்கள், அணு வாயுதப் போர்கள் போன்றவைகளிலிருந்து மனிதன் தப்பித்துவிட்டால் ஆயிரம் ஆண்டுகள் அமர்க்களமாக வாழலாம். முதுமை ஏற்படுவதையும் முற்றிலுமாகத் தவிர்த்துவிடலாம். எதிர்காலத்தில் மனிதன் மரணத்தை வென்றவனாக இருப்பான். மரணத்தை வெல்லும் மனிதன், மனிதனாகவே வாழ்வானா அல்லது மாக்களாகத் திரிவானா? ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் மனிதனுக்குள்ளேயே இருக்கின்றன என்பது மட்டும் உண்மை! ■




# மலேரியா நோய் பற்றி விழிப்பாக இருப்போம்

ஒருவருக்கு காய்ச்சல் ஒருநாள்விட்டு மறுநாள் வந்தால் அது மலேரியாக் காய்ச்சலாகத்தான் இருக்கவேண்டும் என்பது இன்று எல்லோருக்குமே தெரிந்த ஒரு விசயமாகிவிட்டது. ஒரு நாள்விட்டு மறுநாள் என ஒரு ஒழுங்கு முறையில் இக்காய்ச்சல் வருவதால் இதனை 'முறைக் காய்ச்சல்' எனப் பாமர மக்கள் குறிப்பிடுவார்கள்.

இக்காய்ச்சல் வரும் ஒவ்வொரு தருணத்திலும் மூன்று தனித்துவமான நிலைகளைக் கொணடிருப்பது மலேரியாவின் இன்னுமொரு முக்கியமான அம்சமாகும்.

முதல்நிலை 'குளிர் நிலை' யாகும். கைகால்கள் 'கிடுகிடு' வென உதற, பற்கள் 'கடகட' வென உராய கடும் குளிர் நடுக்கத்துடன் மலேரியாக் காய்ச்சல் ஆரம்பமாகும். இரண்டாவது நிலையாகிய 'வெப்பநிலை' யில் காய்ச்சல் அனலாகக் காயும். $103^{\circ}F$முதல் $105^{\circ}F$வரை ஏறிக்காயும். உடல் முழுவதும் எரிவதுபோன்ற உணர்வு நோயாளிக்குத் தோன்றும். இந்த முதல் இரண்டு நிலைகளும் ஒன்று முதல் ஆறு மணித்தியாலங்கள்வரை நீடிக்கலாம்.

கடைசி நிலையாகிய 'வியர்வை நிலை'யில் உடல் முழுவதும் நனைவதுபோல் வியர்வை ஆறாக ஓடும். காய்ச்சல் தணியும். உடல் ஓரளவு குணமாகியதுபோல் நோயாளிக்குத் தோன்றும். அவர் அயர்ந்து தூங்கிவிடுவார்.

மறுநாள் காய்ச்சல் இருக்காது, நோய் மாறிவிட்டது போல் நோயாளிக்குத் தோன்றலாம். ஆயினும் மூன்றாம் நாள் காய்ச்சல் மீண்டும் முன் போல் வந்துவிடும்.

காய்ச்சல் ஏறிக்காயும் நாட்களில் நோயாளிக்கு சிறுநீர் கடும் மஞ்சள் நிறத்தில் போகலாம். ஆயினும் காய்ச்சல் இல்லாத நாட்களில் சிறுநீரில் நிறம் குறைந்துவிடும். சிலருக்கு மலேரியா காய்ச்சலுடன் உதட்டு ஓரங்களில் சிறு கொப்பளங்களுடன் 'ஹேர்பீஸ் சிம்பிலெக்ஸ்' என்ற நோயும் வரலாம்.

குளோரோகுயின் (Chloroquine) என்ற மருந்தே முக்கியமாக உபயோகிக்கப்படுகிறது. முதலாம் இரண்டாம் நாட்களில் நான்கு மாத்திரைகளும் மூன்றாம் நாளில் இரண்டு மாத்திரைகளும் கொடுக்கவேண்டும். சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வயதிற்கேற்ப மருந்தின் அளவு மாறுபடும்.

நோய் மாறினாலும், சில கிருமிகள் ஈரலில் மறைந்திருந்து சில காலத்தின் பின் நோயை மீண்டும் வரச்செய்யலாம். . இதைத்தடுத்து, கிருமிகளை முற்றாக ஒழிப்பதற்கு பிரிமாகுயின (Prima-quine) என்ற மருந்தையும் சேர்த்து உபயோகிப்பது அவசியம். இம்மருந்து ஐந்து நாட்களுக்கோ, அன்றி பதினான்கு நாட்களுக்கோ தேவைக்கு ஏற்ப கொடுக்கப்படுகிறது.

முதல் நாள் வைத்தியத்துடனேயே பெரும்பாலும் காய்ச்சல் விட்டுவிடும். இதனால் பலரும் மிகுதி மாத்திரைகளை பாவிக்காமல் விட்டுவிடுகிறார்கள். இது தவறானது. மருந்துகளைப் பூரணமாக உட்கொள்ளாவிடில் மலேரியாக் காய்ச்சல் சில நாட்களுக்குள்ளேயே திரும்பவந்துவிடும்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மலேரியா அதிகம் காணப்படுகிறது. வடமராட்சி கிழக்கும் மலேரியாவிற்குப் பெயர்போன இடம்.

முன்பு கூறிய முறைக் காய்ச்சல் பிளஸ்மோடியம் வைவாஸ் (Plasmodium Vivax) என்றவகை மலேரியாக் கிருமியினாலேயே உண்டாகிறது.

பிளஸ்மோடியம் பல்சிபாரம் (P.Falciparum) என்ற வகை மலேரியாக்கிருமி முறைக் காய்ச்சலை உண்டாக்குவதில்லை. ஆயினும் மிக ஆபத்தான மூளை மலேரியா நோயை ஏற்படுத்தலாம்.

மலேரியாக் காய்ச்சல் அனோபிலிஸ் என்றவகை நுளம்பினாலேயே பரவுகிறது. எனவே மலேரியாவைக் கட்டுப்படுத்தவேண்டுமாயின் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கவேண்டும்.

மலேரியா நோய் தொற்றாமல் தடுப்பதற்கான தடுப்பு ஊசிகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் பல தேசவிஞ்ஞானிகள் இறங்கியுள்ளபோதிலும், அதன் வெற்றி இன்னமும் எம் கைக்கு எட்டாத தொலைவிலேயே உள்ளது.

அதேசமயத்தில், வழமையான மருந்துகளுக்கு மலேரியாக் கிருமிகள் பழக்கப்பட்டுவிடுகின்ற நிலையும், பல நாடுகளில் மலேரியாவிற்கு மருத்துவம் செய்வதில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக புதிய புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

ஹேலோபன்ரின் (Halofantrine) என்ற புதிய மருந்து நம்பிக்கைக்குரியதாகத் தெரிகிறது.

மலேரியா நோய் பரவாமல் தடுப்பதற்கு மருந்துகள் பூசிய நுளம்பு வலைகளையும் சில நாடுகளில் உபயோகிக்கிறார்கள்.

# பல்தேர்வு பாடநூலில் பலியாகிப் போகும் தனித்துவங்கள்

*சக்தி வளமுன்னோடிகள்*
*கருத்துப்பரிமாற்ற ஊடகங்களும்*
*சமூகமும்.*
*நீர்வளம் பேணல்.*

மேலே தரப்பட்டுள்ள தலைப்புக் களைக்கொண்டு, இவை எந்தப்பாடநூலினு டையதாக இருக்கலாம் என்றொரு வினாவை உங்களிடம் கொடுத்தால் சட்டென்று பதிலளிப் பது கடினமாகவா இருக்கிறது? இவை சமூகக் கல்வி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஒன்றாக இருக்கலாம் என்று நீங்கள் கருதினால் ஏமாந்தீர்கள். ஆம் இலங்கை அரசினால் செயற்படுத்தப்படும் பல் பாட நூல் தேர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் வழி காட்டலுக்கமைய உலகவங்கியின் பொதுக் கல்வி செயல்திட்டம் II அனுசரணையுடன் தரம்-6 இற்கான தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தின் அலகுகள் சிலவே இவை.

தமிழர் கலை, பண்பாட்டுக்கும் இப் பாடத்தலைப்புகள் பலவற்றுக்கும் ஒட்டுறவு இருப்பதாகத் தெரியவில்லையே என்ற நியாய மான உங்கள் குரலோடு நானும் உடன் படுகிறேன்.

தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தின் உள்ளடக்கம் எங்ஙனம் இவ்வாறு தலைகீழாக மாறியது என்ற வினாவிற்கு விடை தேட, இன்றைய உலக ஒழுங்கை புரிந்து கொள்ளலும் அவை பற்றிய பார்வையும் அவசியம்.

பனிப்போர் (COLD WAR) முடிவுற்ற சூழ்நிலையில் புதிய உலக ஒழுங்கு (NEW WORLD ORDER) தோற்றம் பெற்றமையை நாமறிவோம், இவ்வுலக ஒழுங்கு பொருளாதார வர்த்தக நலன் சார்ந்த தாகும். இதற்கமைய உலக வல்லரசான அமெ ரிக்கா முழு உலகையும் தன் பிடிக்குள் கொண்டு வர உலக மயமாக்கலை (GLOBALISATION) உருவாக்கி, நுட்பமான முறையில் செயற்படுத்தத் தொடங்கியது. பல்வேறுவழிகளில் முடுக்கிவிடப்பட்ட இந்நுட்பமான செயற்பாடுகள் முனைப்புப்பெற்றன.

அதாவது அரசியல் ரீதியில் சனநாய கம், கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகள் என்ற போர்வைக்கூடாகவும் திறந்த பொருளாதாரக்கொள்கை, தாராள மயமாக்கல், தனியார் மயமாக்கல் என்றபொருண்மியக் கொள்கைக்கூடாகவும் தகவல் தொழில்நுட்பப் புரட்சி (INFORMATION TECHNOLOGY REVOLUTION) ஊடாகவும் உலக மயமாக்கலை உலகம் முழுவதும் விரிவாக்கம் செய்வதில் வெற்றி கண்டேவருகிறது எனலாம்.

உலகம் முழுவதையும் தனது கைக் குள் கொண்டு வந்து ஏகபோக உரிமை கொண் டாடும் எண்ணப்பாட்டை நிறைவேற்றிக்கொள்ள கவர்ச்சிகரமாகவும் சிலவேளை பயமுறுத்தும் தோறணையிலும் உலக மயமாக்கலை மிகவும் நுட்பமாகவும் அமெரிக்கா பரப்புரை செய்கின்றது. அதாவது உலக மயமாக்கலால் நாடுகளுக் கிடையிலான உறவுகள் பலமடைவதாகவும் துரித பொருளாதார வளர்ச்சிகள் ஏற்படுவதாக வும் வறுமை ஒழிக்கப்படுவதாகவும் அமெரிக்கா தன் கூட்டாளி நாடுகளையும் இணைத்துக்கொண்டு மேற்கொள்ளும் பரப்புரை எடுபட்டே வருகிறது.




அத்துடன் உலகமயமாக்கல் மாற்றியமைக்க முடியாத தவிர்க்கமுடியாத யதார்த்தம் என்றும் பொருண்மியத்திலும் தொழில்நுட்பத்திலும் கலாசாரத்திலும் உலக மயமாக்கல் மூலம் கிடைக்கும் அரியசந்தர்ப் பங்களை தவறவிடாமல் உலக நாடுகள் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி பரப்புரை நிகழ்த்தப்படுகிறது.

இன்றைய பூகோளமாதல் கோட் பாட்டிற்கு அடிப்படையான மூல வேராக இருப்பது தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் புரட் சியே. மின் இணையம், மின்னஞ் சல், செயற்கைக்கோள் தொலைபேசி, செயற் கைக்கோள் தொலைக் காட்சி என்பன உலகை ஒரு கிராமமாகவே மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளன.




முதலாளித்துவத்தின் உச்சமென விமர்சிக்கப்படும் உலகமயமாக்கல் என்ற கருத் துருவாக்கம் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவுவதற்கு உறுதுணையாக இருப்பவை தகவல் தொடர்பு சாதனங்களே. இத்தொடர்பு சாதனங்கள் முதலாளித்துவத்தின் ஏகபோகமாக உள்ளமையால் மேற்குலகின் செய்திகள், அவர்களது பழக்கவழக்கங்கள், உணவு, உடை, பொழுது போக்குகள் போன்றன தேசிய எல்லைகளை மிக இலகுவாகக் கடந்து தேசிய மொழி, பண்பாடு, கலை, விழுமியங்களையும் சிதைக்கின்றன. மேற்கு நாகரிகத்தின் சகல வகையான உற்பத்திப்பொருட்களும் மூன்றாம் உலக நாடுகளின் சந்தைவாய்ப்பை பெற்றுக் கொள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி பெரிதும் உதவுகின்றன.

முதலாளியத்தை பாதுகாப்பதற்கா கவே உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை தோற் றம் பெற்றன. மூலதனமின்மை, தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை போன்ற காரணிகளினால் பொருளாதாரம் கீழ் நிலையிலுள்ள அல்லது உள்நாட்டுப்போர், அரசியல் உறுதியின்மை, இயற்கையின் சீற்றம் என்பவற்றால் நலி வடைந்த மூன்றாம் உலக நாடுகளின் பொருண் மியத்தை மேம்படுத்துவதற்காக தாம் உதவு வதாகக் கூறும் இப்பன்னாட்டு நிறுவனங்கள், அந்தந்தநாடுகளில் திறந்த பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான உதவிகளையே வழங்கு கின்றன. அத்தோடு இவ்வுதவிகளுக்கு பின் னான அழுத்தங்களையும் பிரயோகிக்கின்றன.

பாரிய நிறுவனங்களை கொள்வனவு செய்யும் உள்நாட்டில் முதலாளிகள் இன் மையை தமக்கு சாதகமாகப்பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகளுக்குள் புகுந்த தமது நிறுவனங்களை ஆரம்பித்து உலக மயமாக் கலின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள் கின்றன. இந்நடவடிக்கை நலிவடைந்த நாடு களை பொருண்மியரீதியில் மேம்படுத்தும் நட வடிக்கையாகக் கவர்ச்சிகரமான காப்பும் பரப்பு ரையும் கிடைத்துவிடுவது விந்தையானதுதான்.

பன்னாட்டு நிறுவனங்கள் திறந்த சந்தைப்பொருளாதார அமைப்பை ஏற்படுத்திக் கொண்ட, ஏற்படுத்த முனையும் நாடுகளுக்கு தேவையான உதவிகளைத்தாராளமாக செய் கின்றன. வேறு எந்த சாதாரண நாடும் இத் தகைய உதவிகளைப்பெற்றுக்கொள்வது கடினமாகும். உலக மயமாக்கலுக்கமைவாக தமது உள்நாட்டு பொருளாதாரக் கட்டமைப் புக்களில், மாற்றம் செய்யும் நாடுகள் மாத்திரமே இவ்வுதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்நிதி உதவிகள் அன்பளிப் பாகவோ கடனாகவோ வழங்கப்படுகின்றன. கடனோ அன்பளிப்போ எதுவெனினும் இதன் பின்னணியில் உதவி வழங்கும் நாடுகளின் பெரியதொரு வர்த்தகநலன் இருக்கின்றது

**தருமை [illegible]னன்**

என்பதே உண்மையாகும்.

இன்றைய உலக ஒழுங்கு வர்த்தக நலன் சார்ந்தது. ஆகையால் முதலாளிய நாடுகள் உற்பத்திச்செலவு குறைந்ததும் சந்தை வாய்ப்புக்கள் அதிகமுள்ள பகுதிகளை நோக்கி தம் கவனத்தை திருப்பியுள்ளன. இவ்வகையில் தெற்காசியா முதலிடம் பெறு கின்றது. தெற்காசியாவில் கேந்திர முக்கியத்துவமான அமைவிடத்தில் இலங்கை அமைந் திருப்பது இந்நாடுகளின் கவனத்தை ஈர்த் துள்ளன. இதுவே இன்றைய உலக முதலாளிய நாடுகள் இலங்கைபால் தன் கவனத்தை அதிகளவு செலுத்தக்காரணமாகும்.

தற்காலத்தில் முதலாளித்துவ நாடு கள் மேற்கொள்ளும், போரோ சமாதானமோ அன்றி பொருண்மிய உதவிகளோ இராஜீக உறவுகளோ எதுவானா லும் அவை அந்தந்த நாடுகளின் வர்த்தக நலன்களின் அடிப்படை யிலேயே மேற்கொள்ளப்படுகின் றன. இன்றைய் உலகின் போக்கை அவதானிக்கும் எவராலும் இதனை இலகு வில் புரிந்துகொள்ளமுடி யும். அரசியல், சமூக, பொருண்மிய நீதிகளுக்கப் பால் தமக்கு இலாபம் தரக் கூடிய சக்திகளை அது எவ்வளவு மோசமானதாக இருப்பினும் அதனை அர வணைத்து ஆதரவளிக்கும் போக்கையே உலக மயமாக் கலின் முன்னோடிகள் செய்து வருவதை அவதானிக்கலாம்.

இந்நிலையில் உலகின் வறியநாடுகளை நோக்கி நீட்டப் [illegible] ளமாதல் எனும் நாசகாரத்தை இனங்கண் [illegible] இதன் ஆபத்துக்கள் பற்றிய எச்சரிக்கைகள் ஆங்காங்கே முன்வைக்கப்பட்டே வருகின்றன. இவ்வாறு விமர்சனம் செய்வோரை சனநாயக விரோதிகள் எனவும் மனித உரிமை களை மதிக்காத தீவிரவாதிகள் எனவும் பொருண்மிய வளர்ச்சிகண்டு சகியாத காட்டு மிராண்டிகள், பிற்போக்குவாதிகள் எனவும் தமது தகவல் தொடர்பு சாதனங்கள் ஊடாக, அவர்கள் மீது சேறுபூசும் கைங்கரியத்தை முதலாளிய நாடுகள் மேற்கொள்கின்றன. அத்துடன் வெகுசனத்தை இவ் விமர்சகர்களுக்கெதிராக திருப்பி விடுகின்ற சூழ்ச்சிகரமான பரப்புரையை யும் கட்டவிழ்த்துவிடுகின்றன.

இச் சூழலில் உலகமயமாதலை முன் மொழிந்து அதனை செயற்படுத்துவதில் முனைப்புக்காட்டும் சக்திகளின் அடிமனதில் ஓர் அச்சம் முளைகொள்ளத்தொடங்குகிறது. இத்தகைய விமர்சனங்கள் மேலும் வலுப்பெற்று தமது இருப்பையே ஆட்டங்காணவைத்து விடுமோ என்பதே அது. இவ்விமர்சனங்களை மழுங்கடிக்கும் அதேவேளை உலக நாடுகளை தனது திட்டங்களுக்குள் நிரந்தரமாக முடமாக்கி வைத்திருக்கும் ஒருதிட்டம் அதற்கு அவசியப் பட்டது. இதற்குள்ள ஒரேவழி இந் நாடுகளின் கல்வித்திட்டங்களை தனது நோக்கிற்கு அமை வாக மாற்றியமைப்பதே என முதலாளித்துவ நாடுகள் கருதின.

இதற்கிணங்க, மூன்றாம் உலக நாடுகளின் பொருண்மிய பலவீனங்களை தனக்கு சாதகமாகப்பயன்படுத்திக்கொள்ள முனைந்தன. உலகவங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் ஊடாக இந் நாடுகளின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவதாக மூக்கை நுழைத்துத் தமது பணியை மெதுவாகத்தொடங் கின. கல்விக்கான பௌதீக வளங்களை ஏற் படுத்தல் அல்லது அதிகரித்தல், கல்வி நிபுணத் துவ ஆலோசனைகள், முகாமைத்துவம், நவீன கற்றல்-கற்பித்தல் பயிற்சித்திட்டங்கள் எனக்கூறி பெருவாரியாக டொலர்களை வாரியிறைத்து தமது நோக்கத்தை மெதுவாக தொடங்கும் முதலாளிய சக்திகள், நாளடைவில் நிதி உதவிகளை படிப்படியாக அதிகரித்து, அந்நாடு களின் சுயமாக முடிவு எடுக்கும் திராணியை இல்லாதாக்கி, அந்தந்த நாடுகளின் கல்விக் கொள்கையை தீர்மானிக்கும் ஏகபோக உரி மையை சுவீகரித்துக்கொள்கின்றன.

உலகமயமாதலை கல்விக்கொள் கையோடு இரண்டறக் கலந்து அக்கலவையை நடைமுறைப்படுத்துமாறு வறியநாடுகளை முதலாளிய சக்திகள் நிர்ப்பந்திக்கின்றன. விடயம் புரிந்தாலும் நக்கினார் நாவிழந்தார் என்பது போல மறுதலிக்கமுடியாமல் ஏற்றுக் கொண்டு செயற்படுத்தும் பரிதாப நிலையிலேயே இந்நாடுகள் காணப்படுகின்றன. எவரும் எளிதில் புறந்தள்ளமுடியாத அபிவிருத்தியை நோக்கிய கல்விக்கொள்கை என்ற மகுட வாசகம் உலக மயமாக்கலை மேற்கொள்ளவாய்ப்பாகவும் அதேவேளை முதலாளிய சக்திகளின் திட்டத் திற்குக் காப்பாகவும் அமைந்துவிடுகிறது.

(தொடர்ச்சி மறுவாரம்)



## மண்ணின் மைந்தர்களின் கதை

# ஜெயம்: எங்கள் துயரங்களை சுமந்த சுமைதாங்கி

இந்திய இராணுவத்துடன் சண்டை நடந்துகொண்டிருந்த காலப்பகுதி. 1989ஆம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதி என்பதனால் பெரும்பாலும எல்லாம தணிந்திருந்தது. மாற்று இயக்கங்களின் துரோகச் செயற்பாட்டிற்காக அவர்களுக்கான எதிர்ச்சண்டை தொடங்கியிருந்தது. எனவே பெரும்பாலும் போராளிகள் சில இடங்களில் நடமாடமுடிந்திருந்ததனால் இந்தியர்களின் கோரப்பிடிக்குள்ளும் அழுத்தத்திற்குள்ளும் இருந்த பொதுமக்கள் வெளியேறத் தொடங்கினர், அப்போதுதான் மக்கள் தமிழ்த்தேசிய இராணுவம் எனும் வரதராஜப்பெருமாளின் சதிகார கும்பல்களின் பிள்ளைப்பிடியிலிருந்து ஓரளவுமீண்டிருந்தனர்.

இதன்போதுதான், காட்டு பாசறை ஒன்றில் தற்செயலாக ஒரு இளைஞனை காணமுடிந்தது. சிரித்த முகமென்றாலும் அவனது மனதில் ஏதோ ஆறாதவடு இருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது. எங்களைக்கண்டதும் அவனது மனதில் எழுந்த சந்தோசத்தை அளவிடவே முடியாதிருந்தது. இலங்கை, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில். அவன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பது வெளிப்படையாகத்தெரிந்தது. அன்று சந்தித்த அவனை நீண்ட காலத்திற்குப் பின்பே காணமுடிந்தது.

1990ஆம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் ஒரு நாள் அவனைக்கண்டபோது மிகவும் சந்தோசமாக இருந்தது. அவனது பொறுப்பாளர் அவனைப்பற்றி நீண்டதொரு விளக்கம் தந்தார். நல்ல உற்சாகமானவன், எதையும் எந்த இக்கட்டிலும் செய்யக்கூடியவன் என்று சொன்னார். அதேபோல் அவன் மாசற்ற வீரனாகவே காணப்பட்டான் என்பது உண்மையானது.

வீரவேங்கை ஜெயம் அம்பாறைமாவட்டத்தின் அக்கரைப்பற்றில் பிறந்தவன். பெரும்பாலான தனது குடும்பத்தாருடன் உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் என பலபேரை இலங்கை இந்திய இராணுவத்தினரின் கெடுபிடிகளில் இழந்தவன் என்பதனால் அவனிடம் பெரும்பாலான எதிர்பார்ப்பிருந்தது. தன்னையும் தன்சார்ந்தவர்களையும் தனிமைப்படுத்தியவனை இனி ஒரு போதும் விடக்கூடாது என்ற ஓர்மத்துடனேயேதான் போராட்டத்தில் இணைந்ததாக எம்மிடம் அடிக்கடி கூறுவான்.

வீரவேங்கை ஜெயம் என்றவுடனேயே எமக்கு முதலில் நினைவில் வருவது அவனது வேலைகளே, எந்த இக்கட்டான நிலையிலும் முடியாது என்று சொல்லி வேலைகளைச் செய்துமுடிப்பான். அதைவிடவும் உயிராபத்து வந்து அவன் முன்னே நின்றபோதும் அவன் தளர்வில்லாமல் தொடர்ந்து தனது கடமையைசெய்து பலவெற்றிகளுக்குக் காரணமாய் இருந்திருக்கிறான். அதைவிடவும் அவன் தனது துணிச்சலான வேலைகளினால் எத்தினையோ இழப்புகளைத் தவிர்த்திருக்கிறான்.

துயர்நிறைந்த காட்டு வாழ்க்கையில் ஒரு நாள் எதிரிப் படையணி ஒன்று காடுகளுக்குள் புகுந்துவிட்டது. உணவுப்பொருட்களிலிருந்து அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் மிகவும் இறுக்கத்திற்கு வந்துவிட்டது. உணவு இல்லாவிட்டாலும் சமாளிக்கலாம். எதிரிகாடுகளுக்குள் புகுந்துவிட்ட நிலையில் எமது தொடர்பாடலுக்கான நடைபேசிக்கு மின்கலங்கள் முற்றிலுமாக இல்லாதுபோய்விட்டன. என்னசெய்வது என்ற இக்கட்டான நிலை உருவாகிவிட்டது.

ஆனால் தியிலி வெட்டையில் கப்டன் ஜேம்ஸ் எமக்கான பொருட்களை எடுத்துவைத்துக் கொண்டு ஆயத்தமாக இருந்தார். இப்போது தரவையிலிருந்து தியிலி வெட்டைக்குப் போவது என்றாலும் மிகவும் கடினமானவிடயம். என்ன செய்வது என்று எமது பொறுப்பாளரான மாவீரன் லெப்.கேணல் உருத்திரன் ஆசிரியர் சிந்தித்துக் கொண்டிருக்க, வீரவேங்கை ஜெயம் துணிச்சலுடன் சொல்கிறான். மாஸ்டர் யோசிக்காதேயுங்கோ இப்பநேரம் என்ன. 4.30 என்கிறார்.

இரவோடு இர வாக நான் கொண்டுவந்து தருகிறேன். ஆனால் இப்ப போக ஏலாது மம்மலாக போகிறேன்...



என்று சொல்லிவிட்டு நேரம் போக காத்திருந்தான்.

வீரவேங்கை ஜெயத்தை மோட்டுஜெயம் என்றே நாம் அழைப்பதுண்டு. எனவே இவன் செய்யக்கூடியவன் என்று எல்லோருக்கும் தெரியும். என்ன நடக்கப்போகிறது என்று எல்லோரும் எதிர்பார்த்து எமது இடங்களில் காத்திருக்க மாலை 5.45க்கு வெளிக்கிட்டான். தன்னிடமிருந்த பழையதிலும் ஒரு புதிய உடுப்பை எடுத்துப்போட்டுக்கொண்டு எப்போதோ யாரோ இந்திய இராணுவத்தினரிடமிருந்து எடுத்த ஒரு சப்பாத்தையும் போட்டுக்கொண்டு தனியே போறன் என்று சொல்லி புறப்பட்டவனுக்கு என்ன நடக்குமோ என்று நாமெல்லாம் கவலையுடனிருக்க, எதிரியின் கண்ணுக்குள் மண்ணைத்தூவிவிட்டு எமது தரவை விக்ஸ்தோட்ட முகாமிலிருந்து 20கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள தியிலிவெட்டைக்குச்சென்று இரவு 10.00மணியை கடந்து ஓரிரு நிமிடங்களில் வந்து விட்டான்.

எமக்கோ ஆச்சரியம். என்னடா இவ்வளவு வேகமாக வந்துவிட்டான் என்று அவனை விசித்திரமாகப் பார்க்க,

மாஸ்டர்.... மாஸ்டர் இந்தாயிருக்கு 04 பெடி "பெற்றி" என்று கொடுதது விட்டு ஏதும் கதைக்காதவனாய் சாப்பாட்டை தேடிச் சென்றான்.

இப்படித்தான் வீரவேங்கை ஜெயத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் மாசற்ற வீரமாக இருந்தது. நான் தொடர்ந்து எழுதுகின்ற சம்பவம் வாசகர்களுக்கு சித்தரிக்கப்பட்ட திரைப்படச் சம்பவம் போல் இருக்கலாம். ஆனால் தயவுடன் ஒரு போராளியின் வாழ்வில் நடந்த உண்மைச்சம்பவம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

எம்மை பொறுத்தவரை விடுதலைப்போராட்டத்தில் இது முன்பு நடந்ததோ அல்லது இனி நடக்கப்போவதோ இல்லை.

91ஆம் ஆண்டின் மத்திய காலப்பகுதியில் ஒருநாள் போராளிகளுக்கு மிகமோசமாக உணவுத் தட்டுப்பாடுவந்துவிட்டது. எனவே உணவு எடுக்கச்செல்வதானாலும் பெரும்பாலும் நாம் எதிரியின் பதுங்கித்தாக்குதலை எதிர்கொள்ளவேண்டும். மிகவும் கடினமாக சிறுகச்சிறுக சேர்க்கப்பட்ட பொருட்களை ஜேம்ஸ் எடுத்துவைத்திருந்தார். பொருட்களை எடுத்துவரும் துயரத்தை வாசகர்களுக்கு இலகுவாகத் தெளிவுபடுத்த ஒரு வசனத்தில் எழுதுகிறேன். எத்தினையோ இராணுவ கெடுபிடிக்குள்ளும் சோதனைக்குள்ளும் கர்ப்பிணித்தாய்போல பலபெண்கள் அரிசி, மா,சீனி,பருப்பு இப்படிப் பல பொருட்களை சுமந்து வந்து தந்ததை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. அப்படி சிறுகச்சிறுக சேர்த்தபொருட்களை எடுத்துவர வீரவேங்கை ஜெயம் நியமிக்கப்பட்டான்.

அவன் போனால் ஒரு பிரச்சினையும் இல்லாமல் எப்படியும் எடுத்துவருவான் என்பது எல்லோருக்கும் தெரியும். வடக்கன் மாடுகள் இரண்டு பூட்டிய மாட்டு வண்டியில் சென்று பொருட்களை ஏற்றி வரும்போது, எமது முகாமிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றரில் பட்டியடித்திடலில் ஒருமாடு சுருண்டு படுத்துவிட்டது. ஜெயம் எவ்வளவு முயற்சி செய்தும் அது எழும்பி நடமாடுவதாக இல்லை. உடனே அந்த இக்கட்டான நிலையையும் எதிரியால்வரும் ஆபத்தையும் உணர்ந்த ஜெயம்ஒரு முடிவெடுத்தவனாய் இயலாத மாட்டை கலற்றிவிட்டுவிட்டு அந்தப் பக்க நுகத்தில் தனது தோல்பட்டையைக்கொடுத்து பல மணிநேர போராட்டங்களின் பின் எமது முகாமிற்கு கொண்டு வந்து சேர்த்தான்.

முன்னணி காவலிலிருந்த லெப்.தனுகரன் தூரத்தே பார்த்துவிட்டு எமக்கு தகவல் தர முகாம் பொறுப்பாளருடன் சிலர் ஓடிப்போய் உதவி செய்ய வேண்டாம் என்று தடுத்து விட்டான். காரணம் அவனது மாடு எஜமானுக்கு மாத்திரம்தான் ஒத்துழைக்கும். பின் நாங்கள் பின்பக்கமாக வண்டிலை தள்ளியபடியே முகாம் வந்து சேர்ந்தோம்.

இந்த அற்புதமான போராளியின் கலங்கமில்லாத விசுவாசத்தையும், விடுதலை உணர்வையும் பார்த்த நாம் அன்றும் கண்ணீர் சிந்தினோம். இன்று இதை எழுதும் போதும் கண்ணீருடனேயே எழுதுகிறேன். எவருமே நினைத்துப்பார்க்க முடியாத அளவு உயரிய அர்ப்பணிப்பை செய்தவன் வீரவேங்கை ஜெயம்.

தனது வேலைகளை எந்தளவுஉணர்வுடன் செய்யத்துடித்தானோ அதே போல்தான் சண்டைகளிலும் நிறையவே செய்து காட்டினான். சில சண்டைகளின்போது துணிகரமாக தனது எம் 70 துப்பாக்கியுடன் சண்டை செய்த காட்சிகள் இன்னும் கண்முன்னே நிழலாடிக் கொண்டிருக்கிறது.

— க. மிரேசு —

தன்னுடன் சண்டைக்கு வருகின்ற சகதோழர்களுக்கு ஏதும் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக செயற்படுவான்.

மச்சான் மொக்குத்தனமா அடிபடக்கூடாது. நல்லாச்சிந்திச்சு வேகமா சண்டை செய்தால் வெல்லலாம் என தன்னுடன் வரும் எவருக்குமே சொல்லத்தவறமாட்டான்.

ஒருமுறை சாப்பாட்டிற்கு பெரும் தட்டுப்பாடு வந்துவிட்டது. இரண்டு நாட்களாக சாப்பாடு இல்லை. பாதுகாப்புக்கருதி எவரும் வெளியில் செல்லவில்லை. 2ஆம் நாள் மாலை திடீரென ஜெயம் காணாமல் போய் விட்டான். எங்கும் தேடி கிடைக்கவில்லை. ஓடிவிட்டான் என்றே எல்லோரும் நினைத்துவிட்டோம்.

ஆனால் இரவு பத்தரைக்கு கையில் ஒரு கோர்வைமீனுடன் வந்தான். மற்றையகையில் ஒரு மின் விளக்கு வைத்திருந்தான். வெளிச்சத்தைக்காட்டி ஓடுகிற தண்ணீரில் மீனை வெட்டியுள்ளான்.

டேய் ஜெயம் எங்கேயடா போனாய் என்று பொறுப்பாளர் கேட்க, இரண்டு நாளாகியும் சாப்பாட்டுக்கு நீங்கள் முடிவெடுக்கேல அதுதான் பொடியளின்ர கஷ்டத்தைப் பார்த்து நான் வெளிக்கிட்டுப் போனேன் என்று சமாளிக்கப்பார்த்தான். ஆனால் சொலலாமல் சென்றதுக்கு தண்டனையாக 1000 தோப்பு கிடைக்க பசியுடன தனது தண்டனையையும் செய்துமுடித்தான் அவன் கொண்டுவந்த மீன் அன்று எமக்கு தேனமுதமாகியது.

இப்படியெல்லாம் போராளிகள்,போராளிகள் எனறு தனது உடலை வருத்தியவன்தான் ஒரு நாளும் சந்தோசமாக இருக்ககிடைக்கவில்லை.

அன்றும் அப்படித்தான் சென்றான். காலை விடிந்ததும் எதிரி வந்துவிடடான் என கெவர்மலைககுள் புகுந்துவிட்டு இரண்டு நாட்களாகிவிட்டன. எனவே சாப்பாட்டிற்கு தட்டுப்பாடு வந்துவிட்டது. உணவு தேடி ஜெயம் போகவேண்டிய நேரம் வந்துவிட்டது. மச்சான் எனக்கு ஒரு மாதிரியாக இருக்கு என்றாலும் போறேன். எனச் சொல்லிவிட்டு பொறுப்பாளரிடமும் சொல்லிவிட்டுச்சென்றான்.



போகும்போது நாமிருந்த பாறையிலிருந்து இறங்கும்போது ஒரு முறை திரும்பிப்பார்த்தான் அதற்குப் பிறகு அவனது முகத்தையே பார்கக வில்லை. அவன் சென்று பல மணி நேரத்திற்குப்பின் பெருமா வெளியில் வெடியோசை கேட்டது. என்ன நடந்தது என எமக்குத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் அவனுடன் கூடச்சென்ற லெப்.குகதாஸ் தொடர்வுகொண்டு கதைத்தான் குறித்த இடத்தில் எதிரி பதுங்கியிருந்து சுட்டுவிட்டதாகச் சொல்ல...

நாம் அந்த இடத்திற்கு உடனடியாகச் சென்றோம். ஐயோ அதை என்னவென்று சொல்வது. எமக்காக நாளும் பொழுதும் உழைத்த அந்த வீரனின் உடல் பல குண்டுகள் பாய்ந்து இரத்தம் வழிந்தோட வெட்டவெளியில் வெயிலில் சுருண்டு கிடந்தன. அவன் ஒரு குண்டையும் எதிரியை நோக்கி அடித்திருந்தான். எதிரி அதில் காயப்படிருக்கவேண்டும். எனவேதான் கோபத்தினால் எங்கள் வீரன் வீரச்சாவடைந்தபின்பும் அவனது புகழுடலை சுட்டு சிங்கள கொடியவர்கள் சிதைத்திருந்தனர். ஆனால் அவனது ஆத்ம உறுதியை அவர்களால் சிதைத்துவிடமுடிய வில்லை. அவனைப்போன்ற மாவீரர்களின் ஆத்ம உறுதியினால்தான் இன்றும் எமது இலட்சியப்பயணம் தடையின்றி செல்கிறது.



சிறுகதை

# வெள்ளம்



சத்துருக்கன்

ஆச்சி சொன்னகதையும் அவவின்ர நினைவுகளும், கனவுகளும் ஒருக்காவெண்டாலும் நினைச்சுப்பார்க்கேலாமல் இருக்கு. தன்ர உள்ளத்துக்க இருக்கிறத எப்படியும் வெளியால கொட்டித் தீர்த்துப்போடுவா... இல்லாட்டி நெஞ்சுக் கொதிப்புத் தீராது.

பாஞ்சாலி பாண்டவர் முன்னிலையில் துரியோதனன் சேனையால் மானபங்கம் செய்தது. ஆச்சிக்கு சாகும் வரையும் தீராத கவலை. பாரதியின் பாஞ்சாலி சபதத்தை திருப்பித் திருப்பிப் படிக்கக்கேட்டு, கரைச்சுக் குடிச்சே போட்டாள் போலும். அதனால் தான் பாரதியின்ர கவிதையடிகளை அப்படியே ஒன்றும் விடாமல் கதை சொல்லும் போதெல்லாம் விவரிக்கிறார்களோ? என்று எண்ணத்தோன்றும்.

"பாரதி மகாகவிதான்" ஆச்சி அடிக்கடி பெருமிதத்தோடு கூறுவாள். பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியை புதுப்பெண்ணாக பொலிவித்ததற்காகத்தான், தான் அப்படிச் சொல்வதாக ஆச்சி ஒருமுறை சொல்லியிருக்கிறாள். அவள் பாஞ்சாலி துகில் உரியப்பட்ட கதையினை கண் கலங்கியபடியே சொல்லிக் கொண்டிருந்தாள்....

'வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள் மேலோர் என நீண்டிருந்த அந்தச் சபையில் பாவி துச்சாதனன் பாஞ்சாலியின் மயிர்க்குழல் பற்றி இழுத்துவந்து துகில் உரிந்தான்.

"என் வேந்தர் பிணியுடையோராகிப் போயினரே என் செய்கேன்? நீதியுரைத்திடுவோர் யாருமிலரோ" வெனக்கதறி இரைந்தழுவது சன்னமாய் ஒலித்தபடி....

பாண்டவர் தலைகள் கவிழ்ந்தன. பாஞ்சாலிதன் தலைவர் நிலைகண்டு வெட்கித்து விம்மியழுதாள். தன் பதிகளுக்கு இந்த நிலை ஏனோ...? இப்படிக் கையாலாகாத பிறவிகளாகிப் போயினரே?

சகுனிமாமா வல்லவன் தான். தன் திட்டம் நிறைவேறும் வரை சரியாய் முயன்றான். பெருமுயற்சி எடுத்துக்களைத்தே போனான். திட்டம் பலித்தது. தன் வெற்றிப்பரிசை தங்கத் தாம்பாளத்தில் வைத்தே கொடுத்தான். துரியோதனனுக்கு. வெற்றிப்பரிசு கிடைத்த பெருமகிழ்ச்சி துரியோதனனுக்கு. துரியோதனனுக் காய் சகுனி தானே களத்தில் குதித்து வஞ்சனையால் வென்றுவிட்டான்.

துரியோதனன் சபையே சிரிப்பொலியுடன் அமிழ்ந்து போயிற்று. நரைவிழுந்து வலுவிழந்துபோன ஒரு சில வாய்கள் இரங்கிப்பேசின. தம் சொற்கேளாச்சபையில் அடங்கி ஒலித்தன அவை. பாஞ்சாலி இரு கரம் கூப்பி கூந்தல்கலைய கதறியழும் ஒலி அண்டமே அதிரக்கேட்கிறது. அவதார புருஷனை வேண்டியபடி அவளின் இருகைகளும் மேலெழுந்தழைத்தன.

தருமன் தலைகுனிந்த நிலையில் வீமன் கொதித்து நின்றான். தன்னையறியாமலே மெலெழுந்தது கதாயுதம். தன்னை நிதானப்படுத்திக்கொண்டான். தன்மலர் மாற்றான் கையுள் அகப்பட்டு கசங்கிப்போய் இதழ் இதழாய் சொரியும் நிலைகண்டு தகித்தது இதயம், அவனுக்கு புரியும். வலியவன் வாழ்வான். தன் உடலின் பலத்தில் திடமான நம்பிக்கை. காலம் அவனை வதைத்தது. அவன் மௌனித்தானா? அன்றி இனித் தொடரப் போகும் தன் வெற்றிக்காய் சிந்தித்தானா? பெருந்தீ வீமனுள் எரிந்துகொண்டே இருந்திற்று.

பாஞ்சாலி பெரும் சபதமெடுத்தாள். இது வீமன் மீதுள்ள அதீத நம்பிக்கையின் வெளிப்பாட்டினால்தானோ?

"பெண்மை வதைபடும் நிலையில் பூமியைக்கூட பெண்ணாய் பார்க்கும் நிலையில் தன் தாய் நாடு வதையுற்றுப் போவதாய் ஏன் உணரமுடியுதில்லை நம்மால் ஒருபோதும்?" ஆச்சி இந்தக்கேள்வியை கேட்டுவிட்டு கதையை முடித்தாள்.

▲▲▲

ஒரு பெருமின்னல் இடியோடு எழுந்து மறைந்தபோது மக்களின் மனம்திகைத்துப் போயிற்று வழமையாகக் கேட்கும் இடிமின்னல்தான். மழைவருவதற்கான அறிகுறியாகத்தானிருந்தது.

புற்றீசல்கள் எங்கும் பறந்தலைந்தபடி எரியும் சுடரை நோக்கி நகர்ந்தழிந்தன. அக் கணத்தில்... யாருக்கும் இது பற்றிய சிந்தனை இருக்கவில்லை அந்நேரத்தில். மாலைப்பொழுது கூட இனிமையாகத்தான் கழிந்திருந்தாலும். அந்தச்சூழல் சற்று வித்தியாசமானதாய் இருந்தது.

ஆச்சியின் குடிசைக்கு அன்று மாலை பிரகலாதன் சென்ற போதுகூட ஆச்சிக்கு இது பற்றி சற்று சொல்லி இருந்தான். ஆச்சியும் அனுபவசாலிதானே. அவவும் அதுபற்றி எச்சரிக்கை செய்திருந்தாள்.

"ஆச்சி இண்டைக்கு இரவு நல்லாய் வெழுத்துக்கொட்டப்போகுதுபோல கிடக்கு. வானத்தைப்பாக்கவே தெரியுது. எறும்புகள் பட்டாளம் பட்டாளமா புத்துக்கை இருந்து வெளியில போனதைக்கண்டான்."

"மோனை எறும்பு முட்டை கொண்டு திட்டைஏறின் மழைபெய்யும்" என்று ஒரு பழமொழியே இருக்கு. மழைவரப்போகுது எண்டால் எப்பிடியும் எறும்புகள் தங்கட இடத்தில இருந்து பெயர்ந்து பாதுகாப்பாய் போகும்தானே" ஆச்சியும் பிரகலாதன் கூறிய கருத்துக்கு ஆமோதிப்பதாய்...

ஆச்சியின் அனுபவம் சொல்லுது. எத்தினை சந்ததிகளாய் இவை பற்றிய புரிதல்கள் அவளிடம் நிறையவே உண்டு. அவளுக்கு இது பற்றி அதிகம் கவலை இல்லை. என்றாலும் கடுமழை பெய்து வெள்ளம் போட்டால் குடிசை அழிந்துபோக நேரிடும் என்ற பீதியும்கூட.

பலவருடங்களாக வெள்ளம் போட்டு பல நகரங்களையும், ஊருகளையும், வீடுகளையும், எத்தனை பேர் உயிர்களையும் துவம்சம் செய்திருக்கின்றன. ஒரு விதத்தில் அது அவளையும் அச்சுறுத்திக்கொண்டே வந்திருக்கின்றது.

வெள்ளம் அணையை உடைச்சுக்கொண்டு வந்தால் பிறகு கொஞ்சம் தடுத்து அணை கட்டிறது கஷ்டம்தான். பிறகு எங்கும் எப்பிடியும் வெள்ளம் பாஞ்சு ஓடலாம்.

"முந்தியும் ஒருக்கால் கன காலத்துக்கு முந்தி வெள்ளம் அணையைக் கடந்து உடைச்சுக்கொண்டு ஊருக்குள்ள பாஞ்சதுதான். ஆனால், பொடியள் சேர்ந்து நிண்டு அணைபோட்டுத் தடுத்துப் போட்டாங்கள். அதில ஒரு நிம்மதி. தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்ற நிலையில் வெள்ளம் தன் தலைக்குமேல் ஏறாமல் தன் ஊரின் எல்லையோடு தடுக்கப்பட்டு திருப்பப்பட்டது. தன் உயிர்... தன்வீடு... தன் ஊர் காப்பாற்றப்பட்டுவிட்டதாய் ஆச்சி...

எத்தனை நேர்த்திக்கடன்கள். பிள்ளையாருக்கு இந்த முறை தேர்த்திருவிழாவிலை நூறு தேங்காய் உடைச்சுக் குவித்ததும் உண்மைதான். ஆச்சி எப்பவும் சுயநலக்காரிதான். தனக்கு பிறகுதான் எல்லாம்...

"இண்டைக்கு பெரும் வெள்ள அழிவு ஏற்படக்கூடுமெண்டும், அதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்களை பாதுகாக்கும்படி அறிவித்தலொன்று சொன்னது. வடக்கிலிருந்துதானாம் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும் எப்பிடியும் இந்தமுறை ஊருக்க புகுந்து விளையாடத்தான் போகுது" பிரகலாதன், நெஞ்சில் இடிவிழுமாப்போல் சொன்னான்.

ஆச்சிக்கு நெஞ்சு படபடத்தது. இதுவரையும் இல்லாத மனப்பயம் பீடித்தது.

"உண்மைதானே மோனே. ஆர்சொன்னது" ஆச்சியின் முகக்குறிப்பே எதேதோ சொன்னது.

ஊரே அல்லோல கல்லோலப்பட்டுக்கொண்டிருக்கையில் நிலை தடுமாறிப்போனாள். ஆச்சி தன் நேர்த்திக்கடன் இதுவரையும் பலித்துப்போனதால் நிமிர்ந்து நின்றவளின் இதயம் இறுகிப்போய் தன் பிரார்த்தனைகள் பலமிழந்துபோயினவோ...?

ஆச்சியை நினைக்க பிரகலாதனுக்கு பாவமாய் இருந்தது. தான் பிறந்த காலத்திலிருந்து இருபது வருஷமாக ஆச்சியின் முகம் தரிசிக்காமல் இருந்ததில்லை. அப்போதெல்லாம் எத்தனையோ நளினமான உணர்வுகளையெல்லாம் வெளிவிடும் அவளின் முகம் இப்போது இறுகிப்போய் ஏதோ சிந்தனையில் இருப்பதாய் உணர்ந்தான்.

ஆச்சி தனியன். எல்லாரும் ஒவ்வொரு திக்கா ஓடுகினம். தங்கட சொந்தம் பந்தமெண்டு. ஆனால் ஆச்சிக்கு துணை எண்டு இல்லை. ஆரோடை ஆரிட்டை ஆச்சி போகப்போகுது? பிரகலாதன் மனம் பதறியது.

"ஆச்சி வெளிக்கிட்டு ஆரோட எங்கயென போகப் போறாய்?" "நடந்து பழகின கால் எந்தத்தெருவை நோக்கிப் போகுதோ. அங்கபோய்..."

ஆச்சி முடிப்பதுக்குள் "போய் என்ன செய்யப்போறாய் பேசாமல் எங்களோட வா.. நான் அம்மாவோடையும் அப்பாவோடையும் கதைக்கிறன்" பிரகலாதன் கூறிக்கொண்டே போய்விட்டான்.

முந்தி எப்பவோ ஒருக்கா தெற்கிலையும் சூறாவளி வீசி பெருவெள்ளம் போட்டு எத்தனை உயிரைக் குடிச்சது. கிழக்கிலையும் வெள்ள அழிவுக்க அம்பிட்டு எவ்வளவு உயிர் போச்சு. இப்ப வடக்கிலையும் விட்டதாய் இல்லை.

அவளின் அந்தரித்த உணர்வுகளுக்கு தீனி போடுவதாய் கடந்த காலத்தின் சுவடுகள் நிரை நிரையாய் ஓடிக்கொண்டிருந்தன.

மீண்டும் அதே செய்தி. அதே வார்த்தை அபாய எச்சரிக்கை இருந்திற்று.

"ஊரெல்லாம் கூடி எங்கோ மேட்டுநிலம் தேடியாக்கும் புலம்பெயரத்தொடங்குதுகள்... ம்... ஏதோ ஊரோட சேந்து ஒத்தோடுவம்" என்று ஆச்சி நின்று நிதானிக்க திராணியற்று கையில் சுமையோடு நடக்கத் தொடங்கினாள்.

"ஆச்சி கெதியாவாணை" பிரகலாதன் அழைத்துக் கொண்டே நடந்தான்.

ஊரே வீதியை நிறைத்திருந்தது. அசைய முடியாத் தெருக்களில் பயணம் தொடர்ந்தது. ஊரே வெள்ளத்துள் மூழ்கிப் போய்விடுமென்ற அபாயம்.

ஆச்சி நின்று தன் குடிசையை திரும்பிப் பார்த்தாள். இடி மின்னல் தாக்கிய தென்னையொன்று சாய்ந்து தன் வீட்டின் முற்றத்தில் விழுந்திருந்தது. குடிசைமட்டும் காக்கப்பட்டது. நிம்மதியாய் போச்சு.

ஊரின் எல்லை வரை சனத்திரள் எல்லையற்று இருந்தது. யார் அணை கட்டுறது?

▲▲▲

"வைகை ஆற்று வெள் [illegible] பெருக்கெடுத்து ஓடுகிறது. [illegible]கட்ட எல்லோரும் வ[illegible]கள்" என்று நகரின் திசை எ[illegible]முரசு ஒலித்தது. ஊரின் எல்[illegible] திக்குகளில் இருந்தும் எல்லோரும் அணை கட்டுவதற்காய் திரண்டனர். மன்னன் பணிப்பதற்கு பணிந்து ஊரே திரண்டு பெருக்கெடுத்த வைகை ஆற்று வெள்ளத்தை அணையிட்டு கட்டமுயன்றது.

ஆனால் செம்மனச்செல்விக்கு மட்டும் அணை கட்டுவதற்கு யாருமில்லை. "தன் பங்கிற்கு அணைகட்ட யாருமில்லையே" என்ற தவிப்பில் செம்மனச்செல்வி இருந்தாள். வெள்ளம் ஊர்புகுந்து கொண்டால்...? தன் நிலை எண்ணியிரங்கினாள். இறைவனை வேண்டினாள்.

சிவன் கூலியாளாக கூடையும் கருவியுமாக வந்து செம்மனச்செல்விக்காய் அணை கட்டத் தொடங்கினார். ஆடிப்பாடி மிக மெதுவாகவே அவரது பணி தொடர்ந்தது.

செல்விக்கு மிகுந்த மகிழ்ச்சி. சிவன் கூலியாளாக வந்து செம்மனச்செல்வி கொடுத்த பிட்டினை உண்பதிலே தீராத ஆர்வம் கொண்டிருந்தார். அவர் செம்மனச்செல்வி கொடுத்த பிட்டினை உண்டகளையில் உறங்கினார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கவிதைகள்

### துரோகம் என்பது?

மீண்டுமொருமுறை
எனக்குள்ளே தேடுகின்றேன்
உன்னை!
ஒரு
காலப்பெருவெளியின்
கரைகளெங்கும்
மூச்சிரைத்துக் கிடக்கிறதென்
முயற்சி!
'துரோகம்' என்பது
எம்
பாதையெங்கும்
பயணித்துக் கொண்டேயிருக்கிறது
எம்மோடு!
இலக்கியங்கள் தொட்டு
இன்றுவரைக்கும்
கழுத்தறுப்புகளுக்கு
கணக்கேயில்லை.
முன்னொருநாளில்....
ஏன்
பின்னொருநாளிலும் கூட....
தொப்புள் கொடியறுத்துத்
தொலைந்தார்கள்,
தாய்மண்ணை
'பெற்றோல்' ஊற்றி
பெருநெருப்பில் எரித்தார்கள்
கூட்டிக்கொடுத்து
குதூகலித்து நம்மினத்தைக்
காட்டிக்கொடுக்கின்ற
கயமை நிலைவெய்தி
ஊட்டி வளர்த்த உன்னத
நிலை மறந்து
மணிமுடிதந்ததாயின் மார்பிலே
எட்டி உதைந்து
எங்கேயோ போனார்கள்.
காலம் எப்போதும்
கண்விழித்துக்கொள்ளும்போது
கணக்குகள் மாற்றப்பட்டேயாகும்.
வானம் எமதெனில் அதை
வாண வேடிக்கைக்காய் மாற்றானுக்கு
வாடகைக்குவிட முடியாது.
வாழ்க்கையை விற்றுவிட்டு
வயிறு வாங்குவதற்கு
நாம் தயாராக இல்லை
எப்போதும்.
என்னுடைய துக்கங்களில்
நீ சிரிப்பதற்கும்....
உன்னுடைய சந்தோசங்களில்
நான் அழுவதற்கும்...
நாம்
பிறந்திருக்கத் தேவையில்லை
மனிதர்களாக!
உன்னை எனக்குள்ளும்
என்னை உனக்குள்ளும்,
ஊற்றிக் கொண்டேயாகவேண்டு
மென்பது
எப்போதும்
எழுதப்படாத விதி!
'துரோகம்'....
தன் முகத்திரை மாற்றிக்கொண்டு
தாக்கத்தயாராகும்
இன்னொரு தருணத்திலும்....
நமக்குள்ளே தூங்கும்
நம்மை
நாமேதான்
கண்டுபிடித்தாக வேண்டும் கட்டாயம்.
காலமும்...
காதலும்....
நின்றேயறுக்கும்.

த.நிரஞ்சலன்

## இலக்கியப்பகிர்வு

# நாடகக் கலைஞர் வி.எம். குகராஜா



1987இல் எம் மண்ணை ஆக்கிரமித்த இந்தியப்படை காவு கொண்ட எங்கள் மக்களில் ஒருவர் தான் நாடகக் கலைஞரான வி.எம். குகராஜா.

சுன்னாகத்தில் ஒரு வீதியைக் கடக்கும்போது இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே தன் உயிரை ஈந்தவர்.

வி.எம். குகராஜாவை இப்போது வேண்டுமானால் நாங்கள் ஞாபகப்படுத்தவேண்டி இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் அவரைத் தெரியாதவர்கள் எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

காரணம் வி.எம். குகராஜா ஒரு நாடகக்கலைஞர் பன்முகத் திறமை கொண்ட ஆற்றல் உள்ள அவர் தன் திறமையினால் முன்னிலையில் நின்றவர்.

இப்போது நாடகத்தைக் காணவில்லை. நாடகக் கலை அழிந்து வருகின்றது என்ற பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற சூழலில்-1987இல் மறைந்த வி.எம். குகராஜாவை நாங்கள் நினைவில் கொள்ளவேண்டியுள்ளது.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதப் போராட்டத்திற்கு சமாந்தரமாக பல்வேறு கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இணைந்து செயற்பட்டுவந்துள்ளனர். வருகின்றனர்.

இன்றைக்கு எமது வீதி நாடகங்கள் எமது குச்சு ஒழுங்கைகளையும் மேடையாக்கி பல நூறு தடவை மேடையேற்றப்பட்டு சாதனை படைத்தது யாரால் என்பதை நாங்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

ஒருவர் ஒருவராக பல பேர் தமது சக்திக்கு ஏற்ப உழைத்ததன் காரணமாகவே இது சாத்தியமாயிற்று.

இன்றைக்கு புதுவை அன்பன், பாலா மாஸ்டர் போன்றோர் எத்தனையோ இடையூறுகளை, நெருக்கடிகளைத் தாண்டித்தான் வீதிநாடகங்களை வாழ்வியல் நெருக்கடிமிக்க காலத்தில் கருத்துக்களைச் / செய்திகளை விதைக்கும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தினார்கள்.

இவ்வாறான ஒரு சாதனையைத்தான் அப்போது வி.எம் குகராஜாவும் செய்தார்.

"அறுபதுகளின் பிற்கூற்றில், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அரும்பி எழுபதுகளில் முகை திறந்த நாடகப் புத்தாக்க மலர் இப்போது மலர்ச்சி அடைந்துள்ளது எனலாம். குகராஜா, சண்முகலிங்கம், தாசீசியஸ் போன்றோர் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கிற்கு புதிய பரிமாணங்களை அளித்துள்ளனர்."

என பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் 1980ஆம் ஆண்டில் வெளியான நான்கு நாடகங்கள் என்னும் நூலின் முன்னுரையில் தெரிவிக்கின்றார்.

பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிட்ட குகராஜா 1980களில் என்ன நிலையில் இருந்தார் என்பதை புரிந்துகொள்ளமுடிகிறது அல்லவா?

மிகக்குறைந்தவயதில் நாடகச் செயற்பாடுகளில் முன்னேறிப் பாய்ந்த அவர் இப்போது இருந்திருந்தால் மேலும் பல புதிய சாதனைகளைச் செய்திருப்பார் என நம்பலாம்.

1970களில் இளைஞராக நாடகக்களம் இறங்கிய குகராஜாவுக்கு ஏனைய துறைகளான சிறுகதை, கவிதை போன்ற துறைகளிலும் ஈடுபாடுஇருந்தது.

"படலை திறக்கிறார்கள்" என்ற மேடை நாடகமே அவரது ஆரம்ப நாடகம். அதன் நீட்சியாக 1976இல் இலங்கை தேசிய கலாசாரப் பேரவை நடாத்திய நாடக விழாவில் "மனிதனும் மிருகமும்" என்ற நாடகத்திற்கு சிறந்த பிரதிக்கான பரிசு கிடைத்தது.

ஏழாலையைச் சேர்ந்தவரும் பிரபல்யமான வானொலி நாடகத் தயாரிப்பாளருமான கே.எம். வாசகர் அவர்களின் வழிகாட்டலில் வளர்ந்த குகராஜா 1978இல் நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தில் நாடகத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய நாடக அரங்கக் கல்லூரி குகராஜாவின் நாடக வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், ஏ.ரி.பொன்னுத்துரை, மௌனகுரு, அரசர், இளைய பத்மநாதன், பிரான்சிஸ் ஜெனன் போன்ற முன்னணி நாடக பிரமுகர்களுடன் நெருக்கமான பிணைப்பு உண்டானது.

1980ஆம் ஆண்டு தேசிய நாடக விழாவில் மேடையேற்றப்பட்டு சிறந்த நாடகத்திற்கான பரிசு உட்பட எல்லாமாக நான்கு பரிசுகளைப் பெற்றுக் கொண்ட தாசீசியஸ் அவர்களின் "பொறுத்தது போதும்" நாடகத்திற்கு உதவி நெறியாளராக குகராஜா இருந்தார்.

இதன் தொடர்ச்சியாக நாடக அரங்கக் கல்லூரி ரசிகர் அவைக்காக மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் "கோடை" குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் "உறவுகள்" ஆகிய நாடகங்களை நெறிப்படுத்தி தன்னை வெளிப்படுத்திக்கொண்டார்.

நாடகத்துறையில் இருந்த அதீத ஈடுபாடுகாரணமாக "அரங்கம்" என்னும் சஞ்சிகையினை நாடகத் துறைக்காக சிறிது காலம் நடத்தினார் என்பதில் இருந்து அவரது அக்கறையினைப் புரிந்துகொள்ள முடியும்.

இணுவிலில் தனது நாடகத் துறை சகாவான எஸ்.ஜெயக்குமார் (இவரும் தேச விரோதிகளால் 1987/1988 களில் சுட்டுக்கொல்லப்பட்டார்) போன்றோரின் துணையுடன் "மக்கள் கலை அரங்கம்" என்ற ஒரு அமைப்பினை ஏற்படுத்தினார்.

இந்த மக்கள் அரங்கம் நாடகச் செயற்பாடுகளுடன் கலை இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்ட மாணவர்களுக்கும் பயிற்சி பெற உதவிசெய்தது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்


## வெள்ளிநாத வாசகர்களே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம் வாரஇதழில்
பிரசுரிப்பதற்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கிறோம.

சிறுகதை
கவிதை
கட்டுரை

என உங்கள் எண்ணப் பொறிகளுக்கு வடிவம்
கொடுத்து எமக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் படைப்புகளை எமக்கு அனுப்பவேண்டிய முகவரி.

ஆசிரியர், வெள்ளிநாதம்,
யாழ்.சாலை, கிளிநொச்சி.

மின்னஞ்சல் முகவரி: Weekly@Eezhanatham.com



# இளைய நாதம்

## கைவண்ணம்



செ.யூதித்,
பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லம்,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

# எங்கள் பாம்புகள்

பாம்புகள் உலகில் 13 கோடி ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றன. இவற்றில் 3000 வகையான இனங்கள் உண்டு. இவைகளில் 175 வகையான பாம்புகளே விடம் உள்ளவை. என்ன! பாம்பென்றதும் பயம் வந்துவிட்டதா? உங்களுக்கு மட்டுமல்ல 'பாபென்றால் படையே நடுங்கும்' என்பார்கள்?

பாம்புகளில் மலைப் பாம்பு வகைகள்தான் முதலில் தோன்றின. விடப்பாம்புகள் பின்னர்தான் வந்தவை. பாம்பிற்கு காது இல்லை. அதற்கு காது, மூக்கு எல்லாமே நாக்குதான். பாம்புகள் அதிர்வைக்கொண்டு சத்தத்தை உணர்ந்து தலையை தூக்கிப்பார்க்கின்றன. பாம்புகள இறந்தவைகளை உண்பதில்லை. பாம்புகள் சுத்த அசைவ உண்ணிகள். தவளை, எலி, முயல் என்பன இவைக்கு பிடித்தமான உணவுகள். நாக பாம்பிற்கு சோடி சாரைப்பாம்பென்பார்கள். இது உண்மையல்ல. பாம்புகள் வேறு சாதிப் பாம்புகளுடன் சோடி சேர்வதில்லை.

பாம்புகளில் முட்டை இடுகிற, குட்டிபோடுகிற இரண்டு இனங்களும் உண்டு. ஆசிய நாடுகளில் காணப்படுகின்ற மலைப் பாம்புகளே அதிக நீளமான பாம்புகளாகும்.

சாதாரணமாக 20-30அல்லது 35 வரை காணப்படும். தென்அமெரிக்கக் காடுகளில் வசிக்கும் 'அனக்கொண்டா' எனும் மலைப்பாம்பே உலகிலேயே மிகப்பெரிய பாம்பாகும்.

'அனக்கொண்டா'வின் வயிற்றின் குறுக்கு நீளமே மூன்றரை அடி அளவிருக்கும். மிகவும் நீளமான விடப்பாம்பு ஆசியக்காடுகளில் வசிக்கும் ராஜநாகம் ஆகும். இதுசுமார் 18 அடி நீளமிருக்கும். எமது பகுதியில் விடம் கூடிய பாம்பு நல்லபாம்பு என்று நாம்சொல்லும் நாகபாம்பாகும். எமது காடுகளில் காணப்படும் பாம்புகளில் பெரியது 'வெங்கிநாந்தி' எனப்படும் மலைப்பாம்பு இனத்தைச் சேர்ந்த பாம்புதான்.



பாம்புகளுக்கு மேற்தோல் குறிப்பிட்ட நாட்களுக்கு ஒருமுறை கழற்றிவிடும். இதைத்தான் நாம் பாம்பு சட்டை கழற்றுகிறது என்போம். இந்த பாம்புச் சட்டைகளை நாம் காடுகளிலும் பாம்புகளின் நடமாட்டமுள்ள இடங்களிலும் காணலாம்.

எமது சாரைப்பாம்பு ஒரு சாதுவான பாம்பே. அதற்கு விடம் இல்லை. அதற்காக நாம் கையில் பிடித்து விளையாட நினைக்கக்கூடாது. அது வாலால் சுழற்றி அடிக்கும் இயல்பும் கொண்டது.

பாம்புகள் பெரும்பாலும் புத்துகளில்தான் வசிக்கின்றன. சிலவேளைகளில் மரப்பொந்துகள், தென்னை, பனை ஓலைகள் மரப்பட்டைகள், என்பவற்றிலும் வசிக்கும். ஆனாலும் புத்துதான் பாம்புகளின் குளிருட்டப்பட்ட வசிப்பிடமாகும். தற்போது மழைக்காலம் என்பதால் விரியன் (புடையன்) இனத்தைச் சேர்ந்த 'சுருட்டை' எனும் பாம்பு மரப்பட்டைகள், பனையோலை; தென்னையோலைகளில் அதிகமாக இருக்கும். எனவே நாம் அவதானமாக இருக்கவேண்டும்.

# சொற்சிலம்பம் - 60

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க் | கோ | ம | பி | ர | ட் | ற |
| ச | கு | நீ | த | ள் | ர் | ல் |
| மா | பா | ணை | கோ | ன் | ணி | ம் |
| ளை | அ | ச் | ய | ச | ங் | மா |
| கை | ட் | த | பா | ரா | வ | ஜா |
| த | வ | க | இ | ய் | ம் | தே |
| சி | பூ | ப் | ஓ | ச | வி | ணை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 58 இன் விடைகள்

01. உதயதாரகை.

02. அல்பிரட் நோபல்

## சொற்சிலம்பம் - 58 இன் பரிசுக்குரியவர்

ந.டயாழினி,
யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு மகா
வித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 58 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. நி.நிலக்சனா,
பாரதிபுரம் மேற்கு,
கிளிநொச்சி.

02. இ.திருப்பரன்,
37/1 சிவநகர்
உருத்திரபுரம்.

03. அ.றோஜிதா,
நட்டாங்கண்டல் அ.த.க.பா,
பாண்டியன்குளம்.

04. ந.ஜெகதீஸ்வரி,
54D8 உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

05. ஸ்ரீ.லதாங்கி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

06. அ.றஜீன்,
மருதங்கேணி இந்து,
தமிழ் வித்தியாலயம்.

07. ஸ்ரீ.சகிதா,
இல.65உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

08. சி.வினோஜன் தரம்-4,
அ.த.க. பாடசாலை,
ஜெயபுரம்.

01. பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் பெயர்.

01) ........................................

02. வானொலியை கண்டுபிடித்தவர்.

01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :- ........................................

........................................

சொற்சிலம்பம்-60
ஈழநாதம்.
யாழ். சாலை,
கிளிநொச்சி.

# எலியாரின் வண்டில்

பகுதி-10




நன்றி:- பன்டேடைம்ஸ்

(முற்றும்)

# வீடு

# சந்தோசம் உங்கள் கைகளில்தான்



"சிந்தனைத் தேரை விரக்திப்பாதையில் ஓட விடுவது எமக்குக் கொஞ்சமும் நல்லதல்ல." எனவே உங்கள் சிந்தனைகளை சந்தோசப் பாதையில் ஓடவிடுங்கள். சந்தோசம் எங்களைத் தேடி வராது அதை நோக்கி நாம் தான் செல்ல வேண்டும். சந்தோசமாக இருக்கப் பல வழிகள் உண்டு. தோல்விகளைக் கண்டு அஞ்சக்கூடாது. மனக கவலை அடையக்கூடாது. கோபம் கொள்ளக்கூடாது. அத்துடன் விட்டுக் கொடுத்து வாழுவது, மன்னிக்கும் குணத்தைக் கொண்டு வாழுவது, எதையும் தாங்கும் இதயத்தை வளர்த்துக்கொள்வது, இவற்றின் மூலம் கவலைகளைத் தூக்கி எறிந்துவிட்டு சந்தோசமாக வாழலாம் அல்லவா?

சிலபேர் தோல்விகளைக் கண்டு அஞ்சி அதன்மூலம் தங்கள் சந்தோசத்தை இழக்கின்றார்கள். தோல்விதான் வெற்றியின் அறிகுறி என்பதை மறந்து தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியை நினைத்து கவலையுடன் வாழ்கிறார்கள். "துயர் தாங்கும் உள்ளம் தான் நிலையான சுகம் காணும்" என்பதை மறந்து விடுகிறார்கள். "வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு" "தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு"

எமக்கு ஏற்பட்ட ஒவ்வொரு தோல்விகளும் எதனால் ஏற்பட்டது. எதற்காக ஏற்பட்டது என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணரமுடியும். தோல்விகளே தொடர்ச்சியானால் வெற்றி காண்பது எப்படி என்று நினைப்பீர்கள். எவ்வளவோ தோல்விகளைச்சந்தித்தவர்கள் தான் இன்று பெரியவர்களாகவும்; அறிஞர்களாகவும் திகழ்கிறார்கள் என்பது நாம் சொல்லித் தெரியத்தேவையில்லை. தோல்விகள் வந்தால் ஒருநிமிடம் அதை நினைத்து கவலையடைந்துவிட்டு பின்னர் உங்கள் மனதை திசை திருப்பி சந்தோசமாக இருக்கமுயற்சியுங்கள். அதைவிட்டுவிட்டு அந்தத் தோல்வியை நினைத்து மீண்டும் மீண்டும் கவலைப்படாதீர்கள். "கவலைகளைத்தூக்கிக்கொண்டுதிரியாதீர்கள.

அவைகள் கைக்குழந்தைகள் அல்ல. தொடர்ச்சியான தோல்விகளைக் கண்டு சிலர் மனக்கவலை அடைகிறார்கள். மனக்கவலை ஏற்பட பல காரணங்கள் உண்டு. எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத சந்தர்ப்பத்தில் ஐயோ எமக்கு இப்படி ஆகிவிட்டதே என்று நினைத்து மனதுக்குள்ளேயே பலர் குமைந்து கொள்கிறார்கள். இன்னும் சிலர் "எமக்கு மட்டும் இப்படி ஆகிவிட்டதே! ஏன் எனக்கு இப்படி நடக்கிறது" என்று வேதனை அடைகிறார்கள். ஆனால் ஒவ்வொரு நெஞ்சத்தின் ஆழத்திலும் சோகமுண்டு என்பதை மறந்துவிடுகிறார்கள். அவற்றை அகற்ற நாம் தான முயலவேண்டும். அப்போதுதான் நாம் சந்தோசமாக இருக்கமுடியும். உங்களைப்பிறருடன் ஒப்பிட்டு பார்த்து அட நாம் இப்படி இருக்கிறோமே என்று உங்களைத் தாழ்மைப் படுத்திக்கொள்ளாதீர்கள். நேற்று நடந்த தவறை இன்று நினைத்து வருந்துவதை கைவிடுங்கள். நடந்தது நடந்து போனதுதான். முடிந்துபோன ஒன்றை நினைத்து வருந்துவதில் எந்தப் பயனும் இல்லை. அதையே நினைத்து வருந்துவதால் தோல்விகள்தான் ஏற்படும். அவற்றை மறந்து முயற்சி செய்தால் வெற்றிகளைப் பெற்று சந்தோசமாக வாழலாம் அல்லவா? துன்பத்தை இன்பமாக மாற்றுவது உங்கள் கைகளிலேயே உள்ளது. சிந்தனையை வளர்த்துக் கொள்ளுங்கள்; எதிலும் ஆழ்ந்த பற்றை ஏற்படுத்துங்கள் வாழ்வு ஒளிமயமாகும்.

கலகலப்பாக இருப்பதற்கு நாங்கள்தான் முயற்சிக்கவேண்டும். எதை எடுத்தாலும் எல்லாருடனும் கோபப்படுவது விட்டுக்கொடுக்காத தன்மை இவற்றின்மூலம் மற்றவர்களின் அன்புப் பிணைப்பு கிடையாது சந்தோசத்தை இழக்கநேரிடும். கோபம் வந்தால் உங்களையே நீங்கள் இழந்துவிடுவீகள். அதன்மூலம் உங்கள் மரியாதையைத்தான் இழக்கின்றீர்கள். கோபம் வரும் விடயங்களை யாரிடமாவது மனம் விட்டுப்பேசுங்கள். கோபத்தை மறந்து மகிழ்ச்சியோடு வாழப்பழகுங்கள். கோபம் வந்தால் உடனே மனதை மாற்றி சிரியுங்கள். சந்தோசம் உங்கள் பக்கம்தான்.

"மிதமிஞ்சிச் சிரிப்பவனை விட வேதனையில் ஆழ்ந்தவன் எவனும் இருக்கமுடியாது. வாய்விட்டுச் சிரியுங்கள் நோய்விட்டுப்போகும். எல்லோருடனும் அன்பாகப்பழகுங்கள். விட்டுக்கொடுத்து வாழுங்கள் சந்தோசமாக வாழலாம்.

சந்தோசம்தான் அதிகமாய் இருக்கிறதே. அதை அனுபவிப்பதை நிறுத்துவோம் என்று தோன்றுகிறதா? தோன்றாது. இன்னும், இன்னும் சந்தோசம் வேண்டும் என்றுதான் மனம் ஆசைப்படுகிறது. இப்படியே சந்தோசமாய் இருந்துவிடுவோம் என்றுதான் மனம் ஆசைப்படுகிறது. நிறைவேறாத ஆசைகளை சிலர் கனவுமூலம் அடைந்துவிடுகிறார்கள். சிலர் சோகத்தில் சோகமாய் இருந்து அடுத்த நிமிடம் சந்தோசமாக ஆகிவிடுகிறார்கள். உங்களுக்கு ஏற்படும் சோகங்களை நெருங்கிய உங்கள் நண்பர்களுக்குச் சொல்லி ஆறுங்கள். அது மனதுக்கு நிம்மதி. பின்னர் மனமும் சந்தோசமாக இருக்கும்.

எதிர்பார்ப்புக்கள் நடைபெறாத போதுதான் சந்தோசம் எங்களைவிட்டு விலகுகிறது. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறு இல்லை என்பார்கள். நினைப்பது எவருக்கும் நடப்பதில்லைத்தான். அதனால்,

"நினைத்தது கிடைக்காவிட்டால் கிடைத்ததைக் கொண்டு திருப்திப்படுவதே மேல்.

திருமணம் நடைபெறும் போதே கணவன் மீது மனைவிக்கும், மனைவி மீது கணவனுக்கும் எதிர்பார்ப்புக்கள் ஏற்படுவது இயல்பு. எனவே கணவன் மனைவி இரண்டு பேரும் புரிந்துணர்வோடு செயற்பட்டால் சந்தோசமல்லவா? எனவே சந்தோசங்களை பல வழிகளில் நாம் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தோசம் உங்கள் கைகளில் தான். வாழ்க்கை வாழ்வதற்கே, வாழ்ந்துதான் பார்ப்போமே! அதைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் ஏது கஷ்டம்.

"தனக்கு இன்பம் இல்லை என்று எண்ணுபவனுக்கு இன்பம் கிடையாது."

**த.சந்திரப்பிரியா**

## இப்படிச் செய்யலாம்...

*வாழைக்காய், கத்திரிக்காய், வாழைப்பூ இவற்றை நறுக்கும் போது கையில் கறை பிடித்துக் கொள்ளும். முன் கூட்டியே கையில் எண்ணெய்யை பூசிக் கொண்டால் கறைபடாது.*

* * *

*உருளைக்கிழங்கின் தோலைச் சீவுங்கள். வெள்ளிப் பாத்திரங்களில் தோல் சீவிய உருளைக்கிழங்கைத் தேயுங்கள். வெள்ளிப்பாத்திரம் பளபளப்பாக இருக்கும்!*

* * *

*பருப்பு வகைகளில் புழு பூச்சிகள் பிடிக்காமல் இருக்க, அவற்றோடு காய்ந்த வேப்பிலைகளைப் போட்டு வையுங்கள்.*

* * *

*எலுமிச்சம் பழத்தை ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து எடுத்துவிட்டால் சில நாட்கள் வரை அது பழுதடையாமல் இருக்கும்.*

* * *

*ரவையை உப்புமா செய்யும் போது, ரவையில் இலேசாக எண்ணெய்யை ஊற்றிக்கிளறி விட்டுச் செய்தால், உருண்டை பிடிக்காமல் இருக்கும்.*

* * *

## சிற்றுண்டி அப்பம்




| தேவையான | பொருட்கள் |
|---|---|
| ப.அரிசி | 1/2 Kg |
| பயறு | 1/4Kg |
| சக்கரை | 100g |
| சீனி | 150g |

**செய்முறை:-**

முதலில் ப.அரிசியை நீரில் ஊறவைத்து இடித்து மாவாக எடுத்துக்கொள்ளவும். பயறை வறுத்து உடைத்து எடுக் கவும். சக்கரையை தூள் போன்று இடித்து சக்கரையுடன் சீனி யையும் சேர்த்து கரைத்து இடித்து எடுத்த மாவுடன் கலந்து அப்பத்துக்கு மா கரைப்பது போல் கரைத்து 8மணித்தியாலம் உறைய வைக்க வேண்டும். இரவு நேரங்களில் வைத்து காலையில் சிற்றுண்டி அப்பம் செய்வதும் நல் லது. பின்பு உறைந்த மாவில் நீர் சிறிதளவு ஊற்றி கரைத்து எடுக்கவும். இட்லி அவிக்கும் தட்டில் பொலித்தீன் பை போட்டு அதற்குள் ஒரு கரண்டி மாவை விட்டு அவிய வைக்கவும் அவிந்த வுடன் எடுத்து ஆறியபின் சிற் றுண்டி அப்பத்தை சுவைத்துப் பாருங்களேன் நன்றாக இருக்கும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

# சண்டை உருவாக சச்சரவு காரணமா?

ஒருவர் ஒருவர் மீது கோபம் கொள்ளும் பொழுது அவரும் அவர்மீது கோபம் கொள்ளும் பொழுது சச்சரவு நிகழக்கூடும். சச்சரவு நிகழும் அந்தச் சம யத்தில் சண்டை நிகழும். இவைகள் எமது சமுதாயத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நிகழ்வுகளாகும். ஒரு நபர் எம்முடன் கதைக்கும் பொழுது எதிர்பாராத விதமாக அவர் எம்மீது கோப உணர்வுடன் கதைப்பாரானால் நாம் அவ் இடத்தை விட்டுநகர வேண்டும். அதற்கு நாம் முகம்கொடுப்போமானால் மேல் கூறப் பட்டவைகளைப் போல் பாரிய பிரச்சினைகள் நிகழக்கூடும்.

சில கிராமங்களில் அயல் வீடுகளில் சச்சரவுகளை ஏற்படுத்தி சண்டையை உருவாக்க நினைக்கும் சில நபர்களையும காணக்கூடியதாகவுள்ளது. இவர்கள் இதை பொழுதுபோக்காக கருதுவது மட்டுமல்ல இரு குடும்பங்களையும் சச்சரவு சண்டையில் ஈடுபடுத்தி வேடிக்கை காண்பதாகும். இரு குடும்பங்கள் அன்பு டன் பழகிவரும் சமயத்தில் இவ் அன் புடன் பழகிவரும் குடும்பங்களை பிரித்து விடுவதற்கு சில நபர்கள் முயலுகின்றனர். அன்பாகப் பழகிவரும் இரு குடும்பங்களுக்கும் இடையில் நடுவர் போல் செயல்பட்டு இருகுடும்பங்களையும் பிரித்துவிடு வதற்கு சில வதந்திகளை தாமே உருவாக்கி இரு குடும்பங்களுக்கும் பொருட்களைப் போல் வார்த்தைகளை தரம் பிரித்து இருகுடும்பங்களுக்கும் பங்கிட்டு வழங்குகின்றனர். இதனால் இவர்களுக்கு என்ன பிரயோசனம். இந்த நிலை எமது சமுதாயத்தி லிருந்து நீக்கப்படவேண்டும்.

நாம் ஒரு குடும்பத்துடன் நல்ல முறையில் பழகிவரும் சமயத்தில் திடீரென மூன்றாவது நபர் நாம் பழகிவரும் அக் குடும்பத்தை வெறுக்கும் வகையில் கருத்துக்களை எமக்கு எடுத்துரைத்தால் அதாவது நீங்கள் பழகிவரும் குடும்பம் உங்களை கீழ்த்தரமாகக் கூறினார்கள் என்று எடுத்துக்கொண்டால் திடீரென நாம் பழகிவரும் அக் குடும்பத்தை வெறுப் பது தான் என்று முடிவு எடுப்பதற்கு முன்பு ஏன் இப்படியான நிலைவரம் உருவாகுவதற்கு. என்ன காரணம் என்று சிந்திச்சு செயல்பட வேண்டும். மூன்றாம் நபர் சொல்வது உண்மையா என ஆராய வேண்டும். எங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் கலந்து ஆலோசிக்கவேண்டும்.

அதன் பின்பு நாங்கள் பழகிவரும் அக் குடும்பத்துடன் இது சம்பவமாகக் கதைக்க வேண்டும். அதன் பின்பு உண் மையில் நாம் பழகிவரும் அக்குடும்பம் நமக்கு பிடிக்காத முறையில் பழகினால் அக்குடும்பத்துடன் நாம் பழகுவதை குறைத்துவிட வேண்டும். மேற்கொண்டு பழகி வந்தால் சச்சரவு சண்டை நிகழக் கூடும். மூன்றாவது நபர் பொய்யான வதந்தியை எமக்கு கூறியிருந்தால் நாமும் எம் முடன் பழகி வரும் அக்குடும்பமும் சேர்ந்து அவ் மூன்றாவது நபருடன் பழகுவதை முற்றாக நிறுத்திவிட வேண்டும்.

ஒருவர் இன்னொருவருக்கு ஒருவரைப்பற்றி குறையாகச் சொல்லும் பொழுது. இன்னுமொருவர் தன்னைப் பற்றி இவ்வாறு கூறக்கூடும் என உணர்ந்து கொள்ளவேண்டும். ஒருவரை தேவையற்று துன் புறுத்தும் சமயத்தில் இவ்வாறு எமக்கும் நிகழும் என நினைத்துப் பார்க்க மறந்து விடுகின்றனர். ஒருவரை நாம் மகிழ்விக்கும் பொழுது எமக்கும் அதில் மகிழ்வுண்டு. இதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

எம்மைத் தேடிவரும் சச்சரவுகளைக் கண்டு நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். ஒதுங்கிக்கொள்ளாமல் நாம் அதற்கு முகம் கொடுத்தால் சச்சரவு சண்டையாக மாறி விடும்.

**இ.றஜித்**




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–21**

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

யாழ்ப்பாணத்தின் மேற்கில் தீவுகள் சிதறிக்கிடக்கின்றன. தொடர் நிலப்பரப்பாய் கிடந்தவை கடற்பெருக்கால் தீவுகளானவை அவை என கருதுகோள் இருக்கிறது. ஆனாலும் அவற்றின் தரைப் பரப்பை முழுதாக ஆராய்ந்தால் அவை கடலில் இருந்து எழுந்த பவளப்பாறைத்தீவுகள் என்பது தெரியவரும்.

யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மையான தீவுகளான மண்டைதீவு, வேலணை ஆகியனவற்றின் வடபகுதிகள் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் நிலப்பரப்பின் மயோசின் சுண்ணக்கல்லின் தொடராகக் காணலாம். ஆனால் இத்தீவுகளின் பெரும்பாலான பகுதிகள் பவளப்பாறைகளால் ஆனவையே. பவளப்பாறைகள் எனப்படுபவை கடலில் உள்ள உயிர்கள். ஆழம் குறைந்த கடலில் சூரியஒளி கடல்தரையில் படும் இடங்களில் இந்த பவள உயிர்கள் உள்ளன. இந்தப் பவளஉயிர்கள் கடல்நீரிலுள்ள காபனீரொட்சைட்டுடன் தாக்கமடைந்து கல்சியம் காபனேற்றாக மாறி கல்லாகிறது.

லட்சம் லட்சம் ஆண்டுகளாக இவ்வாறு கல்லாக மாறிய பவள உயிர்களின் பெரும் பரப்புத்தான் யாழ்ப்பாணத்தீவுகள். இவை பவளப்பாறைகளால் ஆனவை என்பதை இவற்றின் நிலப்பரப்பு பவளப் பாறைகள் நிறைந்ததாக இருப்பதை பார்த்தே அறிந்துகொள்ளலாம். ஆகவே யாழ்ப்பாணத்தீவுகளை உலகப்பார்வையில் பவளத்தீவுகள் என்றே அழைக்கலாம். யாழ்ப்பாணத்தில் அதற்கு மிக நெருக்கமாக மண்டைதீவு உள்ளது. இது மக்கள் வாழ்தீவு.

இதற்கும் யாழ் பண்ணைக்கும் இடையே ஆட்கள் வாழாத கண்ணாப்பற்றைகள் நிறைந்த இரு சிறுதீவுகள் இருக்கின்றன. அவை சிறுதீவு, குருசடிச்சதீவு என்பவை. மண்டைதீவுக்கு அடுத்து அதற்கு மிக நெருக்கமாக வேலணைத்தீவு உள்ளது. தீவுகளில் மிகப்பெரியது



# 21 ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

இது. இதன் வடமுனை ஊர்காவற்றுறை தென்முனை வேலணை. இவை யாழ்ப்பாணத்துடன் சாலை ஒன்றினால் இணைக்கப்பட்டுள்ளன. இதனை பண்ணை தாம்போதி என்பார்கள். இந்தத்தாம்போதி சிறிய சதுப்புத்திடல்களான தீவுகளை இணைத்து உருவாக்கப்பட்டது.

வேலணைக்கு அடுத்ததாக வாணர்பாலம் மூலம் புங்குடுதீவு இணைக்கப்பட்டுள்ளது. இதுவும் மக்கள் வாழ் தீவுதான். புங்குடுதீவுக்கும் வேலணைக்கும் இடையில் ஆளற்ற கண்ணாக்காடுகள் நிறைந்த மக்கள் வாழாத சிறிய தீவுகள் இருக்கின்றன. கண்ணாத்தீவு, நேரியன்பிட்டித்தீவு, பாலைதீவு, காரைதீவு, ஊரதீவு என்பவை. இவற்றைவிட பெயரில்லாத மூன்று சிறு கண்ணாத்தீவுகளும் இங்கு உள்ளன.

புங்குடுதீவுக்கு அப்பால் அதன் மேற்குமுனையில் உள்ள நடுவுத்துருத்தி, குறிகாட்டுவான் ஆகிய சிறுதீவுகள் சாலைகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. ஆட்கள் வாழாத சிறிய தரைத்தொடர்பற்ற கண்ணாப்பிட்டி என்ற தீவும் இப்பகுதியில் இருக்கிறது.

குறிகாட்டுவானுக்கு அப்பால் உள்ள தீவுகள் தரைத்தொடர்பு சாலைகள் அற்றவை. இவை படகுப் போக்குவரவால் இணைக்கப் பட்டுள்ளன. நயினாதீவு, நெடுந்தீவு என்பன புங்குடுதீவுக்கு அப்பால் உள்ளவை. நயினாதீவு குறிகாட்டுவான்துறைக்கு கால்மைல் நெருக்கமாக உள்ளது. நெடுந்தீவு 07 மைல்கள் தொலைவில் ஆழ்கடலில் உள்ளது.

நயினாதீவுக்கு வடக்காக ஊர்காவற்றுறைக்கு நெருக்கமாக ஐந்து தீவுகள் இருக்கின்றன.

ஊர்காவற்றுறைக்கு மிக நெருக்கமாக காரைதீவு (காரைநகர்) உள்ளது. இது பொன்னாலைப்பாலம் தாம்போதி பாதை வழி யாழ்ப் பாணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. காரைதீவுக்கு மேற்காக தரைத்தொடர்பு இல்லாமல் படகுப்போக்குவரவை ஆதாரமாகக்கொண்டு இரு மக்கள் வாழ் தீவுகள் இருக்கின்றன.

இவற்றில் ஊர்காவற்றுறைக்கு மிக நெருக்கமாக எழுவைதீவு உள்ளது. மக்கள் வாழ் மிகவும் சிறிய தீவு இது.

இதற்கு அடுத்ததாக அனலைதீவு உள்ளது. இதனுடன் பருத்தித்தீவு, புளியந்தீவு ஆகிய இரு தீவுகள் இணைந்துள்ளன. அனலைதீவு தவிர்ந்த இந்த இருதீவுகளில் மக்களின் தென்னந்தோட்டங்கள் மட்டும் உள்ளன. இவற்றைவிட ஊர்காவற்றுறைக்கு நெருக்கமாக சிறிய பவளப்பாறைத்திட்டில் போத்துக்கேயர் கட்டிய ஹெமன்ஹீல் கோட்டை உள்ளது. இவற்றைவிட யாழ்ப்பாணமாவட்ட எல்லைக்குள் வரும் கச்சதீவு நெடுந்தீவுக்கு அப்பால் 15 மைல்கள் மேற்கே உள் ளது. வன்னி நிலப்பரப்புக்கு நெருக்கமாக யாழ் மாவட்ட எல்லைப் பரப்புக்குவெளியே கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் ஒரு தொகுதி தீவுகள் இருக்கின்றன. யாழ்ப்பாண எல்லைக்குள் கேரதீவு உட்பட்ட சதுப்புத்தீவுகள் தென்மராட்சியில் இருக்கின்றன. இது யாழ்ப் பாணத்தீவுகளின் அடிப்படை புவியியல் தோற்றம். மேற்கில் உள்ள தீவுகளில்தான் சிறிலங்கா படைகள் வலம்புரிக்கு பாரியளவில் தம்மை தயார்படுத்தின. யாழ்ப்பாண நகரை கைப்பற்றும் சிறிலங்கா படை நடவடிக்கைத்தொடரில் ஹைச் டைட் (hight tide) அடுத்து வலம்புரி. சங்குகள் நிறைந்த தீவுகளின் கடலில் சிறப்புச்சங்கான பெறுமதி வாய்ந்த வலம்புரி மக்கள் பலரை (வலம்புரிச்சங்கு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்தது) வாழவைத்திருக்கிறது.

ஆனால் இந்த வலம்புரி அழிப்புக்குள்ளானது.

துருவன்




# இலங்கையில் முதல் உலோகக்கால மாந்தை மனிதன்

இலங்கையின் முதல் உலோகக்கால மனிதன் மாந்தைமனிதன். மாந்தை மனிதனின் தொன்மை 3800 ஆண்டுகள். இதனைத் தெரிவித்திருப்பவர் இலங் கைத்தொல்லியல் திணைக் கள முன்னாள் ஆணை யாளரும் தென்னாசியாவில் முதன்மையான வரலாற்று முற்கால (Prehistory) தொல்லியல் ஆய்வாளர் சிரான்-யு-தெரனியகல-இவரே இலங்கையின் முது தொன்மை மனித மூதாதை கள் 125000 ஆண்டுகட்டு முற்பட்டவர்கள் என்பதை சான்றுகளுடன் முன்வைத்தவர்.

## மாந்தை

தமிழர் தாயகத்தின் மேற்கு மாவட்டமான மன்னாரில் கடற்கரையோர மாக இருந்த பண்டைக்கால துறைமுக நகரம் மாந்தை - இது தமிழகத்தின் துறை முகங்களைவிட அதிகளவு வெளிநாட்டு வணிகத்தை மேற்கொண்டு வந்ததாக தொல்லியல் ஆய்வுகளில் இருந்து தெரிகிறது. இலங் கைத்தீவின் முதல் துறை முகமாகவும் மாந்தையே விளங்கியுள்ளது. அத்துடன் 28000 ஆண்டுகளில் தொடங்கும் குறுணிக்கற் காலத்திலிருந்து இங்கு மனித வாழ்க்கை தொடங் கியதற்கான சான்றுகள் மாந்தையில் எடுக்கப்பட்டன. மாந்தையின் எழுச்சியை சித்திரிப்பதாக திருக்கேதீஸ் வரம் கோவிலும் அதன் மீது தமிழக சைவ நாயன்மார் களான திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி. ஆகியோர் தேவாரம் பாடியதும் அமை கின்றது. மாந்தை சிங்கள மன்னர்களுக்கும் துறை முகமாக விளங்கியதற்கு சான்றாக கல்வெட்டுகள் இருக்கின்றன.

கடந்த நூற்றாண்டு ஆரம்பம் முதல் வெளிநாட்டு தொல்லியல் ஆய்வாளர்கள் மாந்தையில் தொல்லியல் ஆய்வுகளை ஆரம்பித்தனர். இதன்போது குறுணிக்கற் கால மனிதர்கள் பயன்படுத் திய கோடரிக்கைப்பிடியாக பயன்படுத்திய கடற்பசு (டுகோங்) என்ற கடலுயிரின் எலும்பு கிடைத்தது. அதன்பின் தொடர்ந்து தொல்லியல் ஆய்வு நடைபெற்றது.

## மாந்தை மனிதன்.

1950களில் இலங் கைத் தொல்லியல் திணைக்களம் மாந்தையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டது. தொல்லியல் திணைக்களத்தைச்சேர்ந்த சண்முகநாதன் தலைமை யில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது நீளக்கிடத்தி அடக்கம்செய்யப்பட்ட எலும்புக்கூடு ஒன்று எடுக்கப்பட்டது. மேற்பரப் பிலிருந்து 4அடி 8அங்குலம் ஆழத்தில் இந்த எலும்புக் கூடு எடுக்கப்பட்டது. மாந்தை நகர எல்லைக்கு வெளியே மேற்குக் கிழக் காக இந்த எலும்புக்கூடு கிடந்தது. அதன் நீளம் 5அடி. அதன் கால்புறத்தில் இரு சட்டிகள் இருந்துள் ளன. அத்துடன் செம்புத் துண்டு ஒன்றும் கிடக்கக் காணப்பட்டது. இந்த எலும்புக்கூடு சிறிலங்கா தொல்லியல் திணைக்களத் தினால் கொண்டுசெல்லப் பட்டது. அதுபற்றி நீண்ட ஆய்வுநடந்தது. ஆய்வு அமெரிக்கப் பல்கலைக்கழகம ஒன்றினால் செய்யப்பட்டது. ஆனால் அதன் அறிக்கை எதுவும் வெளியாகவில்லை. எலும்புக்கூடு எடுக்கப்பட்ட காலத்தில் அது திராவிட மூதாதைகளான அவுஸ்ர லொயிட் (race) இனக் குழுவுக்குரியது என்ற தகவல் வெளியானது. அண்மையில் இதன் சில தகவல்கள் சிறான் தெரனியகலவினால் வெளி யிடப்பட்டது. சண்டே ரைம்ஸ் ஏட்டுக்கு வழங்கிய நேர்காணலில் தெரனியகல.

"இலங்கையின் முதல் உலோகக்கால மனிதன் மாந்தைமனிதன். 3800 ஆண்டுகள் தொன்மை யானதாக காலக்கணிப்பு மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இம்மனித எலும்புக்கூடு உடன் எடுக்கப்பட்ட செம்புதான் இலங்கையில் மூத்த உலோகப்பயன்பாட்டுச் சுவடாகும்." என்றார்.இந்த மனிதன் இலங்கையின் முதல் உலோகக்கால மனிதன் என்பதுடன் இம்மனிதன் வரலாற்று முன்காலத்துக்குரிய குறுணிக்கற்கால மனிதனுமாவான் இந்த செம்புத்துண்டு மாந்தைவழியாக வெளியேறியிருந்திருக் கிறது. திருகோணமலை யில் செம்புத்தாது படிவங்கள் இயற்கை வளமாக உள்ளன. 3800 ஆண்டுகளின் முன்பாகவே அது வெளிப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுவே வெளியான தகவல். ஆனால், முழுமையான அறிக்கை வெளியாக வில்லை. இதனை தெரனியகலயே ஒப்புக் கொண்டிருக்கிறார். இலங்கையின் முதல் உலோகக்கால மனிதனின் முழு அறிக்கை வெளியிடப்படாததன் மர்மம் என்ன என்பது இதன் பின்னணியில் பல மர்மங்கள் இருப்பதை தெளிவாக்குகின்றது. அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம் மாந்தையில் தொலலியல் ஆய்வுகளை மேற்கொள்ள முன்வந்தது. இது சமாதான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி. முதலில் சிறிலங்கா தொல் லியல் திணைக்களம் இதற்கு உடன்பட்டு பின்னர் இதற்கு மறுப்புத்தெரி வித்தது.

ஐரோப்பிய நாடு ஒன்றின் ஆய்வாளர்கள் இந்த ஆய்வினை மேற் கொள்ள முன்வந்தனர். மாந்தையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை வெளியிடப்படாது மறைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டு ஆய்வாளர் களின் ஆய்வுகள் தமிழரின் தொன்மையை வெளிப்படுத் தும் சான்றுகளை பக்கச் சார்பின்றி வெளிப்படுத்தி விடும் என்பதே இந்த ஆய்வுத்தடைக்குக்காரண மாகும். அனுராதபுரத்தில் பிரிட்டன் தொல்லியல் ஆய்வாளர் அல்ச்சின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் கிடைத்த தொல்லியல் சான்றுகளில் தமிழின் தொன்மையான எழுத்து களை கொண்ட மட்பாண் டங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் சிறிலங்கா அரசின் அழுத்தத்தால் அல்ச்சினால் எடுக்கப்பட்ட தமிழ் வரி வடிவ எழுத்து மட்பாண்ட விபரங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டன. இதனை தமிழக வரலாற்றாசிரியர் ஒருவர் அறிந்து அவரால் ஈழத்தமிழ் தமிழ்வரலாற்றா சிரியர் ஒருவருக்கு தெரிவிக்கப்பட்டது. இப்படி யாகவே மாந்தையின் தொல்லியல் சான்று அறிக்கை மறைக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் மாந்தை மனிதனின் தொன்மையைப் புரிந்துகொள்ளமுடியும்.

குரலோன்

# விழிகளைத் தேடி

அண்மையில் 'ஆயிஷா' என்றொரு நல்ல புத்தகம், மிகக் குறைந்தவிலையில் வெளியிடப்பட்டிருக்கிறது. 'அறிவு அமுது' பதிப்பகத்தின் இந்தப்புத்தகத்தை வெளியிட்டு வைத்தனர் கிளிநொச்சி கல்வி வலயத்தினர். இதில் முக்கியமாக, ஆர்வத்தோடு இந்தப் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வை சிறப்பாகச் செய்யப் பாடுபட்டவர் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம அவர்கள். உண்மையில் இது பாராட்டவேண்டியது. அன்று பெருந்திரளாக ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் மாணவர்களும் ஆர்வலர்களும் கூடியிருந்தனர். புத்தகத்தையும் வாங்கிச்சென்றனர்.

இது நல்லதொரு முன்மாதிரி.

நிச்சயம் எல்லோரும் படிக்கவேண்டியது ஆயிஷாவை. அதிலும் ஆசிரியர்கள் கட்டாயம் படித்திருக்கவேவேண்டும். ஆயிஷா இதுவரையில் பத்துக்கு மேற்பட்ட மொழிகளில் பயணித்திருப்பதாக தகவல். தமிழில்கூட எட்டுத்தடவைகள், வெவ்வேறு இதழ்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்களில் மீளமீள பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஆயிஷாவின் சிறப்பு அப்படி. ஆயிஷாவின் தேவை அவ்வாறு.

ஆனால், இங்கேயொரு வேடிக்கை.ஆயிஷா தமிழில் எட்டுத் தடவை வெவ்வேறு ஊடகங்களில் வெளிவந்துள்ளபோதும், நம்மிற் பலரும் அதை அறிந்திருக்கவில்லை. ஆயிஷாவைத் தெரிந்திருக்கவில்லை. இது எவ்வளவு கொடுமையானது? எவ்வளவு வெட்கக்கேடானது.

ஆயிஷாவை அறியாதிருப்பது பெருங்குற்றம் என்றிங்கே சொல்லவில்லை. ஆனால், இப்படி குறுகிய காலத்தில் ஒருவிடயம் பல இடங்களிலும் மீள மீள முன்மொழியப்பட்டிருக்கிறது. நாங்கள் அதனை அறியவில்லையென்றால் அது எப்படி? என்பதுதான் இங்கேயுள்ள கேள்வி.

எங்களுடைய பார்வைப் புலம் எப்படியிருக்கிறது? எமது அறிதற்தளம் எவ்வாறுள்ளது? எங்களின் ஈடுபாடும் தேடலும் என்னமாதிரியிருக்கிறது?

ஆயிஷா முதலில் வந்தது 'கணையாழி'யில் பிறகு 'எங்களுக்குத் தெரியுமா' என்றொரு அறிவியற் தகவல் நூலில். அதன் பின் 'நெம்பு' வில் பிறகு'சரிநிகரில்' அதன்பிறகு நாற்றுவில் அதற்கிடையில் 'பதி எனும் மனிதனின் மரணம் குறித்து' என்ற சிறுகதை நூலில். அதற்குப் பின் 'ஏன் எப்படி' என்ற அறிவியற் தகவற்புத்தகத்தில். இப்போது அறிவு அமுது பதிப்பகத்தின் தனிவெளியீட்டில்.

இப்பொழுது, இந்தக் குறிப்புரையை எழுதிக்கொண்டிருக்கும் போது நண்பர் ஒருவர் ஆயிஷாவைப் பற்றிச்சொல்கிறார். அவருடைய தகவலின்படி இதுவரையில் 'ஆயிஷா' தமிழில் மட்டும் இருபது பதிப்பைக் கண்டிருக்கிறதாம்.

தமிழ் நாட்டில் அது திரும்பத் திரும்ப பல ஊடகங்களிலும் வெளியாகியிருக்கிறது. தொடர்ந்தும் வெளியாகும் என்கிறார் நண்பர்.

ஆயிஷாவை குறும்படமாகவும் எடுத்திருக்கிறார்கள். இன்னமும் அதைப் பார்க்கக்கிடைக்கவில்லை. 'குட்டியைப் போல அதுவும் வித்தியாசமாக, வேறுபட்ட சிறப்புடனிருக்கும் என்று மட்டும் நிச்சயம் சொல்லலாம்,

எத்தனையோ படங்கள் வருகின்றன. எதையெதையெல்லாமோ கொண்டுவருகிறார்கள். ஆயிஷாவை மட்டும் கொண்டுவரக் காணோம்.

ஆயிஷா இப்படிப்பல பதிப்புகள் வரக்காரணம் அதன் சிறப்பும் அதனுடைய வெளிப்பாட்டு விதமும்தான்.

இப்போதேனும் எங்களுடைய சூழலில் பொதுவான பரந்த சூழலில் 'ஆயிஷா' அறிமுகமாகியிருக்கிறது. அதற்காக மகிழலாம்.

ஆனால், இதேபோல பல நல்லநூல்கள் அறியப்படாமலிருக்கின்றன. அதுதான் தொடர்ந்தும் கவலையளிப்பன.

எத்தனை துறைகளில் எத்தனையெத்தனை விதமான நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவகையான கண்ணோட்டம். ஒவ்வொன்றிலும் வெவ்வேறு புதினங்கள். வேறு வேறு அணுகு முறைகள். தனித்தனி அனுபவங்கள். புதிய புதிய விடயங்கள். கல்வி, பிள்ளை வளர்ப்புப்பற்றிக கூட தமிழில் புத்தகங்கள் பல வந்துள்ளன. ஆனால் நாங்கள் அவற்றை வாங்குவதும் குறைவு. படிப்பதும் குறைவு. ஒரே செக்குமாட்டுச்சூத்திரத் தனத்தில் சுழன்றுகொண்டிருப்போம். எம்மைச்சுற்றி வளர்ந்துகொண்டிருக்கும் உலகத்தைப்பற்றி புரிந்து கொள்ளாமல்.

பொதுவாகவே வளர்ச்சிபற்றிய புரிதல் எமக்கில்லை என்றுதான் கூறவேண்டும். வளர்ச்சி பற்றி அக்கறையும எங்களுக்குக் குறைவே. சிலரிடம் மட்டும் அது இருந்தால் போதாது. அது பலரிடமாகப் பெருகவேண்டும். அந்தச் சிந்தனை வலுத்துப் பெருகவேணும.

வளர்ச்சிக்கான சிந்தனைப் பரிமாற்றத்தில் ஊடகங்களின் பங்கு முக்கியம்.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஊடகங்களை பொழுதுபோக்குச்சாதனமாகப் பாவிக்கும் பெரும்போக்கைக்கொண்டவர்களாகவேயிருக்கின்றனர். அவற்றை வேறு சமூகங்கள் அறிவியற்தகவற் சாதனங்களாகவும் அனுபவப்பதிவுச்சாதனங்களாகவுந்தான் பெரிதும் பயன்படுத்துகின்றன. மகிழ்வூட்டலுக்கு அவை இடமளிப்பது மூன்றாம் நிலையிலேயே. நாங்கள் அதனையே முதன் நிலையில் வைத்திருக்கிறோம்.

தவிர, எமக்குத்தேவையென்றால், அந்தத் தேவைப்படும் தேவைக்குரிய, தேவையான பகுதியை மட்டுமே அல்லது நூலைமட்டுமே கவனிக்கும் பழக்கத்திலுள்ளவர்கள். பல தளங்களிலும் பலவற்றில் அறிவும் பரீட்சயமுடையோரும் இருக்கிறார்கள்தான். ஆனால் குறைவு. அதிலும் தரமான விடயங்களைத் தேடிச் சேகரிப்போர் குறைவிலும் குறைவு.

இப்படியென்றால் எப்படி அடுத்ததலைமுறை ஆக்கத்திறனுடன் அறிவுவிருத்தியுடன் வரமுடியும்?

பாருங்கள், கல்வியில்கூட பலபுத்தகங்கள் வந்துள்ளன. நிச்சயமாக அவை பரீட்சைக்கு மட்டும் படிப்பதற்குரியவையல்ல. பொதுவாக எமது கல்வி நிலைமைகள் எவ்வாறிருக்கின்றன. அவற்றை பயன்பொருத்தமாக எப்படி மாற்றலாம். எமது சமூக நிலைமையென்ன? என நடைமுறை சார்ந்த சிந்தனையை கருத்துகளைக் கொண்டவை அந்தப் புத்தகங்கள். ஆனால், அவற்றை யாரும் வாங்குவதாயில்லை. காரணம், அவற்றைப் படித்து எந்தப்பரீட்சையை எழுதுவது? எத்தப்பட்டத்தைப் பெறுவது? அவற்றால் எப்படிச் சம்பள உயர்வுகிட்டும்? கல்வித் தகைமை, உத்தியோக உயர்வு என்பவற்றுக்கு அப்பாலானது இது.

இப்படியான குறுகிய சிந்தனைப் போக்குத்தான் இன்று தடிப்பேறிப்போயுள்ளது. எல்லோரையும் விடவும் ஆசிரியர்கள்தான் எப்போதும் புதிது புதிதாக அறிந்துகொணடேயிருக்க வேண்டியவர்கள். அவர்கள்தான் எப்பொழுதும் இளைய புதிய தலைமுறையின் முதல் வழிகாட்டிகள். அந்தப் பொறுப்பிலுள்ளவர்கள்.

இளையதலைமுறை எப்போதும் கேள்விகளை எழுப்பியபடியிருக்கும். அறிவதில்தான் அதன் ஆர்வமிருக்கும். அறியத்தான் அது பள்ளிக்கு வருகிறது. பாடங்கேட்கிறது. அதற்காகத்தான் பாடசாலை அதற்காகவே ஆசிரியம்.

இளையதலைமுறை என்பது கூர்ப்புவிதியின்படி புதியதாக, இன்னும் அறிவுத்திறன் கூடியதாக இருக்கும். ஆகவே அது புதிதாகச் சிந்திக்கும். அந்தச் சிந்தனைக்கேற்ப அது கேட்கும் கேள்வியுமிருக்கும். அதன் வலுவுமிருக்கும்.

அது எப்போதும் தான் முன்செல்ல எங்களுடைய அனுபவத்தை அறிவுச் சேமிப்பைக் கேட்கிறது. அதுவே கல்வி. அததுவே அதற்குத்தேவை. அப்படியென்றால் நாங்கள் அதைப் பரந்த தளத்தில் தேடினால் மட்டுமே அதற்கு ஈடுகொடுத்து அதன் தேவையை நிறைவேற்ற முடியும.

வெறுமனே பாடப்புத்தகங்களுக்குள் மட்டும் நின்று அதனை வழங்க முடியாது. பாடப்புத்தகங்கள் ஓர் அடிப்படைக்குரியவை. ஆரம்ப நிலைக்குரியவை.

பாடப்புத்தகங்கள் மட்டும் ஒரு மனிதனுக்குப் போதுமென்றால் அதற்காக தொடர்ந்து இவ்வளவு தொகையாகப் புத்தகங்களும் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, வீடியோ, இதழ்கள் அரங்குகள், போன்றவையும்.

வாழ்க்கை பாடப்புத்தகங்களுக்கும் அப்பால் வேர்கொண்டது, விரிவுடையது. எதிர்பாராத திசைகளிலிருந்து கிளம்பிவரும் சிந்தனைக்கு வலுவூட்டத்தயாரான அறிவுத் தராதரம் ஆசிரியத்துவத்திற்கு இருக்கவேணும்.

முளையிலே கிள்ளுவதோ, நசிப்பதோ, பாராமுகமாக விடுவதோ நல்லதல்ல. ஆனால், மிக இளம் பராயத்திலேயே பள்ளிகளில் வடுக்கண்ட அனுபவமுடையவர்கள் ஏராளமுண்டு. கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு, அறிதலின் முனைபுக்குரிய அரவணைப்பும் அறிவூட்டலும் பல சந்தர்ப்பங்களிலும் இல்லாமற்போகிறது.

கற்பித்தல் முறைகள் மாறலாம். அதுபற்றிய கருத்தூட்டல் அமர்வுகள் நடக்கலாம். ஆனால் நடைமுறையில் எல்லோருமே பழையகதைதான். எதிர்மறைதான்.

இதற்கு பிரதான காரணம் ஆசிரியர்களிடத்தில் மனவிரிவு, புதிய அறிவின் பரம்பல்போன்றவை குறைபாட்டுடன் இருப்பதே.

உண்மையில் புதியதொரு அணுகுமுறையொன்றிருக்குமானால், எங்களின் மாணவர்கள், ஏன் நாங்களே புதிய கண்டுபிடிப்புகளுக்கும் புதிய உற்பத்திகளுக்கும் முயன்றிருப்போமே.

இதெல்லாம் ஏற்படாமைக்கு என்ன காரணம்? எங்களிடத்தில் சீழும் புண்ணும் இன்னுமிருக்கிறது. அதற்கு முதலில் சிகிச்சை செய்வோம். ●

**வெளிவாசல்பாலன்**

> பொதுவாகவே வளர்ச்சி பற்றிய புரிதல் எமக்கில்லை என்றுதான் கூறவேண்டும். வளர்ச்சி பற்றி அக்கறையும் எங்களுக்குக் குறைவே. சிலரிடம் மட்டும் அது இருந்தால் போதாது. அது பலரிடமாகப் பெருகவேண்டும். அந்தச் சிந்தனை வலுத்துப் பெருகவேணும். வளர்ச்சிக்கான சிந்தனைப் பரிமாற்றத்தில் ஊடகங்களின் பங்கு முக்கியம்.

# சிறார்களின் நெருக்கீடுகள் கவனிக்கப்பட வேண்டும்

எப்போதும் மனித உறவுகள் மனித உணர்வுகளில் மிதப்பவை, உருவாகுபவை, எனவே நாம் அவ்வுணர்வுகளை மதிக்கப்பழகிக்கொள்ளவேண்டும். பிறரைக்குறைத்து மதிப்பிடுவது, உறவைப்பாதிக்கும் வகையில் அலட்சியமாகப்பேசுவது, இழிவாக விமர்சிப்பது என்பன உறவைப் பாதிக்கும் நஞ்சுகளாகும்.

மனிதநேயத்தை சிறு பராயத்திலேயே பேணிக்காத்து வருவோமானால் இன்றைய சிறுவர்கள் நாளைய உலகை நன்றாக ஆள்வார்கள். வீடுகட்டுவதற்கு அத்திவாரம் சரியானமுறையில் பலமாக அமையவேண்டும். அதுபோலவே சிறுவர்களின் வளர்ச்சியும், விருத்தியும் சரியானமுறையில் அமைவது மிகமுக்கியமானதாகும். சிறுவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் சிறுவர்கள் வாழுகின்ற சூழலானது பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. போர்ச்சூழலின்போது முகாம்களை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்த மக்களின் பெரும்பாலானோர் மது, பாலியல் வல்லுறவு என்பவற்றிற்கு அடிமையாகி சமுகத்தை மாசுபடுத்தினர். இச் செயலானது வளர்ந்தோருக்கு ஏற்படுத்துகின்ற விளைவுகளைவிட சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற விளைவுகள் நீண்டகாலப் பரிணாமங்களை உடையதாகக் காணப்படுகின்றது.

சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் இந்நிலைமைகள் ஓரளவு குறைந்துவிட்ட போதிலும் சிறுவர்கள் உளநெருக்கீடுகளிலிருந்து விடுபட்டதாகத்தெரியவில்லை. பல துறைகளிலும் எம் சமூகம் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும்வேளையில் பெற்றார்கள் தம்பிள்ளைகளை ஏதோ ஒருவிதத்தில் எத்துறையிலாவது சபையில் முன்நிலையிலிருக்கப் பாடுபடுகின்றனர். குறிப்பாக கல்வித்துறையில் சிறியசிறிய விடயங்களில் அதிகூடிய கவனம் செலுத்தும் பெற்றார்களினால் பிள்ளைகள் சுதந்திரமாக இயங்கமுடியாமல் குழம்பிப் போகின்றார்கள். இக்குழப்பத்தினால் கோபம், கலகலப்பற்றநிலை, சோர்வு போன்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாகின்றனர். இவ்வுணர்வுகளை பெற்றார்கள் கவனிக்கத் தவறுகின்றனர்.

இவற்றோடு பெற்றார்களின் மிதமிஞ்சிய ஆசைகளுக்கு சிறுவர்கள் பலியாகின்றனர். பெரும்பாலான பெற்றோர்கள் கிராமப்புறங்களிலிருந்து தம் பிள்ளைகளை நகரப்புறப் பாடசாலைகளில் பலதொகைப் பணம் செலுத்தி சேர்த்துக்கொள்வதோடு மிகச் சிறிய வயதான பிள்ளைகளை பாடசாலைச் சிறுவர் விடுதிகளில் தங்கவும் விட்டுவிடுகின்றனர். இதனால் அப்பிஞ்சு உள்ளத்தில் நெருடல்கள் தோன்றுகின்றன. பயம், கவலை, ஏக்கம், விரக்தி போன்ற உணர்வுகள் இச்சிறுவர்களைப் பாதிக்கத் தொடங்குகின்றன.

இப்பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றால் அங்கும் ஆசிரியர்களினால் இடர்பாட்டுக்கு இலக்காகின்றனர். மாணவர்களிடம் காட்டும் பாகுபாடு (கிராமம், நகரம், வறுமை, செல்வம்) காரணமாக பாதிக்கப்படும் மாணவர்கள் ஒதுங்கிக்கொள்வதனால் திறமைகள் வெளிக்காட்டாமை, மனக்கசப்பு, வெறுப்பு போன்ற நெருக்கீடுகளுக்கு ஆளாகின்றனர். இவர்கள் பாடசாலை செல்ல அச்சப்படுகின்றனர். பாடசாலை இடைவிலகல் கூட நடந்தேறுகின்றது.

சிறுவர்கள் சந்திக்கின்ற இரு பெரும் சமூகமாக பெற்றார் ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள், இவர்களே இச்சிறுவர்களின் நெருக்கீடுகளை அலசி ஆராய்ந்து மாற்று நடவடிக்கைகள் எடுக்க முன்வரவேண்டும். வளர்ச்சி குன்றிய சமூகத்தில் ஓர் எழுச்சியை ஏற்படுத்த அச்சமூகத்தில் சிந்தனை மாற்றங்கள் வளர்ச்சியடையவேண்டும். பெற்றார்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உளநெருக்கீட்டின் விளைவுகளையும் அவை தோன்றுவதற்கான சூழ்நிலைகளையும் கண்டறியத்தக்க அறிவுரைகள் சான்றோர்களினால் வழங்குதல் அவசியமாகின்றது. தமிழீழத்தில் வாழுகின்ற அறிவுடையவர்கள் எல்லோரும் பண்பாளர்களாக விளங்கினால் நாடும் ஏற்றம் பெறும் மக்களும் பயனடைவார்கள்.

**அகவிழி**

# மீண்டும் பிரகாசிக்கும் ஜெயசூரியா...!

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியா மீண்டும் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளமை சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு உத்வேகமாக அமைந்துள்ளது.

அவரின் அண்மைக் கால துடுப்பாட்டதிறமை அணியை வெற்றி பெற வைத்துள்ளதுடன் கௌரவமான தோல்விக்கும் காரணமாக அமைந்து வருகிறது.

அண்மையில் நிறைவு பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவர் பெற்ற இரட்டைச் சதம் (253) அணியை முதலாவது போட்டியில் வெற்றிபெற வைத்ததுடன் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்சில் பெற்ற சதம் (107) பாகிஸ்தான் அணியை நெருக்கடிக்கும் உள்ளாக்கியது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அணியில் நிலைத்திருப்பாரா என்ற கேள்வி அவர் மீது எழுந்த போதும் அவர் தனது இருப்பை பந்துவீச்சின் மூலம் தங்க வைத்திருந்தார்.

ஆனாலும் துடுப்பாட்டத்தில் சோபிக்காது போனது அவரது பெரும் குறையாகவே காணப்பட்டது.

இந்நிலையில் அணித் தலைவர் அத்தப்பத்து அவர் மீது வைத்துள்ள நம்பிக்கை ஜெயசூரியாவை அணியில் இருந்து நீக்குவதற்கு தடையாக இருந்தது. அதுவே அவர் அணியில் நிலைத்திருக்கவும் காரணமானது.

அதனால் அணித் தலைவருக்கு மிகவும் விருப்பப்பட்டவராக திகழும் ஜெயசூரியா அவரை ஏமாற்றாது செயற்பட்டு வருவது அணிக்கு மேலும் உத்வேகத்தை கொடுத்துள்ளது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் ஜெய சூரியா ஒருநாள் போட்டி என்றாலும், டெஸ்ட்போட்டி என்றாலும் தனது துடுப்பாட்ட பாணியை அதிரடியாகவே ஆரம்பிக்கின்றார். இது எதிரணிக்கு ஆரம்பம் முதலே நெருக்கடியை கொடுத்து விடுவதுடன் அவரை களத்தில் இருந்து



அகற்றுவதற்கு ஒரு போராட்டமே நடாத்த வேண்டி ஏற்படுகின்றது.

தென்னாபிரிக்க அணி இவ் ஆண்டு நடுப்பகுதியில் சிறிலங்காவுக்கான சுற்றுலாவை மேற்கொண்ட போது வீழ்ச்சிப் போக்கில் இருந்த சனத்ஜெயசூரியாவின் துடுப்பாட்டம். பிரகாசிக்கத் தொடங்கியதுடன் அப் போட்டித்தொடரில் தொடர் நாயகனாகவும் தெரிவானார்.



அதனைத் தொடர்ந்து நடை பெற்ற ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டி என்பவற்றில் சிறப்பாக செயற்பட்ட ஜெய சூரியா சிறிலங்கா அணிக்கு மீண்டும் நம்பிக்கைக் குரியவராக மாறியுள்ளமை அந்நாட்டு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மொத்தத்தில் சகல துறை ஆட்டக்காரராக விளங்கும் ஜெயசூரியா பந்துவீச்சில் முரளிதரன் இல்லாத குறையையும் நீக்கிவிடும் வல்லவராகவும் திகழ்கின்றார்.

தற்போது அவருக்கு வயதாகி வருவதால் அணியில் எத்தனை காலம் நீடிப்பார் என்பது கேள்வியான விடயமே. ஆனாலும் 2007ஆம் ஆண்டுநடை பெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வரை அணியில் நிலைத்திருந்து உலகக்கிண்ணத்தை இலங்கை அணிக்கு பெற்றுக் கொடுப்பதே இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் எதிர்காலத்தில் சிறிலங்கா அணி ஜெயசூரியாபோன்ற ஒரு வீரரை பெற்றுக்கொள்ளுமா? என்பதே இன்று பெரும் கேள்வியாகவுள்ளது.

# உயர்வான இடத்தில் பில்லிபௌடன்

கிரிக்கெட் போட்டிகளில் நடுவர்களாக பல நாடுகளைச் சேர்ந்தோர் பணியாற்றுகின்றனர். அந்த வகையில் அண்மை நாட்களில் அனைவரினாலும் பேசப்படும் ஒருவராக நியூசிலாந்தைச் சேர்ந்த பில்லி பௌடன் திகழ்கிறார். பெரும்பாலும் அவரின் தீர்ப்பு சரியானதாக காணப்படுவதால் தீர்ப்பாளர்கள் வரிசையில் அவர் உயர்ந்த இடத்தை அடைந்துள்ளார். எனினும் அவர் ஆட்டத்தின் போது "பவுண்டரிகள்" "ரண் அவுட்" முறை ஆட்டமிழப்புகள் போன்றவற்றுக்கு சைகை காட்டுவது ஏனைய நடுவர்களிலிருந்து வேறுபட்டிருப்பதை காணமுடிகிறது. இதனால் வீரர்களினதும் ரசிகர்களினதும் பெரும் ஆதரவைப் பெற்றவராகக் காணப்படுகிறார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது, சிலவேளைகளில் நான் சைகை காட்டுவது எனக்கே ஆச்சரியமளிக்கும். எனினும் சில வேளைகளில் ஆட்டமிழப்பை அறிவிக்கும்போது விரலை வளைத்து வைத்திருப்பதும் கையை அரைவாசிக்குமேல் தூக்காமல் இருப்பதற்கும் காரணம் மூட்டுவீக்கத்தினால் அவதிப்படுவதாகும்.



அதனால் இது ஒரு அசாதாரண நிகழ்வாக தமக்குப் படவில்லை எனக் கூறியுள்ளார். அத்துடன் கையையும் விரலையும் அரைவாசியில் காட்டினாலும் வீரர் ஆட்டமிழந்தார். எனக் கருதிச் செல்வது நன்று என்றும் தெரிவிக்கிறார்.

சிறிலங்கா, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் பணியாற்றுவதை மிகவிரும்பும் அவர் இந் நாடுகளில் பணியாற்றினால் வேறு எந்த நாடுகளிலும் பணியாற்றுவது தமக்கு சுலபம் எனக் கூறுகிறார். மேலும் பணியில் ஈடுபடும் போது கலவரப்படாமல் இருப்பதாகவும் அதனால் தனக்கு எந்த ஒரு அழுத்தமும் ஏற்படவில்லை.

வீரர்களுடன் வெளியில் எவ்வளவு அந்யோந்நியமாக இருப்பினும் பணியிலீடுபடும் போது அவதானத்துடனும் கடுமையாகவும் நடந்து கொள்வார்.

ஒருமுறைபாராட்டைப்பெற்று அடுத்தமுறை தவறு செய்தவனாக ஆகலாம். ஆகையால் எப்போதும் அவதானத்துடன் நடந்து கொள்வதாக அவர் தெரிவிக்கிறார். அவரது புலன்கள் திறமுடன் செயல்படும்வரை நடுவராகப்பணியாற்றி பின் வர்ணனையாளராக இருப்பதே தனது இலட்சியம் என்று கூறியுள்ளார்.

(06ஆம் பக்கத்தொடர்ச்சி)

யுத்தத்தால் அழிவுற்ற நிலையில் இருக்கும் எத்தனையோ ஆலயங்களையும் அதனோடு இணைந்த கட்டடங்களையும் புனரமைத்து மக்களின் மத அனுட்டானங்களுக்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். இராணுவ நிலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தலங்களிலிருந்தும் அவற்றின் சுற்றுப்புறங்களிலிருந்தும் படையினரை வெளியேறச்செய்யலாம்.

மக்களின் மத வழிபாட்டிற்கான ஏது நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் மக்களின் முயற்சியாலேயே புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவிடும். அதனைத் தொடர்ந்து சமயத்துடன்இணைந்த பண்பாட்டு கலை அம்சங்களும் வளர்ச்சியடையும். முதலில் அதற்கான புறச்சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். இதனைச் செய்வதை விட்டுவிட்டு நாடாளுமன்றத்திலும் கொழும்பிலும் பணக்கார உயர்தர சமூகங்கள் வாழும் இடங்களிலும் நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்றவற்றை நடத்துவதால் என்ன பயன் ஏற்பட்டு விடப் போகிறது?

நாட்டில் இந்துக்கள் எந்தவொரு இடையூறும் இன்றி தமது விழாக்களைக் கொண்டாடுகிறார்கள் அரசாங்கம் அதற்கு பூரண ஆதரவையும் வழங்குகிறது. என்ற தவறான கருத்துருவாக்கத்தை சர்வதேசத்திற்கு வழங்கவே இவ்வாறான விழாக்கள் உதவப்போகின்றன. இவ்வாறான தொரு அபிப் பிராயத்தை ஏற்படுத்துவதில் கொழும்பிலிருந்து இயங்கும் சில இந்துமத அமைப்புக்களும் முனைப்பாக உள்ளன.

நாடாளுமன்றத்தில் வாணிவிழா இடம் பெற்றமையுடன் தொடர்புபட்டதும் தமி மக்கள் கவனிக்கவேண்டியமுமான சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது என்று விசனம் அடைந்துள்ளனர்.

இந்து சமய நலன்களை பேணுவதற்கென அமைக்கப்பட்ட அமைச்சினூடாகசாதாரண பொதுமக்களை சென்றடையக் கூடிய செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளனவா என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாயுள்ளோம். நகர்ப்பகுதிகளில் பட்டிமன்றங்கள், இசை விழாக்கள், இலக்கிய விழாக்களை நடத்துவதன் மூலம் சமூகத்தின் எல்லா மட்டத்தினரும் பயனடைகிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும்.

இந்தவகையில் இந்து கலாசார அமைச்சும் மதத்தின் பெயரில் இயங்கும் சில நிறுவனங்களும் தமது செயற்பாடுகளையும் பெறுபேறுகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எத்தனை விழாக்களை நடத்தினோம் என்றில்லாமல் சமூகத் எந்த மட்ட மக்களுக்கு எந்த சேவையைச் செய்துள் வே என்பதையும் பரிசீலித்துப் பார் வேண்டும்! எமது சகோதர மதத களான இஸ்லாமிய சமூகத்தினர் தாம் தமது தேசிய மட்ட விழாவாக கொண்டாடும் மீலாத் விழாவினூடாக எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். அவர்களை பின்பற்றி எமது செயற்பாடுகளை புடம் போட்டுக் கொள்ளவேண்டும்.



22-10-2004 தொடக்கம் 25-10-2004 வரை ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடாத்திய இ.பசுபதி, ப.செந்துாரன் ஞாபகார்த்த வெற்றிக்கேடய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சிறந்த அணியாக தெரிவு செய்யப்பெற்ற கோணாவில் இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியினர்.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 04

### பகுதி -21

அதன் பின் மூன்றாம் வரிசை வர்ணங்களை சரியான இடத்தில் வைத்துவிட்டான். பின் கறுப்பு வெள்ளை வர்ணங்களையும் உரிய இடத்தில் வைத்துவிட்டான். தட்டின் ஒரு நுனியிலே முழு வர்ண மற்றும் வர்ணப்பெறுமதி அளவுத்திட்டத்தை வைத்துவிட்டான். இதை அவன் மிக மெதுவாகவும் அவதானமாகவும் மௌனமாகவும் செய்தான்.

எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கிய பின் அவற்றில் ஒரு போத்தலை எடுத்துப் பார்த்தான். போத்தலின் உள்ளே பார்த்த அவன். அதற்குள்ளே இருந்த தூரிகையால் ஒரு முறை கலக்கிவிட்டு. வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்துக் கொண்டு. போத்தலில் இருந்த லேபலின் மீது விரல்களை மென்மையாக ஓட்டினான்.

"பேவர்றுள் வர்ணங்கள். சிவப்பு. பேவர்றுள் வர்ணங்கள். மஞ்சள். பேவர் றுள் வர்ணங்கள். நீலம். பேவர் றுள் வர்ணங்கள். கறுப்பு." என்று சொல்லிக் கொண்டே போனான்.

ஒரு கேள்விக்கான ஒரு பகுதி பதில்களாக அவை இருந்தன. அவன் லேபல்களை வாசிக்கிறான் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. உண்மையிலேயே அவை பேவர் றுள் வர்ணங்கள்தான். வர்ணங்கள் சரியான ஒழுங்கில் அடுக்கப்பட்டிருந்ததோடு சரியான பெயர்களையும் அவன் சொன்னான்.

"நல்லது. வர்ணப் போத்தல்களில் உள்ள லேபல்களை வாசிக்க உங்களுக்கு ஏலும். வர்ணங்களுடைய பெயர்களும் உங்களுக்குத் தெரியும்" என்றேன்.

"ஓ...மோ...ம்" நிறுத்தி நிறுத்தி அவன் சொன்னான்.

பின்பு மேசையடியில் அமர்ந்து கொண்டவன் கிறேயோண்கள் இருந்த பெட்டியை தன்னருகே இழுத்தான். பெட்டியின் மீது இருந்த பெயரை வாசித்தான்.

பின்பு அவன் சிவப்பு நிற கிறேயோணை வெளியே எடுத்து அழகான எழுத்தில் "சிவப்பு" என்று எழுதினான். ஏனைய வர்ண கிறேயோண்களை சரியான ஒழுங்கிலும் முழு வர்ணவரிசையிலும் எடுத்து வட்டமாக அவற்றின் பெயர்களை எழுதிக்கொண்டு வந்தான். எழுதும் எழுத்துக்களை சொல்லிக்கொண்டே எழுதியவன் எழுதிமுடிந்ததும் அவற்றை வாசித்தான்.

நான் அவனை அவதானித்துக் கொண்டிருந்தேன். இந்த செயற்பாட்டினூடாக அவன் என்னுடன் தொடர்பாட முயல்வதை புரிந்து கொண்டதை காட்டும் விதத்தில் வாய்மொழி மூலம் பதில்வினை காட்ட முனைந்தேன்.

"நீங்கள் ஒவ்வொரு நிறத்தின் பெயரையும் சொல்லிவிட்டு அதே நிறத்தில் பெயரை எழுதப்போகிறீர்கள் அல்லவா? என்னால் அதைக் காணமுடிகிறது. சி-வ-ப்-பு சேர்ந்து சிவப்பு வருகிறது அல்லவா?"

"ஓமோம்", என்று தயங்கித் தயங்கி மெதுவாகச் சொன்னான்.



# முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பீ.யோசப்



"அதோட.... நீங்கள் வர்ணச் சக்கரம் ஒன்றை கீறுகிறீர்கள், அல்லவா?"

"ஓமோம்" முணுமுணுப்பாகச் சொன்னான்.

அவன் நீர்வர்ணங்கள் கொண்ட பெட்டியைத் தூக்கினான். பெட்டியின் மீது இருந்த வர்த்தகப் பெயரை வாசித்தான்.

முன்பு கடைப்பிடித்த அதே திட்டமான ஒழுங்கிலே ஒரு வரையும் தாளின் மீது திட்டுத்திட்டாக வர்ணங்களைப் பூசினான்.

எனது கருத்து வெளிப்பாடுகளை அவனுடைய செயற்பாடுகளோடு தொடர்புபட்டதாக வைத்துக்கொள்ள நான் முயற்சி செய்தேன். அவன் குறிப்பிட்ட ஒரு விடயத்தை செய்ய வேண்டும் என்று என் மட்டில் நான் கொண்டிருக்கக் கூடிய எந்த ஒரு வேட்கையையும் சுட்டிக் காட்டக் கூடிய எதையும் சொல்லிவிடாமலிருப்பதில் நான் கவனம் செலுத்தினேன். அவனுடைய உணர் தளத்தை நான் புரிந்து கொண்டதை, அவன் புரிந்து கொள்ளும் விதத்திலும் எளிமையாகவும் அவனுக்கு உணர்விக்க முயன்றேன்.

அவன போக்கிலேயே அவனைச் செல்லவிட நான் விரும்பினேன். அவன் வழியிலேயே நானும் செல்லத் தீர்மானித்தேன். ஆரம்பத்திலிருந்தே, அந்த அறையில், ஏற்படும் முன்னேற்றத்துக்கான வேகத்தை அவன்தான் தீர்மானிக்கப்போகிறான் என்பதை அவனுக்கு உணர்த்த முயன்றேன். எங்களுக் கிடையே பகிர்ந்து கொள்ளப்படும் அனுபவங்கள் என்ற காத்திரமானயதார்த்தபூர்வமான அடித் தளத்தில் நின்று அவன் மேற்கொள்ள முயலும் இருவழித் தொடர்பாடலை நான் புரிந்து கொள்வேன் என்பதையும் அவனுக்கு உணர்த்த முயன்றேன். அவன் செய்கின்ற விடயங்கள் அவனுக்குள்ள இயலுமைகள் பற்றி அளவுக்கு மீறி வியப்புக்காட்ட நான் விரும்பவில்லை. அவனுக்கு இந்த விடயங்களை செய்ய முடியும் என்பது வெளிப்படையானது. முன் முயல்வை, குறித்த ஒரு தனிநபரிடம் கையளித்து விட்டால், தனக்கு பெருமளவு பாதுகாப்பு உணர்வைத்தரக் கூடிய இயங்கு தளத்தை அந்த நபரே தெரிந்து கொள்வார். நாங்கள் வெளிபடுத்தக் கூடிய எந்த ஒரு வியப்பு வெளிக்காட்டல் அல்லது பாராட்டையும் தான் இன்ன வழியில்தான் செல்ல வேண்டும் என்பதற்கான வழிகாட்டலாக எடுத்துக் கொண்டுவிடுவார். அவனுக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொண்டதாக இருக்கக் கூடிய ஏனைய விடயப் பரப்புகளை ஆராய்ந்து பார்க்கும் அவன் முயற்சிகளுக்குத் தடையாக அது அமைந்து விடலாம்.

(தொடரும்....)



# திரைவிமர்சனம்

ஒரு பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும் என்பதற்கு ஒரு மாதிரியாக M.குமரன். பெண் ஆளுமையின் வெளிப்பாட்டை பார்ப்பதற்கும் M.குமரன்.

நமது சினிமா சூத்திரத்திலிருந்து கொஞ்சம் வேறுபட்டதாக இப்பொழுது சிலபடங்கள் வருகின்றன. பெயர் பெற்ற நட்சத்திர நடிகர்கள் இன்னமும் சிறுபிள்ளைத்தனமான சினிமாக்களையே தருகிறார்கள். பதிலாக புதிதாக வருகிறவர்கள் கொஞ்சம் புதிதாக செய்து பார்க்க முயற்சிக்கிறார்கள். அதில் ஒன்று M.குமரன்.

ஒருகுத்துச்சண்டை வீரர். அவருக்கு தன்னுடைய துறையில் சாதனைகள் செய்யவேண்டும் என்ற கனவு.

இந்தக் கனவால், தன்னுடைய மனைவியையும் பிள்ளையையும் விட்டுப்பிரிந்து போகிறார். அவருடைய பார்வையில் குடும்பம் சாதனைகளுக்குத் தடையாக இருக்கிறது என்று யோசிக்கிறார்.

பிரிந்துபோனவர் சிங்கப்பூரில், செம்பியனாகிறார். அங்கே அவர் தன்னுடைய விருப்பப்படி பெரிய பள்ளியையும் நடத்துகிறார்.

இங்கே பிரித்துவிடப்பட்ட தாயும் பிள்ளையும் (குமரனும்) 'தனித்துவிடப்பட்டார்' என்ற கலக்கத்தை மீறி எப்படி நிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதுதான் M.குமரனின் முதற்பாதிக்கதையும் காட்சியும்.

M.குமரனின் அம்மாவாக நடிக்கிறார் நதியா.அப்பா, பிரகாஷ் ராஜ் . நதியா தன்னுடைய பிள்ளை எப்படி வளரவேண்டும் என்று விரும்புகிறாரோ அதன்படி, தன் ஆளுமையால் அவனை உருவாக்குகிறார். அவனுடைய விருப்பத்தின்படி, அவனுடைய திறன்களின் வழி அவனை வளர்த்துச்செல்வது இங்கே கவனிக்கவேண்டியது.

படித்த பெண், ஒரு தாய், தனித்துவிடப்பட்ட மனைவி எப்படி வாழ்கிறார். எப்படி வாழவேணும் என்பதற்கு நல்ல மாதிரி.




தமிழ்ச்சினிமா தந்திரங்கள் கொஞ்சம் கலந்துள்ளபோதும் விரலை விட்டு சிறிது விலகியதாக M.குமரன் இருக்கிறது. அதுதான் இங்கே கவனிக்கத்தக்கது.

ஜெயம் படத்தில் நடித்த ரவியே இங்கும் M.குமரனாக வருகிறார். நல்ல துடிப்புடன், தேர்ச்சியுடன் தன்னை அடையாளப்படுத்துகிறார்.

எந்தப் பழியுணர்ச்சியும் கொள்ளாமல், தன் கணவனைப் பற்றிய நினைவோடும் மதிப்போடும் தன் மகனையும் வளர்க்கிறார் நதியா - தாய். தந்தையைக் காணாத மகன். ஏன் தாயும் தந்தையும் பிரிந்தார்கள் என்றறியாத மகன். தாய் தினமும் படுகின்ற பாடுகளைக் காணுகிற மகன். 'தந்தை பெயர் தெரியாமல் பிறந்தவன் நீ" என பிறர் பகிடி பேச துடிக்கின்ற மகன்.

யார் என்ன பேசினாலும் அவற்றை எதிர்கொள்கிறதாய். பொறுப்பற்ற மாணவர்களைப்படிப்பிக்கின்ற இடத்தில்வைத்தே, பிறசூழலில்வைத்தே துணிச்சலோடு ஒழுங்குபடுத்த விளைகிற பெண் - விரிவுரையாளர். தனியாக நின்று படிக்க வேணும் என்று தீர்மானித்த அந்த அடையாளத்தை மிகச்சிறப்பாக செய்து காட்டுகிறார் நதியா. படத்தின் கதையமைப்பில் தாய்ப்பாத்திரத்தின் அமைப்பு கவனத்திற்குரியது. பொருத்தமான நடிகர் தேர்வும்.

தன்னுடைய பிள்ளையை மட்டும் நல்லமுறையில் வளர்த்தால் போதாது. தான் படிப்பிக்கின்ற மாணவர்களையும் அப்படி சிறப்புடன் ஆளாக்கவேண்டும் என்ற பரந்த எண்ணத்துடன் இயங்குகிற தாய் - விரிவுரையாளர். ஆனால், தவிர்க்க வியலாத காரணத்தால் அவர் இடையில் இறந்துபோகிறார். சாகுந்தறுவாயில் தன்னுடைய மகனுக்குத் தந்தையார் எங்கேயிருக்கிறார் என்றும், யாரவர் என்றும் சொல்லி இனி அவருடன் போய்ச் சேர் என்று வழி காட்டி அனுப்புகிறார்... இங்கே கொஞ்சம் யதார்த்தமிகை ஏற்பட்டாலும் அதிகம் அது துருத்தவில்லை. முடிந்தளவுக்கு இயல்புத்தனத்தைக் கையாண்டிருக்கிறார்கள்.

தாயின் விருப்பப்படி, தாயின் சொற்படி, கட்டளைப்படி சிங்கப்பூரிலிருக்கும் தந்தையிடம் செல்கிறார் மகன் - M.குமரன். மகனை வரவேற்கக்காத்திருக்கிறார் தந்தை. தந்தைக்கு மகனைத் தெரியாது. மகனுக்குத் தந்தையைத் தெரியாது. தகவல்பரிமாற்றத் தினடிப் படையில் வரவேற்க விமான நிலையத்தில் வந்திருக்கிறார் தந்தை. எப்படியோ அடையாளம் கண்டு, வரவேற்று வீட்டுக்கு அழைத்துப் போகிறார் அப்பா. வீட்டில் குமரனுக்கு வரவேற்பில்லை. அங்கேயிருப்பது அப்பாவினுடைய இரண்டாவது மனைவியும் அதற்கொரு பிள்ளையாகிய மகளும்.

குமரனுக்கு அதிர்ச்சி, ஆத்திரம் இப்படி நீள்கிறது கதை.

இரண்டு மனைவிகளில் மூத்தவர் கணவரைப் புரிந்துகொண்டு, அவருடைய விருப்பப்படி பிரிந்து சிரமப்பட்டு வாழ்கிறார். அனுதாபத்துக்காக காத்திராமல், ஆளுமையை நிரூபித்து, பெண்களை வலுவூட்டும்படியாக வாழ்ந்து காட்டுகிறார். இரண்டாமவர், வெறுமனே மனைவி குடும்பம் என்ற சுயநல வட்டத்துள் நின்று சிந்திக்கிறார்; செயற்படுகிறார். அதன் விளைவுகளைச்சந்திக்கிறார்.

இரண்டாவது மனைவியால் கடுமையாகப்பாதிக்கப்படுகிற கணவர், தன்னுடைய தாயை தனியே தவிக்கவிட்ட தந்தையை குத்திக்காட்டுகிற மகனால் அவஸ்தைப்படுகிற அப்பா. ஆனாலும் தாயின் விருப்பப்படி தந்தைக்கு எப்போதும் ஆறுதலாகவும் பலமாகவுமிருக்கிறகுமரன்.

பின்பாதி, எத்தனைதான் புத்திசாலித்தனமாக நடந்தாலும் இரண்டு திருமணங்கள் பிரச்சினைக்குரியவை; நிம்மதிக்கேட்டுக்கானவை என்பதைச் சொல்கிறது.

கூடுமானவரையில் M.குமரனை இயல்பாக்க யதார்த்தமாக்க முனைந்திருக்கிறார்கள். சண்டைக்காட்சிகளும பாடலும் கொஞ்சம் கூடித்தான் விட்டன.

தமிழ்ச்சினிமாப் பார்வையாளரைத்தொடர்ந்தும் இப்படியே வைத்திருக்கத்தான் வேணுமா?

ஒவ்வொரு படத்திலும் வருகிற ஒரு சண்டைக் காட்சி ஏறக்குறைய எட்டுத்தொடக்கம் பதின்நான்கு நிமிடங்கள்வரையில் நீள்கிறது. எப்படி அடித்தாலும், அடிவாங்கினாலும், கதாநாயகன் வெல்வர் என்பது முன்பே தெரியும். அப்படியிருந்தும் அவ்வளவு நேரத்துக்கு எப்படித்தான் அந்த கற்பனையான - மிகைப்படுத் தப்பட்ட சண்டைக்காட்சி களைப்பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

ஒரு படத்தில் சிலவேளை ஐந்தாறு சண்டைக்காட்சிகளும் உண்டு. 'கிரி'யில் அப்படித்தான். ஒன்றரை மணிநேரம் அதில் சண்டைக் காட்சிகள்.

சண்டைக் காட்சிகளை இப்படி நீட்டி அடக்குகிறதுக்குப் பதிலாக




வாழ்வில் தரிசனங்களை காட்டலாமே. அது பார்வையாளனை மேலும் அறிவூட்டும். வாழ்வுபற்றி அறிய உதவும்.

எப்படியோ,

M.குமரன், பார்த்தலுக்கு உகந்த படம் தான்.

ஆரதி

# எங்களுக்கு தேவையான மரக்கறிகள் தம்புள்ளயிலிருந்து வரவேண்டியுள்ளது!

## - கிளிநொச்சிச் சந்தையில் மரக்கறி வியாபாரிகளுடனான சந்திப்பு

வன்னிப்பகுதியின் பிரதான சந்தையான கிளிநொச்சிச் சந்தையை யார் சரியாகப்பயன்படுத்துகிறார்கள் என்றால் அது தம்புள்ளயை சேர்ந்த வியாபாரிகள் அல்லது விவசாயிகள் என்றால் அது மிகப்பொருத்தமான விடையே! ஏனெனில் இச்சந்தையில் விற்பனையாகும் மரக்கறிகள் தம்புள்ள சந்தையில் (இலங்கை சர்வதேச பொருளாதார மையம்) இருந்து வந்தவையாகவே உள்ளன. இவ்வாறு வன்னிப்பகுதிக்கு இறக்குமதி செய்யப்படும் மரக்கறிகளில் பெரும்பாலானவை வன்னிப்பகுதியில் முன்னைய காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை. ஏற்றுமதி செய்யப் பட்டவை; தற்போதும் உற்பத்தி செய்யக்கூடியவை. ஏன் தற்போது வன்னிப்பகுதியில் மரக்கறி உற்பத்தி செய்யப்படவில்லையா என நினைக்கும் உங்களின் கேள்வி விளங்குகிறது. எமது கருத்து உற்பத்தி செய்யப்படவில்லை என்பதல்ல. ஒரு முற்றுமுழுதான விவசாயப்பிரதேசம் தனக்குத் தேவையான மரக்கறி வகைகளை, சிறுதானியங்களை பூர்த்தி செய்யாது, பிறிதொரு மாவட்டத்தில் இருந்து இறக்குமதி செய்வது எந்த வகையில் பொருத்தமானது என்பது தான்.

இவ்வாறான கருத்துடன் எமது கிளிநொச்சிச் சந்தையில் பல வருடங்களாக மரக்கறி வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் உள்ளூர் உற்பத்தி மரக்கறிகளுக்கா, வெளிமாவட்ட மரக்கறிகளுக்கா மக்களிடம் மதிப்பு அதிகம் எனவும், இன்று மரக்கறிச்செய்கை வீழ்ச்சிக்கு என்ன காரணம் எனவும் எமது பகுதியில் என்ன மரக்கறிவகைகளை ஏற்றுமதி செய்கிறீர்கள் எனவும் கேட்டோம். அவர்கள் கூறிய கருத்துக்கள் பின் வருமாறு;



திரு.சி.மூர்த்தி-(10 வருடமாக மரக்கறி வியாபாரம் செய்துவருகிறார்)

"எங்களின் சந்தையில் உள்ளூர் மரக்கறிகளுக்கு மதிப்பு குறைவென்றுதான் சொல்லவேண்டும். எமது விவசாயிகள் மரக்கறி கொண்டு வருவது மிக மிக அரிது. அவ்வாறு கொண்டுவருபவர்களும் நோய் தாக்கப்பட்ட மரக்கறிகளாகத்தான் இருக்கும். இவைகளுக்கு என்ன காரணம் என்று தெரியாது. இன்றைக்கு சந்தையில கத்தரிக்காய், 35-ரூபா என்றால் தம்புள்ள கத்தரிக்காய் 40ரூபா விற்கின்றது. மக்கள் காசு அதிகம் என்றாலும் அதைத்தான் வாங்குகின்றார்கள். தரம்தான் முக்கியம். எல்லாம் வெளியில் இருந்துதான் இறக்குமதிசெய்கின்றோம். ஏற்றுமதி என்று எதுவும் இல்லை".



திரு.கரன்.

"எமது மக்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறியை வாங்குமளவிற்கு உள்ளூர் மரக்கறிகள் குறைவு. குறிப்பாக உருளைக்கிழங்கு, லீக்ஸ், கரட், கோவா எல்லாம் இங்கே இல்லை. ஆனால் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான அளவு உள்ளூரில் மரக்கறி உற்பத்திசெய்யப்படுவதில்லை. குறிப்பாக கோவா, எங்களின்பகுதியில் நன்றாக விளையக் கூடியது. ஆனால், இதுவும் வவுனியாவுக்கு அங்கால இருந்துதான் வருகின்றது. இங்கிருந்து எந்த மரக்கறிகளும் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்ததில்லை. மரக்கறி உற்பத்தி செய்யாமைக்குக் காரணம் எமது விவசாயிகளிடம் விவசாயத்தின் மீதான பற்றுகுறைந்து கொண்டுபோகிறது.



திரு.மா.ரவி.

உண்மையிலேயே எங்கட உள்ளூர் மரக்கறிகளுக்கு சந்தையில் நல்லமதிப்பு இருந்ததுதான். ஆனால், இன்று அது பெரிசா இல்லை. அதோட உள்ளூர் மரக்கறி சந்தைக்கு வருகின்றது மிக மிக குறைவு. ஒரு நிகழ்வுக்கு 500Kg மரக்கறி தேவையென்றால் சந்தை முழுதும் எடுத்தாலும் உள்ளூர் ஒரே வகை மரக்கறிகள் எடுக்கமுடியாது. அதனால்தான் இன்று வெளிமாவட்டங்களில் இருந்து பெருமளவு மரக்கறிகளை இறக்குமதி செய்யவேண்டி ஏற்பட்டுள்ளது. இதற்கு முக்கியமாக எமது பகுதியில் விவசாயிகள் எல்லாம் நெல் விதைப்பைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அதில் அவர்களுக்கு இலாபமும் கூடுதல். நேரம் மிச்சம். வயல் விதைத்துவிட்டால் ஏனைய நாட்களில் மேசன், தச்சன் வேலைகள் செய்கின்றார்கள். அது அவர்களுக்கு வருமானம் அதிகம் என நினைக்கிறார்கள். நாங்கள் எங்களிடம் கத்தரிக்காய் செய்கைக்கு ஏற்ற நிலத்தை வைத்துக்கொண்டு தம்புள்ளயில் இருந்து கத்தரிக்காய் கொண்டுவந்து விற்பனை செய்கின்றோம். அடுத்து கூலிப்பிரச்சினை இன்றைக்கு ஒரு நாட்கூலி 400 ரூபாய் வரையில் போகின்றது. இந்த கூலிக்கு ஆக்களை வேலைக்கு அமர்த்தி ஏக்கர் கணக்கில் உற்பத்தி செய்யமுடியாது இருக்கும்.



திருமதி. புஸ்பராணி,

"எங்களின் மக்களுக்கு விலையைப்பற்றி பிரச்சினையில்லை. மரக்கறிதரமானதாக இருக்கவேண்டும். எங்கள் உள்ளூர் உற்பத்தி மரக்கறிகள் கூடுதலாக நோய் பிடித்தவையாக காணப்படுகின்றன. இதனால் வெளிப் பிரதேச மரக்கறிகளை மக்கள் வாங்குகிறார்கள்."



கோ. தங்கம்மா (1977 ஆம் ஆண்டு தொடக்கம் கிளி-சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்துவருகிறார்))

"எமதுபகுதியில் முன்னைய காலங்களில் கூடுதலான மரக்கறிகள் யாழ்ப்பாணம், வவுனியா என பல இடங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஆனால், தற்போது அவ்வாறு செய்யப்படுவதில்லை. முன்னைய காலங்களில் செத்தல்மிளகாய் அதிகளவு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், இப்பொழுது சந்தையில் சிலவேளை பச்சை மிளகாய்க் குத்தட்டுப்பாடு வருகின்றது. எல்லாம் கூலிப் பிரச்சினைதான். எமது விவசாயிகளிடம் பண வசதி இல்லாததும் ஒருபிரச்சினை. எங்களுக்கு தொடர்ந்து மரக்கறி கொண்டுவரும் விவசாயிகளை இப்போதெல்லாம் சந்தைப் பக்கம் காணக்கிடைப்பதில்லை."



திரு. யேசுராசா,

"தம்புள்ள சந்தை நிலைவரத்தின்படி ஒரு கிலோ கோவா,5-15 வரையும்தான் விலை போகும். ஏனெனில் அங்கே அதனை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவு குறைவு. அதற்கேற்ப அரசாங்க உதவிகளும், மானியங்களும் அதிகம். ஆனால், எமது பகுதியில் ஒரு கிலோ கோவா 35 ரூபாவிற்கு போனால்தான் விவசாயிக்கு கட்டுப்படியாகும், இதனால் தம்புள்ளயில் இருந்து மரக்கறி இங்கே கொண்டுவரப்படுகிறது. எங்களின் விவசாயத்துறையை ஊக்கப்படுத்தி நவீனமுறைப்படி செய்தால் நல்ல விளைவைப்பெறலாம். எமது விவசாயிகளுக்கு பணக்கஷ்டம் என்பது முதல் பிரச்சினை."

எங்களுடைய பிரதேச விவசாய உற்பத்தி வீழ்ச்சிக்கு இரண்டு பெரும் காரணங்கள் உண்டு. ஒன்று பொருளாதாரத்தடை மற்றையது இடப்பெயர்வு.

சிறிலங்கா அரசாங்கம் ஒரு தசாப்தத்திற்கு மேலாக எமது பகுதியின் மீது விதித்திருந்த பொருளாதாரத்தடையால் ஏற்பட்ட எரிபொருள், உரம், என்பவற்றின் தட்டுப்பாடு வன்னிப்பகுதியில் இருந்த விவசாயிகளை விவசாய செய்கையை மேற்கொள்ளமுடியாதவாறு செய்தது. இந்நிலையில் அற்பசொற்பமாக மரக்கறிப்பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டே வந்தார்கள். இவ்வாறான நிலையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளினால் இவர்களின் விவசாய நிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியாக மாறியது; விவசாயிகள் கூலித் தொழிலாளர்களாக மாறினார்கள்.

ஒரு கட்டத்தில் வன்னியை வறுமை ஆட்கொண்டபோது கூலித் தொழிலுக்கே கஷ்டம் ஏற்பட்டது. இதனால் அரசினால் வழங்கப்படும் போசாக்கற்ற நிவாரணத்தையும், தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட மானிய உதவிகளையும் நம்பியே இந்த விவசாயிகள் வாழ்ந்தார்கள். இந்நிலை பல ஆண்டுகள் தொடர்ந்ததால் இவர்கள் தங்கி வாழ்பவர்களாகவும் விரக்தியுற்ற வர்களாகவும் மாறினார்கள்.

ஓயாத அலைகள் மூலம் எமது நிலங்கள் மீட்கப்பட்டதன் பின்னர். எமது விவசாய நிலங்கள் நிலக்கண்ணி வெடிகள் நிறைந்து அச்சுறுத்தல் பகுதியாக இருந்தன. சமாதான காலம் தொடங்கி இன்று நான்கு வருடங்கள் ஆனநிலையில் கண்ணி வெடி அச்சுறுத்தல் ஓரளவு குறைந்துள்ளது.

இந்த சமாதான காலம் தொடங்கி நான்கு வருடங்களில் ஒரு விவசாய செய்கைக்கு உகந்த சூழல் ஏற்படவில்லை என்று கூறமுடியாது. ஆனால், விவசாய நடவடிக்கைகள் என்ற வட்டத்துள் நெற்பயிர் மட்டும் செய்யப்படுகின்றது. அதுவும் முன்னைய காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அளவும், விளைவும் இல்லை. ஆனால், மரக்கறிப்பயிர்கள் இன்றும் அற்ப சொற்பமாகவே செய்யப்படுகின்றன. இது பொருளாதாரத் தடைக் காலம், இடப்பெயர்வுக்காலத்தில் ஒரு விவசாயியின் மனநிலை எவ்வாறு இருந்ததோ அதேநிலையில்தான் இன்றும் உள்ளது. அதாவது முன்னைய காலத்தில் வன்னிப் பகுதியில் மரக்கறிப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வெற்றி கண்ட விவசாயிகள் போர்ச் சூழலில் கூலித் தொழிலாளர்களாக மாறிப்போனதுடன் தற்போதைய சூழலிலும் கூலித் தொழிலாளர்களாகவே உள்ளனர். அல்லது பருவகால பயிர்ச்செய்கையாளர்களாக உள்ளார்கள்.

உண்மையில் எமது வன்னிப்பகுதியின் விவசாய உற்பத்தி என்பது முன்னைய காலத்தைவிட தற்போது மிகமிகக் குறைவே. மரக்கறி மட்டுமல்ல; கௌப்பி, பயறு, உழுந்து, கச்சான் கூட இன்று வேறுபிரதேசங்களில் இருந்துதான் இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. பசுமை நிறைந்த எமது மேட்டுநிலங்கள் இன்று பற்றைக்காடுகளாகவும், தரிசு நிலங்களாகவும் உள்ளன. இந்நிலங்கள் உற்பத்தி நிலங்களாக மாறாமைக்குக் காரணம் இடப்பெயர்வு பொருளாதாரத் தடையால் ஏற்பட்ட விரக்தி நிலையில் இருந்தும் நிவாரணம், மானியம் எனும் உதவிகளில் தங்கி வாழ் நிலையில் இருந்தும் மக்கள் விடுபடவில்லையா? அல்லது இவர்கள விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க பண, இயந்திர வசதிகள் இல்லையா?

பெரும்பாலான விவசாயிகளிடம் இரண்டாவது நிலையே காணப்படுகின்றது. அவர்கள் மரக்கறிப்பயிர்ச் செய்கையில் ஈடுபட நிதி, இயந்திர வசதிகள் இல்லை. ஊக்குவிப்பாளர்கள் இல்லை. துறைசார் அபிவிருத்தியாளர்களின் கவனம் நெற்செய்கையின் மீதே உள்ளது எனலாம். மரக்கறிப்பயிர்ச் செய்கையாளர்களின் மீது இவர்களின் கவனம் திரும்பவேண்டிய கட்டாய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்குமென சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படுகின்ற ஊக்குவிப்பு மானியங்கள், கடன்கள் உரியகாலத்தில் சரியான பயனாளிகளுக்கு வழங்கப்படுவதில்லையென்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டு. இனிவரும் காலங்களில் தென்னிலங்கையில் உற்பத்திசெய்யப்படும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதைக்காட்டிலும் எமது வன்னிப்பகுதியின் மரக்கறி,மேட்டு நில சிறுதானியங்களை ஏற்றுமதி செய்பவர்களாக மாறவேண்டும். இது எமது விவசாயிகளின் கைகளில் என்பதை விட விவசாயத் துறைசார் அபிவிருத்தியாளர்களின் கைகளிலும் உள்ளது எனலாம். இந்நிலையை நாம் மாற்ற முற்படாவிட்டால். 'முற்றுமுழுதான விவசாய பிரதேசமாக விளங்கி அதிகளவான விவசாய உள்ளீடுகளை ஏற்றுமதி செய்த வன்னிமண் பச்சை மிளகாய்க்கு தம்புள்ள வாகனத்தை எதிர்பார்க்க வேண்டிய வெட்கக்கேடான நிலைக்கு தள்ளப்படுவோம்.

கிளிநொச்சிச் சந்தையில் கடந்த 02.11.2004ஆம் திகதி விற்பனைக்கு வந்த வன்னி, பிற மாவட்ட மரக்கறிகளின் விபரம்

| மரக்கறி வகை | வன்னி | வெளிமாவட்டம் (தம்புள்ள உட்பட) |
|---|---|---|
| கரட் | - | 577 Kg |
| கோவா | - | 789 Kg |
| லீக்ஸ் | - | 646 Kg |
| கத்தரி | 602 Kg | 441 Kg |
| வெங்காயம் | 557 Kg | 426 Kg |
| தக்காளிப்பழம் | 97 Kg | 187 Kg |
| கருணை | - | 1956Kg |
| மர-கிழங்கு | 239 Kg | 152 Kg |
| உரு-கிழங்கு | - | 2323Kg |
| வெண்டி | 62 Kg | - |
| பயிற்றங்காய் | 92 Kg | - |
| பச்சைமிளகாய் | 260 Kg | 321 Kg |

அருள்

## இலக்கியப் பகிர்வு

(14 பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சூழ்நிலையில்தான் சமகாலத்துத் தேவையை உணர்ந்து அதற்கு இணங்கச் செயற்பட முடிவு எடுத்தார் குகராஜா. மக்களை இலகுவில் சென்றடையக் கூடியதாக நாடகத்தை பயன்படுத்த நினைத்த அவர் வீதிநாடகங்களைத் தயாரிக்க ஆரம்பித்தார்.

"கசிப்பு", "பாராயோ பாரதமே" "விண்ணையும் சாடுவோம்" போன்ற நாடகங்களை பரீட்சார்த்த முயற்சியாகத் தயாரித்தார். இந்த நாடகங்கள் நூற்றுக்கணக்கான தடவை யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெல்லாம் நிகழ்த்திக் காட்டப்பட்டன. காட்டப்பட்ட எல்லா இடங்களிலும் மக்கள் வெகு ஈர்ப்புடன் நாட கங்களைப் பார்த்து ரசித்தார்கள்.

இயல்பாகவே மக்களின் பொருளாதாரக் கஷ்டங்களையும் அவர்களின் தாழ்ந்த நிலையையும் கண்டு வெதும்பும் குகராஜாவின் "விளக்கும் விரல்களும்" "அவள் ஏன் கலங்கு கிறாள்" "புதிய கலர்கள்", போன்ற நாடகங்கள் மேற்குறித்த கருத்தினை வலியுறுத்தின.

மனிதனும் மிருகமும், வந்தது வசந்தம் போன்ற நாடகங்களும் "கவிஞர் முறையின்" வெறியாட்டு நாடகமும் குகராஜாவினால் இயக் கப்பட்டு பல தடவைகள் மேடையேற்றப்பட்டன.

நாடகத்துறையில் ஈடுபாடு போலவே திரைப்படத்துறையிலும் குகராஜாவுக்கு அக்கறை இருந்தது. இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனம் நடத்திய திரைக்கதைப் பிரதித் தேர்வுக்கு "வட்டத்துள்வட்டம் என்னும் திரைப்படப்பிரதி "பி" தரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அத்துடன் "சிவந்த வலை," "கதை இதுதான்" "தியாகங்கள்" போன்ற வீடியோப் படங்களையும் குகராஜா தயாரித்தார்.

இவ்வாறு பல்வேறுதுறைகளில் ஈடுபாடு கொண்ட குகராஜா, நடிகராக, நெறியாளராக, நாடக பிரதி எழுத்தாளராக, தயாரிப்பாளராக, தன் செயற்பாடுகளை விஸ்தரித்தார்.

யாழ்ப்பாணத்தில் மிக பின் தங்கிய வசாவிளான் திடற்புலம் என்னும் கிராமத்தை சொந்த இடமாகக்கொண்ட குகராஜா வறுமையான குடும்பச்சூழ்நிலையைக் கொண்டதால் அடித்தட்டு மக்களின் அவலநிலையை நன்கு புரிந்து கொண்டவர். அதனால்தான் அவரது படைப்புக்களில் அவர்களின் பிரச்சினையே முதன்மைப்படுத்தப்பட்டது.

குகராஜாவின் தகப்பனார் மார்க்கண்டு அந்தக்காலத்தில் பிரபலமான மாபெரும் நாட்டுக் கூத்துக்கலைஞர், தகப்பனாரின் வழியால் குகராஜாவுக்கு ஏற்பட்ட கலை ஆர்வமும். இயல்பான பொருண்மியக் கஷ்டமுமே அவரை ஒரு எதிர் நீச்சல் போடும் நாடகக் கலைஞராக மாற்றியது என அவரது நண்பர்கள் சொல் வார்கள்.

இதன் காரணமாகவே நலிவு பெற்ற இந்த மக்களுக்காக குரல கொடுக்கவேண்டும் என்ற துடிப்பு குகராஜாவுக்கு ஏற்பட்டது. அதனால் அந்த மக்களுக்காக போராடும் ஒரு ஆயுதமாக நாட கத்தை குகராஜா ஏற்றினார்.

இறக்கும்போது குகராஜாவுக்கு வயது 36. உண்மையில் அவர் புடம்போடப்பட்டு மேலும் பலவற்றைச் சாதிக்கக்கூடிய ஆர்வமும், ஆற்றலும் இருந்தது. என்றாலும் காலம் சதிசெய்து விட்டது.

எந்தக் கலையாக இருந்தாலும் அந்தக் கலையில் ஈடுபாடு கொண்ட ஒருவர் வயிறு முட்டச் சாப்பிட்ட பின்னர் சமிபாடு அடைவதற்காகக் குடிக்கும் பானம் போல அதனைப் பாவிக்க மாட்டார்.

கலைகளை அந்தக் கலைகளோடு தொடர்புடையவர்கள் பெரும்பாலும் ஏதாவது கொண்டோடிகளாகவே பயன்படுத்தமுனைவர். அவ்வாறு சொல்வதன் ஊடாக தாமும் திருப்திப் பட்டு அதனை கேட்பவர்களையோ, பார்ப்பவர்களையோ, ரசிப்பவர்களோ பயன் பெறவேண்டும் என்று தான் நினைப்பார்கள்.

அவ்வாறான ஒருவராக குகராஜா இருந்தார் என்பதுதான் மனநிறைவைத்தரும் ஒரு விடயமாகும்.

# இறைமெய்க்கழலடியுடன் இரண்டு வருடங்கள்...

பிறப்பெனும் இறை படைப்பில் 1979 . 04 . 20

இறப்பெனும் இறை கழலில் 11 . 11 . 2002



அமரர்

இறை அன்பன்

## அமிர்தலிங்கம் விக்கினராஜா (விக்கி ஐயா)

"இறைவன் மிக நல்லவன் அவன் உயிர்களை தன் அன்பின் உருவமாகவே படைக்கின்றான். அத்துடன் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எல்லாவற்றையுமே சேர்த்தான"

*விழிகள் கரைகின்றன*
*வேதனை முடியுதே இல்லை*
*நேச நெஞ்சமே- உம்*
*பாச உறவுகளைத் தவிக்கவிட்டுச்*
*சென்றதெங்கே?*

*பாதங்கள் பட்டால்*
*பச்சை மண்ணும்-நீர்*
*மீண்டும் ஓர் தடவை*
*வேண்டும் என்று*
*தேடித் தவிக்கும்*
*அவ்வளவு மென்மையை*
*யார் கற்றுத்தந்தார்?*

*புன்னகைக்கு விலையில்லை*
*புரிய வைத்தாய்*
*நீ அல்லவா?*
*கண்ணீருக்கும் விலை*
*இல்லை என்பது தெரிகிறது.*

*செய்வதறியாமல் திகைத்து*
*நிற்கும் உம்*
*பாசங்களை, நேச*
*நெஞ்சங்களைஓர்தடவை*
*பாராயோ மீள*
*சென்ற நாட்கள் எழுநூற்றி*
*இருபது நாள் எமக்கு*
*ஏழேழு யுகங்கள் மாதிரி*

*மானிடத்தின் முடிவு மரணமென்று எத்தனை தத்துவங்கள் சொன்னாலும் சோகத்தில் இங்கு இதயங்கள் யாகம் நடத்துகின்றன. இறையடியை நாடினாலும் என்றும் எம்மை விட்டகலமாட்டாய் உம் துணிவோடு தொடர்ந்து நாம்.*

அ.சிவலோக நாதக்குருக்கள், ஜெயம் ஐயா,
நாகதம்பிரான் கோவில், புளியம் பொக்கணை.

(5236)

## வெள்ளம்

(13 பக்கத் தொடர்ச்சி)

மன்னன் வீரர்கள் சகிதம் அணை கட்டுதலை பார்வையிட்டுக்கொண்டுவந்தான். செம்மனச்செல்வியின் பகுதிமட்டும் அடைபடாதது கண்டு கொதித்தெழுந்தான். கூலியாளாக வந்திருப்பது சிவன் என்று தெரியாது மன்னன் தன் பிரம்பால் ஓங்கி அடித்தான். அந்த அடி எல்லோர் முதுகிலும் விழுந்தது."

சிறுவனாக இருந்த போது அந்தக்கதையை ஒரு முறை ஆச்சி பிரகலாதனுக்கு சொல்லியிருக்கிறாள்.

▲▲▲

ஆற்றையேன் தாள் வாரத்தில எத்தினை நாளைக் குத்தான். அவையின்ர நச்சரிப்புக்களும் கிண்டல்களும் தாங்க முடியாதவைகளாகி...

வெள்ளம் வத்தும் வத்து மெண்டு பாத்தா அதுவும் வத்திற பாடாக் காணேல்ல. வெள்ளம் போட்டு எத்தினமாதம் கடந்து போன பிறகும் வெள்ளத்தின் தேக்கம் ஊரையே தின்றிருந்தது. ஊரின் தெருக்களை ஊடறுத்து பாய்ந்த் வெள்ளம். வீதிகள் வீடுகள், கோவில்கள், பள்ளிகள், மரம், செடி, கொடிகள், என்று எதிர்ப்பட்டவற்றைத் தன்னுள் அமிழ்த்திக்கொண்டது.

அடிசாய்ந்து பெயர்ந்து போன ஒவ்வொரு எச்சங்களும் தம்மை இனம்காட்டிக்கொள்ள அவைகளால் முடியாமல் போயிற்று. முகமிழந்தநிலையில் தேடுவாரற்றுப்போயின. அழகின் கொலுவிழந்துபேய் உறங்கும் காடாகிறது ஊர். தெருவெங்கும் வெள்ளம் நிறைந்த குட்டைகளே இருந்தன.

வெள்ளம் நின்ற நின்ற இடங்களிலெல்லாம் நாற்றமே வீசியது. வெள்ளத்தின் பிடியுள் சிக்குண்ட உயிர்களின் பிரதி பலிப்புக்களாக அவை இருக்கலாம்...

இவற்றின் நடுவே எப்படி வாழ்க்கை..? எட்டாக் கனியாகிப்போன தன் நிலை எண்ணிப் புழுங்கியது இதயம். வெள்ளம் பற்றிய பிரக்ஞையோடுதான் மனிதரெல்லாம். அதிகம் சிந்திக்கவேண்டியதாயிற்று.

வெள்ளம் வத்தும் வத்து மெண்டு கொக்கு குடல் வத்திச் செத்தகதையாய் போய்விடுமோ...?

விடிய வெள்ளணையா ஆச்சி நித்திரைப்பாயிலேயே ஏதோ முணுமுணுத்தபடிதான் கண் விழிக்கும்.

"பிள்ளையாற்ற மணி கேட்டு எத்தின மாதமாச்சு" பிள்ளையாற்ற கோவில் மணிகள் திறக்கும் அந்த அதிகாலைப் பொழுது கலைந்துபோனது ஆச்சிக்கு பெருந்துயரை ஊட்டியது.

விடிய எழும்பி நிம்மதியா ஒரு சுருட்டுப்பத்தினாத்தான். பொச்சம் தீரும்போல இருக்கும். அந்தச்சுருட்டு நூர்ந்து போகிறதற்கு இடையில பார்க்க வேண்டிய அலுவலெல்லாம் நிம்மதியா பார்த்துமுடிச்சுப் போட்டு முகம் கழுவின கையோட ஒரு கோப்பை தேத்தண்ணி தன்ர கையால போட்டு குடிச்சுப்போட்டு பிள்ளையாரிட்டை போய்வந்துதான் மிச்ச அலுவலெல்லாம் நடக்கும்.

இப்ப கொஞ்சக்காலம் இது எதிலையும் ஆச்சிக்கு நிம்மதி இருக்கிறேல்லை. விடிய வெள்ளணவா பாயைவிட்டு எழும்பிப்போடவேணும். சன நெருசல் குஞ்சு குருமன்கள் பட்டாளமாய் குடியிருக்கிற வீடு அது. பனங்கிழங்கு அடுக்கின மாதிரி அந்த வீட்டு விறாந்தையில நாலு குடும்பம் ஒண்டாய் கிடக்குதுகள். வேளைக்கு எழும்பினாத்தான் நல்லது எண்டு வீட்டில உள்ளவை கதைச்சது காதில விழுந்திருக்கு.

மற்றவைக்கு இடைஞ்சலாய் இருக்கக்கூடாது தன்னை கூட்டிக்கொண்டு வந்த குடும்பத்துக்கு தன்னால கேடு வரக் கூடாது. என ஆச்சி அடிக்கடி மனதுக்குள்ள பணிப்பாள்.

பிரகலாதன்கூட ஆச்சியின் சுதந்திரம் பறிபோனதாய் எண்ணிக்கொள்வான். ஆச்சியின் வார்த்தைகளில் இருந்து பல விடயங்களை உணர்ந்துமிருக்கிறான். என்றாலும் என்ன செய்யமுடியும்...?

ஆச்சி விடிய எழும்பினால் சுருட்டை இப்போது வாயில் வைப்பதேயில்லை. விடிய "ரொய்லற்'றுக்கு போற தெண்டா பெரும்பாடு ஒரு வாளி தண்ணியள்ள கிணற்றடியில் கிடையாகக்கிடந்து துாங்க வேணும். அந்தக்கப்பியில தண்ணி அள்ள ஆச்சியின்ர இடுப்பே முறிஞ்சுபோகும். ஆரேன் தண்ணி அள்ளி ஊத்திவிட்டாத்தான் மிச்ச அலுவல். வாளிக்கை தண்ணியோட வந்து நிண்டால் "ரொய்லற்" கதவு சாத்திக்கிடக்கும். ஆரேன் உள்ளுக்க இருப்பினம். அதுக்கும் காத்திருப்புத்தான். சிலவேளை ஆச்சி தண்ணிவாளியை வச்சுக் கொண்டு காத்திருக்க "கொஞ்சம் பொறுங்கோ உடன் வாறன்" எண்டு ஆரேன் இளசுகள் ஆச்சியின்ர வாளியை தூக்கிக்கொண்டு போயிடுங்கள். அப்போதெல்லாம் அவளின் வாய் ஓய்வதில்லை.

இவையெல்லாம் அவளின் வாழ்வை சலிப்படையவே வைத்திற்று. மீண்டும் தன் வாழ்வை சொந்த ஊரிலே தொடர வேண்டும் என்றஅவா பீறிட்டு எழுந்திற்று.

அவளின் கனவுகள் எல்லாம் தான் இழந்துபோன சுகத்தினைத் தேடியபடியே இருந்தன. அவளின் ஆத்மா நிம்மதி தேடி அலைந்தது. தன்வாழ்வு இடி விழுந்த மரம்போல் ஆகுமென்று கனவிலும் நினைத்ததில்லை.

ஆச்சி விடாப்பிடியாக நின்றாள். தான் எப்படியும் தன் ஊருக்குப்போகவேணுமென்று பிரகலாதன் ஆச்சிக்கு பல தடவை சொல்லியிருக்கின்றான். "ஆச்சி கடவுள் எங்களை கைவிடமாட்டார்" நீ ஒன்றுக்கும் யோசிக்காமல் - அவசரப்படாமல் கொஞ்சக்காலம் எங்களோட இரு: ஆறுதலா ஊருக்குப் போவம்" என்று.

"கடவுளோ! கடவுளும் கிடவுளும் எல்லாம் நம்பி இழந்து போனன் மோனை. என்னால் பொறுக்கேலாது" என்று ஆச்சி மூட்டை முடிச்சுக்கட்டத்தொடங்கினாள்.

▲▲▲

பிரகலாதன் தன் நிலையில் பிடிவாதமாகவே இருந்தான். இரணியன் நாமத்தை தன் வாயால் ஒரு தடவையேனும் உச்சரிக்கத்துணிந்தானல்லன். தன்னைத்துதியாத தன் மகனை தந்தை பெரும் தண்டிப்புக்குள்ளாக்கினான்.

கடவுள் அவனின் ஜீவமாகியது. தந்தையின் வதைப்புக்கள் அவனுக்கு சர்வசாதாரணமாகின. இறைவனின் பரம எதிரியாகிய தந்தையின் செய்கையில் பிரகலாதனின் மனத்தை வெற்றி கொள்ள முடியாது போனது.

"நீ வணங்கும் கடவுளை உன்னால் காட்டமுடியுமா?" என தந்தை வதைத்தபோது.

"கடவுள் துாணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார்" என்றான் பிரகலாதன்.

"இந்தத் தூணிலும் இருப்பானா?" என்று பெரும் கற்றூணைப் பிழந்தான் இரணியன்.

கற்றூண் சரிந்து வீழ்ந்தது. அத்தூணில் இருந்து ஒரு பெரும் உருவம் வெளித் தோன்றியது. ●

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

பாவலரே வணக்கம்!
சந்திரிகா-ரணில் போட்டி இந்தியா-அமெரிக்கா போட்டி வெல்வது யார் பாவலரே?

அன்றனி,
மன்னார்.

சந்திரிகா ரணில் போட்டி சிறிலங்காவைக் குழப்பும். இந்திய அமெரிக்கப் போட்டி சிறிலங்காவை அழிக்கும்.

வணக்கம் பாவலரே!
வீதிவிபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைக்கட்டுப் படுத்த என்ன செய்யலாம்?

காண்டீபன்,
யாழ்ப்பாணம்.

போக்குவரத்து விதியை மீறுபவர்களின் தலை விதியை யாரால் கட்டுப்படுத்த முடியுமாம்

பாவலரே வணக்கம்!
இன்றைய நவீன காலத்தில் ஆண்கள் பெண்களுக்கு தாலி கட்டுவதில்லையே? பூட்டியல்லவா விடுகிறார்கள் இந்த 'மூன்று முடிச்சி' விவகாரம் பற்றி கூறுங்களேன்.

ப.பரமேஸ்வரி,
வவுனியா.

பாவலரே வணக்கம்!
இந்திய வானொலிகளில் குறுகிய நேரமே சினிமாப்பாடல்கள் ஒலிக்கின்றன. இலங்கை வானொலிகளில் எந்நேரமும் சினிமாப் பாடலே ஒலிக்கின்றதே?

நா.சாரங்கன்,
திருகோணமலை

அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள். நாங்கள் இறக்குமதி செய்கிறோம்...'டப்பா' சங்கீத ரசிகர்களாக நாம் மாறிவிட்டோம்...

பாவலா நான் வவுனியாவில் இருந்து கொழும்பு ரெயிலில் செல்கையில் என்னுடைய பணப்பையை திருடிக் கொண்டு ஓடும் ரயிலில் இருந்து பாய்ந்து ஓடிவிட்டான் திருடன் இவனுக்கு யார் பயிற்சி கொடுத்தது?

சி.லாவண்யா,
புளியங்குளம்.

உங்களைப் போன்ற ஏமாளிகள்தான்.

பாவலரே நான் ஒரு முறை கடைக்கு சென்றிருந்த போது கடைக்கு வந்த ஒரு வயதில் மூத்தவர் என்னிடம் கேட்டார் உமக்கு ஆங்கிலம் தெரியுமா? என்று நான் தெரியாது என்று சொன்னபோது நீர் போட்டிருக்கும் ஜீன்சை கழட்டி எறியும் எண்டார். ஆங்கிலம் தெரிந்தால் தான் ஜீன்ஸ் போட வேண்டுமா அவருக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?

அ.அஜந்தன்,
முள்ளிவாய்க்கால்

முதலில் தமிழர்களெல்லாம் தமிழை நன்றாக அறிந்துகொண்டா வேட்டி கட்டுகிறார்கள்... என்று கேளுங்கள்... வெள்ளைக்காரன் வேட்டி கட்டினால் தமிழனாக மாட்டான். தமிழன் ஜீன்ஸ் போட்டால் ஆங்கிலேயன் ஆகவும் முடியாது... அவ்வளவு தான்.



# பாவலன் பதில்கள்

ஒரு நண்பர் கூறினார் மூன்று முடிச்சுகளுக்கும் அர்த்தம் இவைதான் என்று.... முதல் முடிச்சு கடமையைக் குறிக்குமாம் அதாவது குடும்பக் கடமைகளைப் பொறுப்புடன் கணவன் என்ற ஸ்தானத்தில் இருந்து செய்வேன் என்பதை முதல் முடிச்சு உறுதிப்படுத்துமாம். கண்ணியத்தை இரண்டாவது முடிச்சு அர்த்தப்படுத்துமாம். அதாவது குடும்பத்தின் கண்ணியத்தை சமூகத்தில் காப்பாற்றுவேன் என்பதை அது உறுதிப்படுத்துமாம். மூன்றாவது முடிச்சு கட்டுப்பாட்டை வலியுறுத்துமாம்.. அதாவது வாழ்க்கையில் ஒழுக்கக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பேன் என்பதைக் குறிக்குமாம்.. ஆனால் தாலி கட்டுதலுக்கு இது பொருந்தும்... பூட்டுதலுக்குப் பொருந்தாது.

பாவலா!
முதுமைக்கு எது அழகு, இளமைக்கு எது அழகு?

கரன்,
விசுவமடு.

முதுமைக்கு அழகு அறிவில் இளமையாக இருத்தல், இளமைக்கு அழகு விவேகத்தில் முதுமையாக இருத்தல்.

பாவலரே வணக்கம்!
"கெட்டும் பட்டணம் போ" என்கிறார்களே இன்றைய காலத்தில் நம்பிப் போகலாமா?

கானகன்,
கிளிநொச்சி.

இந்தக்காலத்தில் கெடுப்பதோ பட்டணம்போ என்று சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும்.

* * *




"சரியான தலையிடியாக் கிடக்கு ஆசுபத்திரிக்கு ஒருக்காப் போய் வந்தா நல்லம்"

"நெடுகத்தான் தலையிடியெண்ணுறாய் ஆரும் ஸ்பெசலிஸ்ட் டெட்டக் காட்டலாமே."

"ஸ்பெசலிஸ்ட்டுகள் தான் நெடுக வந்து கொட்டுப் படுகினம். அதாலதான் வினை."

"பின்ன இந்த கைவீக்கத்தைக் காட்டுவமெண்டு ஆசுபத்திரிக்குப் போனன். போனிலை நிண்டு மணிக்கணக்காத் தூங்கி கடைசியா டாக்குத்தரிட்ட கிட்டப் போட்டன், அவர் எழுதிக் கொண்டே கடைக்கண் பார்வையை அருளி வெள்ளிக்கிழமை கொணந்து கிளினிக்கில காட்டுமெண்டார் மருந்து தரேல்ல."

"பிறகு வெள்ளிக் கிழமை போனனீயோ"

"போனன் அங்கயும் ஒருநாள் வேலையைவிட்டிட்டு மணிக்கணக்கா நிண்டு மகானைச் சந்திச்சன், அவர் கையை வைக்காமப் பாத்திட்டு 'வாற வெள்ளி கொணந்து காட்டும்' எண்டார். "பிறகு வெள்ளி போறாய்" "ம் என்னவோ சொல்லு விளமே விக்கிரமாதித்தன் கதை அதுபோல பிறகும் வெள்ளிக் கிழமை போனன்... ஸ்பெசலிஸ்ட்டுக்கும் விளங்க வேணுமே-எங்கட நாள்கூலி, பஸ்காசு, வேதனைம்... இப்ப சொன் னான் பாவி-அது இன்னுங் கொஞ்சம் வளரவேணும். கொஞ்ச நாள் கழிச்சு வாருமெண்டு"

"பிறகு கை என்னமாரி."

"கைக்கென்ன, அது தன் பாட்டில வேலை செய்யும், நோவும் தன்பாட்டில நோகுது-"

"ம் சிரங்கு முதிப்படு வணாக்காம விட்டாச்சரி.

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -93



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -93

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ..................................... ஈழநாதம்
முகவரி : ..................................... யாழ்சாலை,
..................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -92



**தே.ஜெனிற்றா,**
**9ஆம் வட்டாரம்,**
**மு/புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

பிஞ்சு வயதினிலே படிக்க நினைக்கும் என்
தளிர் மனதை யாரறிவார்-தஞ்சமின்றி
ஓதுங்கும் இந்த ஈழமதில் நாளைய
தலைவியாக தலைநிமிர்வேன் தமிழ் மண்ணில்!

### பாராட்டுக்குரிய வரிகள்

இந்த குழந்தையின் முகத்திலும்
ஒரு ஆழமான சோகம்.
தான் சுதந்திரக் காற்றை சுவாசிப்பேனோ
மாட்டேனோ என்று.

பாபு,
தருமபுரம்.

துள்ளித்திரியும் எம் தேசத்தின் புதல்வியே,
காணாமல் போன தந்தை முகத்தை நினைத்தாயோ,
புலிப் படையின் கிளி, மீட்பை நினைத்தாயோ,
அஞ்சாதே தமிழ் வீரம் குறையாது, ஈழம் விடிவது உறுதி.

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

கயவன் ஆக்கிரமிப்பில்-அன்று
கற்றோம் மரநிழலில் கல்வி
கரிகாலன் காலமிது-இன்று
கட்டிடுவான் கல்விக்கு கோவில்கள்.

அ.வரதராஜ்,
புதுக்குடியிருப்பு.

தங்கத்தமிழ் தங்கையே தன் நம்பிக்கையோடு
தளர்வின்றிக் கற்றுவா கண்ணான கல்வியை
தளிர்களான நீங்களே பெருவிருட்சங்களாகி
தமிழீழத்தை ஆட்சிசெய்து சாதனை பல படைப்பீர்.

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

பாடசாலை போகையிலே-சிங்களக்
கொடுங்கோலன் விமானச் சத்தம் கேட்டு
மரத்தடியில் நின்று நாளை புலிமாமாக்கள்
நிம்மதியாய்வாழ வழிசமைப்பாரென்று ஏங்கும் இந்தப் பிஞ்சு.

தி.யாழரசன்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

**06-11-2004 அன்று தனது ஐந்தாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும்...**

# R.V பந்தல் சேவை

RV பந்தல் சேவையின் இந்த ஆண்டின் புதிய அறிமுகம் முற்றிலும் குளிருட்டப்பட்ட நடமாடும் திருமண மண்டபம்

- இலங்கையின் எப்பாகத்திற்கும் துரித கதியில் உரிய நேரத்தில் கொண்டு சென்று அமைக்கும் எமது பந்தல் சேவை.
- உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண வைபவங்களா? பூப்புனித நீராட்டுவிழாவா? மற்றும் எவ்வித வைபவங்களுக்கும் உடனே நீங்கள் நாடவேண்டிய இடம்.

R V பந்தல் சேவை

- ஒளி,ஒலி ஜெனரேற்றர் மற்றும் மின்விசிறி, குளியல்தொட்டி, வீடியோ, போட்டோ சேவைகள்,சகல வகையான தளபாடப்பொருட்களை வழங்கும் சேவை.
- மலர் மாலைகள், கேக் ஐசிங், அலங்காரம் செய்யும் வசதிகள், வாகன, பூசகர், தவில் கச்சேரி ஒழுங்குகள். இவையனைத்துக்கும்

**R.V பந்தல் சேவை**








## R.V பந்தல் சேவை

இ.வி. பந்தல் பணி

முல்லைசாலை,தருமபுரம்.
விநாயகர் வீதி, மயிலிட்டி.
தொ.பே:0712-610008

(சி-10708)


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-20 | 05-11-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -261

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழி நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்.
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10599)

## 570 மில்.டொலர் உதவி குறித்து ஆசி.அபி.வங்கி பரிசீலனை

ஆசிய அபிவிருத்தி வங்கி அடுத்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் 570மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கத்திட்டமிட்டுள்ளது. இது டோக்கியோ நிதியுதவிக்கு அப்பாற்பட்ட நிதியுதவியாகும். எனினும் இலங்கையில் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படாத நிலையில் அந்த நிதியுதவியை வழங்குவது குறித்து தாம் ஆலோசனை செய்துவருவதாக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அலெஸ்னான்ரோ பொயோ தெரிவித்துள்ளார்.

இதேநிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படா விட்டால் இலங்கைக்கு உதவியளிக்கும் பல நாடுகளும் நிறுவனங்களும் தமது உதவிகளை வேறு (IV ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் நவ.11 இல் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பார்

நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான்பீற்றர்சன் எதிர் வரும்10ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் 11 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம்செய்து தமழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களை சந்திக்கவுள்ளதாகவும், பின்னர் சனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட பல அரச தலைவர்களைச் சந்திக்கவுள்ளதாக நோர்வேத தூதரகத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இங்கு வருகின்றவே... பேச்சுவார்த்தை மேசையில் தற... போது தள்ளிநிற்கும் இரு தரப்பினரையும் சந்தித்து அவர்களது கருத்தை நேரடியாகக் கேட்டுத் தெரிந்தும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்... , இத்தடைகளை எவ்வாறு ...ற்றுவது என்பது தொடர்பாக (IV ஆம் பக்கம் பார்க்க)

## -இந்தியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சருடன்-

# பலதரப்பட்ட விவகாரங்கள் குறித்து சனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தை

### இராணுவ ஒத்துழைப்பு, சேது கால்வாய்த்திட்டம் மீனவர் பிரச்சினை பற்றி முக்கிய கருத்துப் பரிமாற்றம்

(டில்லி)

**இந்தியா சென்றுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து விரிவாகப் பேச்சு நடத்தினார். இராணுவ ஒத்துழைப்பு, சேதுகால்வாய்த் திட்டம், மீன்பிடிப்பிரச்சினை மற்றும் பொருளாதார உடன்படிக் கையின் முன்னேற்றம் குறித்து மீள்பரிசீலனை எனப் பல்வேறு விடயங்கள் குறித்துப்பேசப்பட்டது.**

இந்தியப்பிரதமர் மன் மோகன் சிங் வீட்டில் அளித்த பிற்பகல் விருந்துப சாரத்துடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமாதான நடவடிக்கையின் சமீபகால நடவ டிக்கைகள் பற்றி எடுத்துரைத்ததாகவும் தற்போதைய இந்திய-சிறிலங்கா உறவுகள் குறித்து இரு தலைவர்களும் திருப்தி வெளியிட்டதாகவும் இலங்கையின் எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் இருதரப்பு உறவுகளை (IV ஆம் பக்கம் பார்க்க)

## றிச்சட் ஆர்மிரேஜின் இலங்கை விஜயம் ரத்து

(கொழும்பு)

அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜின் இலங்கை விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் அவரது பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகம் நேற்று அறிவித்துள்ளது.

அவர் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தமை தெரிந்ததே.

## கத்திக்குத்துக்கு இலக்காகி குடும்பப் பெண் மரணம்

ஐயன்குளம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 7.00 மணியளவில் ஐயன்குளம் புத்து வெட்டுவான் பகுதியில் குடும்பப் பெண் ஒருவரை ஆண் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். 45 வயது மதிக்கத்தக்க இராஜகோபால் தயாதேவி என்னும் பெண்ணே கத்திக்குத்துக்கு இலக்காகி இறந்துள்ளார்.

ஐயன்குளப் பகுதி மாதர் சங்கத் தலைவியாக சேவை செய்து வந்த இக் குடும்பப் பெண்ணை ஒருவர் (IV ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் 4ஆவது நாளாக நேற்று இயல்புநிலை பாதிப்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடிப் பகுதியில் முஸ்லிம்களிடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை காரணமாக அப்பகுதியில் இயல்புநிலை நான்காவது நாளாகவும் பதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரில் வியாபாரம் செய்யும் காத்தான்குடி வர்த்தகர்கள் நேற்றுத் தமது வியாபார நிலையங்களைத் திறந்து வழமை போன்று வியாபாரத்தை ஆரம்பித்த போதிலும் அங்கிருந்து வந்த அறிவித்தல் ஒன்றிற்கமைய நேற்று நண்பகலுடன் கடைகளை மூடியுள்ளனர்.

இதேவேளை வன்முறைச் சம்பவங்கள், மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாகத்தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ள 768 குடும்பங்கள் தொடர்ந்தும் அகில இலங்கை இஸ்லாமிய விஞ்ஞான பேரவைக்குரிய இரண்டு பள்ளிவாசல்களில் தங்கியுள்ளனர். இவர்களை நேற்று சென்று பார்வையிட்ட ஐ.நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ் (IV ஆம் பக்கம் பார்க்க)

## பாரவூர்தி-கைஏஸ் வாகனம் நேருக்கு நேர் மோதின

### நால்வர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

அதிவேகமாகச் சென்ற பார ஊர்தி ஒன்று எதிரே வந்த கைஏஸ் வாகனத்துடன் மோதியதில் கைஏஸ் வகனத்தில் பயணித்த நால்வர் காயமுற்றதோடு கைஏஸ் வாகனமும் சே...டைந்துள்து. மேற்படி சம்பவம் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஏ-9 பிரதான வீதியின் முறிகண்டிப் பகுதியில் (IV ஆம் பக்கம் பார்க்க)



## மருந்துக் கொள்வனவுக்கு பணமில்லை அரச வைத்தியசாலைகளில் நெருக்கடி

### சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ மனைகளுக்கு மருந்து கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சிடம் நிதி இல்லாத படியால் இரண்டு மாதங்களுக்கு அரச மருத்துவமனைகளில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 90 மருந்து வகைகள் அரசாங்க வைத்திய சாலைகளில் கிடையாது என தெரிவித்துள்ளதுடன் இம் மருந்துகளை நோயாளர்கள் வெளியில் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மருந்து வேண்டுவதற்கு 30 கோடி ரூபா தேவைப்பட்டுள்ளதென்றும் இது சம்பந்தமாக சுகாதார அமைச்சர் கெபினட் அமைச்சரவையின் (IV ஆம் பக்கம் பார்க்க)

## -லண்டனில் தமிழ் இளைஞர் குழுக்களின்- நடவடிக்கையைக் கட்டுப்படுத்த உதவிப் பொலிஸ் ஆணையாளர் நியமனம்

(லண்டன்)

இங்கிலாந்தில் இயங்கிவருகின்ற சட்டவிரோத தமிழ் இளைஞர் குழுக்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கென முதன்முறையாக அங்கு உதவிப் பொலிஸ் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பொலிஸ் அதிகாரிக்கு ஆலோசனை வழங்கவென சுயாதீனக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாகவும் தற்போது ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை தமிழ் இளைஞர் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவென நேற்று (IV ஆம் பக்கம் பார்க்க)

-நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தில்-

# தவறவிட்ட பொருட்களை நல்லூரிலுள்ள அரசியல்துறை செயலகத்தில் பெற்றுக்கொள்க

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின்போது அடியார்களினால் கைதவறவிடப் பட்ட பொருட்கள் எதிர்வரும் சனிக்கிழமை (06ஆம் திகதி) காலை 10.00மணிக்கு நல்லூர் வைமன் வீதியில் உள்ள அரசியல் துறைப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நல்லூர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டு இருந்த சிறப்புச் செயலணி அலுவலகத்தில் அடி யார்களினால் கண்டெடுத்து ஒப்ப டைக்கப்பட்ட தங்கநகைகள், பணப் பைகள் கைக்கடிகாரங்கள், கைய டக்கத்தொலைபேசி, அடையாள அட்டைகள் இவற்றில் அடங்கும். பொருட்களைத் தவற விட்ட வர்கள் அரசியல்துறைப் பணி மனைக்குச் சமூகம் கொடுத்து அடையாளத்தைக் காட்டி பொருட் களைக் கைப்பற்றிச் செல்லலாம் என சிறப்புச் செயலணியினர் அறிவித்துள்ளார். (41)

# பரீட்சைக்குத் தோற்றுவோர் கிளி. மத்திய கல்லூரிக்கு வருக

-தமிழீழ மாணவர் அமைப்பு அறிவிப்பு

க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு மாதாந்தம் நடைபெறும் வெற்றி நிச்சயம் பரீட்சைக்குப் புதிதாகத் தோற்ற விரும்புவர்கள் இன்று பி.ப.3.00 மணிக்கு பரீட்சைக்குத் தயாராக கிளி.மத்திய கல்லூரிக்கு வருகை தருமாறு தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த க.ஈழப்பிரியன் தெரிவித்துள்ளார்.

## தொடரும் பதினாறாம் ஆண்டு நினைவலைகளில்

தூயவனாய் மண்ணில் 25- 11 -1951



துரோகிகளால் விண்ணில் 05 -11 -1988

நாட்டுப்பற்றாளர்

### அமரர். திரு. சரவணமுத்து செல்வராசா(மாமா)

(தென்மராட்சி பிரபல வர்த்தகரும் சாவகச்சேரி வர்த்தக சங்க முன்னாள் செயலாளரும்)

உன் உதிரத்தில் உறவாடும்
உறவுகள் இங்கே
காலம் முழுதும் கண்ணீரில்
கவிதை எழுதுகிறோமப்பா!
ஈரெட்டு ஆண்டுகளாக – எம்
நெஞ்சங்கள் ஊமையாகி
நிதமும் உமைத் தொழுகிறதப்பா
ஈரெட்டாண்டென்ன
ஈரேழு ஜென்மமானலும்
உம் நினைவு எம் நெஞ்சை
விட்டகலாதப்பா,

நிரந்தர முகவரி
செல்வராசா வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
(5243)

தற்காலிக முகவரி
116/2 தொட்டியடி,
விசுவமடு.

## சைவ நெறித் தேர்வு 2004

சைவ பரிபாலன சபையால் நடத்தப்படவிருக்கும் சைவநெறித் தேர்வு 6.11.2004 சனிக்கிழமை நடைபெறும். தேர்வுக்கு விண்ணப் பித்த பாடசாலைகளுக்கு சுட்டிலக் கங்கள் அனுப்பப்பட்டுள்ளது. கிடைக்காதவர்கள் தொடர்பு கொள்ளவும். தங்கள் பாடசாலைக் குரிய வினாப் பொதியை முன்பு அறிவிக்கப்பட்டபடி இணைப்பு நிலையங்களில் பெற்றுக் கொள் ளுமாறு தேர்வுச் செயலாளர் அறி வித்துள்ளார்.


### நாகபூசணி அம்மன் திருமணசேவை

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யா திருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய் யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)


## 27ஆவது பிறந்த தினமும் 5ஆம் ஆண்டு நினைவு தினமும்

சொத்தாக 06 □ 10 □ 1977



வித்தாக 05 □ 11 □ 1999

### கரும்புலி மேஜர் அருளன்

(நந்தகோபாலன் துஸ்யந்தன்)

ஆனைக்கோட்டை மண்தந்த அருமைச் செல்வனே
துஸ்யந்தா
பகைபுரிந்த பாதகம் கண்டு வெஞ்சினம் கொண்டு
வேங்கையென்று எழுந்தவனே
கரும்புலி அணிதனில் களம் பல கண்டவனே
நெடுங்கேணி மண்ணிருந்து நெடுந்தூரம் சென்றவனே
உன்னை நினைக்கையில் கொதிக்குதடா என் நெஞ்சம்
அண்ணா அருளா என்று அன்புத்தங்கை கதற
அருளா எங்கடா உள்ளாய்
அழகாக நீ வாழ அடங்காத ஆசைகொண்டு
ஆழ்கடல் கடந்து நீள்தூரம் நான் சென்றேன்
அன்னை மண்காத்திட அருளன் என்ற நாமம் கொண்டு
அண்ணன் வழி நீ சென்றாய் அன்னை மனம் துடிக்குதடா
வெடிசுமந்த வேங்கை நீ திடம் கொண்டு எழுந்துவா
விடியும் ஈழம் விரைவில்

இவருடன் வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் சசியையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

உன் நினைவில் வாழும்,
தாய்,தங்கை,மைத்துனர்,
உற்றார், உறவினர்.

(5239)

## வீரவணக்கம்

தாயின் மடியில் 25 □ 10 □ 1979



தாயக மண்ணில் 05 □ 11 □ 2001

### யுகேந்திரநாதன்

தமிழீழத் தேசியத்துணைப்படைவீரர்
ஆறுமுகம் யுகேந்திரன்
நி.மு. தம்பிராய் பூநகரி

05.11.2001 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத் துடனான மோதலின்போது வீரச்சாவடைந் துள்ளார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(5247)

## தமிழீழ போக்குவரவுக் கழகம்

### நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

சம்பளத்திட்டம்:-

$\frac{4430 - 5530}{10 \times 110}$ + 2000.00 = 6,430.00 + சிறப்புக்கொடுப்பனவு 3000.00 = 9430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 07.11.2004 ஆம் நாள் ஞாயிறு காலை 09.00மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை,அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு :-

இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி 10300)



# ஒஸ்லோ, டோக்கியோ தீர்மானங்கள் விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்த மாட்டாது

## -பீரிசின் அறிக்கைக்கு பாலசிங்கம் விளக்கம்

**ஒஸ்லோவிலும், டோக்கியோவிலும் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இனப்பிரச்சினைக்கு இந்தக்கட்டமைப்புக்குள்தான் இறுதித்தீர்வு காணப்படவேண்டுமென்று விடுதலைப் புலிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த மாட்டாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.**

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதியும், 2003ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆம் திகதியும் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளின் பின்னர் தீர்மானங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இத்தீர்மானங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி சார்பில் கடந்த சில தினங்களுக்கு முன் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விடுத்திருந்த அறிக்கை தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அரசியல ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உதவிவழங்கும் நாடுகளானது இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் சமாதானப் பேச்சுக்களுடனான அரசியல் தீர்வுக்கு உற்சாகமூட்டலாமே தவிர அரசியல் தீர்வுக்கான எல்லையை வரையறை செய்யமுடியாது.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்ததால் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானமானது புலிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த மாட்டாதென்பதுடன் அதற்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடும் புலிகளுக்கில்லை.

இலங்கை அரசானது தனது சர்வதேச தந்திரக்கார கூட்டமைப்பாளர்களுடனும், உதவி வழங்கும் நாடுகளுடனும் இணைந்து தனது சொந்தத் தீர்மானங்களைப் பிரகடனங்கள் என்ற ரீதியில் உருவாக்கி அதனைப் புலிகள் மீது திணிக்க முற்படுகிறது.

சமாதான முயற்சிகளில் மேலதிக சக்திகளின் தேவையற்ற தலையீட்டை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஏற்கனவே நாம் டோக்கியோ பிரகடனத்தை நிராகரித்துவிட்டோம். அத்துடன் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகவெனக் கூறி ரணில் விக்கிரமசிங்க அரசினால் அப்போது முன்னெடுக்கப்பட்ட சர்வதேச பாதுகாப்பு வலய மட்டத்திற்கான எமது கடும் எதிர்ப்பை 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 23ஆம் திகதி உத்தியோகபூர்வ அறிக்கையொன்றின் மூலம் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் வெளியிட்டிருந்தது. இதன்மூலம் சமாதான முயற்சியானது மூன்றாந் தரப்பு அனுசரணையிலிருந்து பலவந்தமாக சர்வதேச மயப்படுத்தப் பட்டது. இந்த நிலையில் இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது முன்னர் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, அல்லது உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வெளியிடப்படும் பிரகடனங்களுக்கமைய மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக வெளிச்சக்திகளை விடுத்து சம்பந்தப்பட்ட தரப்புகள் பேச்சுக்கள் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியு மென அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

# "விழி" மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழா

(அலுவலகச் செய்தியாளர்)

'விழி' மருத்துவ இதழின் பொன்மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிளி. மாவட்ட மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக அரச அதிபர்.தி. இராசநாயகம் அவர்களும், கௌரவ விருந்தினராக தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ சுகாதார சேவைகள்பணிப்பாளர் அருண், வைத்தியகலாநிதி சி.பத்மலோஜினி, கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், மனிதவள மேம்பாட்டுப்பிரிவு சி.விபுலேந்திரன் ஆகியோர்கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மாதாந்த மருத்துவ 'இதழ்விழி' என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# அறிவியலில் தமிழர் உலகளாவிய ரீதியில் பலம் பெற்றவர்களாக மிளிர வேண்டும்

## -யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் சமூகத்தினரது எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழீழத் தேசியத் தலைவர் தமிழ் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இதன் மூலம் தமிழீழ மக்கள் உலகளாவிய ரீதியில் அறிவியல் பலம் பெற்றவர்களாக மிளிர வேண்டும் என்பதுவே அவர் எதிர்பார்ப்பு ஆகும்.

இவ்வாறு கடந்த திங்கள் அன்று யாழ்.வேலணை சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர்.செம்மணன் தெரிவித்துள்ளார்.

தமிழின விடுதலை போராட்டத்திற்கே காப்பரணாக கல்வியை தமிழீழ விடுதலைப்புலிகள் நேசிக்கின்றனர் என்பதை இன்று உலகமே அறிந்து கொண்டுள்ளது.

காரணம் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளின் முதற்கட்டமாக புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையிலும் தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரங்களுக்கு புலிகள் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளனா.

இதே போல் தமிழின விடுதலைப் போராட்டம் தோற்றுவிக்கப் படவே காரணமாக இருந்தது. முற்போக்கான சிந்தனையும், இன விடுதலை உணர்வும் மிக்க மாணவர் சமூகத்தினரால் தான் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட போராட்டத்தின் பின்னணியில் நின்று உழைத்தவர்கள் மாணவர்களும், அவர்கள் சார்ந்த கல்விச் சமூகத்தினரும் தான்.

இத்தகைய எமது மாணவர்கள் சமூக விரோத சக்திகளின் சதிச் செயல்களுக்கு விலை போகாது தொடர்ந்தும் தேசப்பற்றுடையவர்களாகத் திகழ்வது மிகவும் அவசியம் எனவும் செம்மணன் மேலும் தெரிவித்தார். (33)



மல்லாவி நகரில் துணுக்காய் மாங்குளம் பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் இரண்டு உந்துருளிகள் மோதி விபத்திற்குள்ளானது. உந்துருளியினை ஓட்டி வந்தவரில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். விபத்திற்குள்ளான இரண்டு உந்துருளிகளையும் படத்தில் காணலாம். (படம் – செல்வா)

# வீதிப்போக்குவரத்து விதிமுறைகள் பற்றி தமிழீழ காவல்துறை கருத்தூட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கிளி வர்த்தகசங்க அங்கத்தவர்களுக்கு வீதிப்போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகவும், குற்றத் தடுப்பு நடைமுறைகள் தொடர்பாகவும் கருத்தூட்டல் நடவடிக்கைகளைக் காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று மாலை 3.00மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமான இக்கருத்தூட்டல் நடவடிக்கை 4.30 மணிவரை நடைபெற்றது. இக்கருத்தூட்டல் நிகழ்வில வீதிப்போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகப் போக்குவரத்துக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமார் ஆகியோர் கருத்தூட்டல்களை நிகழ்த்தினர். குற்றத் தடுப்பு நடைமுறைகள் தொடர்பாக கிளி.காவல் பணிமனைப் பொறுப்பாளர் வழங்கினார். இதில் 100இற்கும அதிகமான வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை தமிழீழ காவல் துறையின் மன்னார் மாவட்டக் கண்காணிப்பாளர் க.கண்ணாளன் அவர்களின் தலைமையில் முழங்காவில் காவல் பணிமனைப் பொறுப்பாளர் ,உப பரிசோதகர் ந.குகநாதன், மற்றும் உபபரிசோதகர் தேவதாஸ் ஆகியோரினால் கடந்த 30.10.2004, 31.10.2004 ஆகிய தினங்களில் பரவலான விழிப்புணர்வுக் கூட்டங்கள் மன்னார் மாவட்டத்தில் நடாத்தப்பட்டுள்ளன.

இதில் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் பற்றியும், அதனால் ஏற்படும் உயிர், உடமை இழப்புக்களைத் தவிர்க்கும் முகமாகவும், மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கை பற்றியும் விழிப்பூட்டும் வகையில் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விழிப்பூட்டும் கருத்தூட்டல் மன்னார் மாவட்டத்தில் முழங்காவில், வெள்ளாங்குளம், ஈகம்குடியிருப்பு, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டிக கடற்கரை, பாலியாறு, இரணைமாதா நகர், கிராஞ்சி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள வர்த்தக சங்கத்தினர், வாகன உரிமையாளர்கள், மாதர் சங்கத்தினர், கமக்கார அமைப்புக்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், விளையாட்டுக் குழுவினர், தேசிய எழுச்சிப் பேரவையினர், சமூகபொருளாதார அபிவிருத்திக் குழுவினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், மற்றும் கிராம அலுவலர்களும், பொது மக்களும் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர். இதுபோன்ற கருத்தமர்வுகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## மும்பை டெஸ்ட்

# இந்தியா முதல் இனிங்ஸ் 104 அவுஸ்திரேலியா 203

(மும்பை)

இந்தியாவிற்கும், அவுஸ்திரேலியாவிற்கும் இடையிலான நான்காவதும்,இறுதியுமான கிரிக்கெட் டெஸ்டில் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இனிங்சில் விக்கெட் இழப்பின்றி 05 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இதற்கு முன்னதாக, நேற்றுக் காலை 22/2 என்ற ரீதியில் தனது முதல் இனிங்சைத் தொடங்கிய இந்தியா 104 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ராவிட் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களைப் பெற்றார். கிளெப்ஸி நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. மார்ட்டின் 55 ஓட்டங்களைப் பெற்றார். கும்ளே 05 விக்கெட்டுக்களையும் முரளிகார்த்திக் 04 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


# அறிவித்தல்

## உப்பு உற்பத்தி பேட்டை ஆனையிறவு

**எமது நிறுவன உற்பத்திகளின் ஆகக் கூடிய சில்லறை விலைகள் 15.10.2004 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.**

01 கிலோ பொதி அயடீன் கலந்த கல் உப்பு ரூபா. 18/=

400 கிராம் பொதி அயடீன் கலந்த மேசை உப்பு ரூபா. 15/=

பணிப்பாளர்,
உப்பு உற்பத்தி பேட்டை,
ஆனையிறவு.

(சி-10299)

# தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கல்வி.அமை.செயலர் சந்திப்பு ஒத்திவைப்பு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினருடன் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடி மெல் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு கல்வி அமைச்சில் நடத்தவிருந்த சந்திப்பு இன்னொரு திகதிக்கு ஒத்திப்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச செயலாளர் த. மகாசிவத்திற்கு சந்திப்பு ஒத்திப் போடப்பட்ட விஷயத்தை வெளியிட்டார். கடந்த மாதம் 06 ஆம் திகதி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவைச் சந்தித்தபோது, மத்திய கல்வி அமைச்சில் தமிழ் மொழி மூலம் கல்விக்கு என்று தனிப்பிரிவு ஒன்றை ஒரு மாத காலத்தில் அமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தார். ஒருமாத காலம் நிறைவடையும் நிலையில் அது தொடர்பான நடவடிக்கை பற்றி நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் சந்திப்பில் அது சம்பந்தமான விபரங்களை அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் வெளியிடலாம் என்று தமிழ் வட்டாரங்கள் பெரிதும் எதிர்பார்ப்புடன் இருந்தன. இந்நிலையில் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அனுராதபுரத்திற்கு அவசர உத்தியோக அலுவல்கள் காரணமாக தாரா டி மெல் செல்வதால் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் கூறின.

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் வடக்கு கிழக்கில் இடியுடன் மழை

## வளிமண்டல திணைக்களம் அறிவிப்பு

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கம் காரணமாக வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்படும் என்று வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மத்திய மலை நாட்டின் கிழக்குச் சரிவுப் பிரதேசங்களில் ஓரளவு கடும் மழை பெய்யலாம். நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது மாலை நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம். காங்கேசன்துறை தொடக்கம் மட்டக்களப்பினுடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பிரதேசத்தில் அவ்வப்பொழுது மழை பெய்யக்கூடும். அப்பிரதேசக் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் ஓரளவு கடும் காற்றும் வீசக்கூடும் என்று அறிவிக்கப்படுகிறது.

# சனாதிபதி யஸீர் அரபாத் ஆள்மயக்க நிலையில்



(பரிஸ்)

பலஸ்தீன சனாதிபதி யஸீர் அரபாத் சுயநினைவற்ற ஆள்மயக்கநிலையில் (கோமா) இருப்பதாக பரிஸில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனை பலஸ்தீனத்தின் அதிகாரி ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளார். பிரான்ஸின் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள யஸீர்அரபாத் தற்சமயம் தீவிர கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் யஸீர் அரபாத்திற்கு ஏற்பட்டுள்ள நோயின் தாக்கம் குறித்து இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

# 'அக்கினிப்பறவைகள் பாகம்-02' அறிமுகவிழா நேற்று

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் பயணத்தில் மகளிர் படையணியின் வரலாற்றைச் சித்தரிக்கும் விவரணப் படம் "அக்கினிப்பறவைகள் பாகம்-02" அறிமுகவிழா நேற்று மாலை 2.30 மணியளவில் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவரசி தலைமையில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

முதல் பிரதியை நிதர்சனப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் பிரமிளா, லெப்ரினனட் கேணல். விக்ரர் அவர்களின் தந்தையார் மருசலின் அவர்களுக்கு வழங்கினார். இரண்டாவது பிரதியை நிதர்சனப் பிரிவைச் சேர்ந்த பூமா, மாலதி அவர்களின் தந்தையாருக்கு வழங்கினார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை மன்னார் நிதர்சனப் பிரிவின் பொறுப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் வினோ உட்பட பல பிரமுகர்களுக்கு வழங்கினார். இவ் வெளியீட்டுவிழாவிற்கு விளக்கவுரையை சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வழங்கினார். மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் பேசுகையில்,

தமிழிலக்கிய வரலாற்றில் சங்ககாலம், சங்கமருவியகாலம், பல்லவர் காலம் எனப் பல காலங்கள் உண்டு. ஆனால் எமக்கு இது புலிக்காலம் இக்காலத்தில்தான் பலவீரம் செறிந்த கலைப் பண்புகள் பழக்கப்படுகின்றன என்றால் மிகையாகாது. தொடர்ந்து பல நிகழ்வுகள் இடம்பெற்றன. (மி)

# யப்பான் உதவும்

(கொழும்பு)

அரசின்பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கப்போவதாக ஜப்பான் உறுதியளித்துள்ளது.

இதற்கமைய கைத்தொழில் துறையை மேம்படுத்துவற்காக 2600 கோடி ரூபாவிற்கு அதிகமான தொகையை வழங்க அந்நாட்டு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நிதியமைச்சில்அமைச்சர் சரத்து அமுனுகமவை இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கி யோசூடா சந்தித்தவேளை இதனைத் தெரிவித்துள்ளார். ஜப்பான் வழங்கவுள்ள குறைந்தவட்டியிலான கடன் தொகையை40 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தினால் போதுமானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை மாவட்டத்தில் த.பு.கழக ஐந்தாவது கிளை நேற்று முன்தினம் திறப்பு

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், திருகோணமலை மாவட்டத்தில் தனது ஐந்தாவது பிரதேசக் கிளையை ஈச்சம்பலத்தைப் பிரதேச செயலர் பிரிவில் புன்னையடிக் கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை அலுவலகத்தை நடாவை வெட்டித் திறந்து வைத்தார். விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் புதிய பிரதேச அலுவலகத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

ஆரம்பத்தில் எழிலன், சஞ்சை, தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா, மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் குபேரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை ஐந்து பிரதேச அலுவலகங்களைத் திறந்துள்ளது. தம்பலகமம், கட்டைப்பறிச்சான், திரியாய் குச்சவெளி ஆகிய இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேச அலுவலகங்கள் திறக்கப்பட்டு செயற்படுகின்றன. புன்னையடிக் கிராமத்தில் திறக்கப்பட்ட ஐந்தாவது பிரதேச அலுவலகம் ஈச்சிலம்பற்று பிரதேச செயலகப் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்டு தொழிலின்றி வறுமையில் வாழும் மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா தெரிவித்தார். (25)

# வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் யாழ்.நூலகத்திற்கு விஜயம்

வடக்கு கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன நேற்று யாழ்ப்பாண பொதுசன நூலகத் திற்கு விஜயம் செய்துள்ளார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகள் சகிதம் நூல கத்திற்கு விஜயம் செய்த அவர் அங்கு நிலவும் குறைகள் தொடர்பாக மாதாந்தம் பராமரிக்க மாதம் ஒன்றுக்கு 5 இலட்சம் தேவை என்ற போதும் யாழ்ப்பாண மாநகர சபைக்குப் போதிய வருமானம் இல் லாமை தொடர்பாகவும் ஆளுநருக்கு அதிகாரிகளால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை தமிழ் நாட்டின் நூலகங்களுக்கும் யாழ்ப்பாண நூலகத்துக்கும் இடையில் கணனி தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் யாழ்ப்பாண நூலகத்தின் பயன்பாட்டை மேம்படுத்தும் சில திட்டங்கள் தொடர்பில் ஆளுநர் யோசனைகளை முன்வைத்தார். ஆளுநரின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்போவதாகப் பல அமைபுகள் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையிலும் நேற்று முன்தினம் பலாலி படைத் தளத்திற்கு மாத்திரம் அவர் வந்து சென்றதாகக் கூறப்பட்ட நிலையிலுமே நேற்றைய யாழ்ப்பாண விஜயத்தை ஆளுநர் மேற்கொண்டார்.

## 570 மில்...

நாடுகளுக்குத் திசை திருப்பும் நிலையேற்படும் என அவர் எச்சரித்துள்ளார். நாட்டின் அபிவிருத்திக்கு சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவது அவசியமானதாகும். நாட்டில் எரிபொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் வரி உயர்வு விதிக்கப்படுவதன் மூலமே நிதிப்பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். எனவே அரசாங்கம் பாரிய நிதிநெருக்கடியில் இருப்பதால் தாம் என்ன வகையில் உதவலாம் என ஆலோசிப்பதாகவும் பொயோ தெரிவித்தார்.

## நடவடிக்கையை...

முன்தினம் முக்கிய கூட்டம் இடம்பெற்றவேளை அவ் இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் தமிழ் இளைஞர் குழு ஒன்றினால் மாற்றுத் தமிழ் இளைஞர்குழு ஒன்றின் வீடு தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (32)

## கத்திக்....

கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். குத்தப்பட்டு காயமடைந்த நிலையில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் அன்பியுலன்ஸ் வண்டியில் ஏற்றிக் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு வந்து கொண்டிருந்த வேளை வழியிலேயே இவர் சாவடைந்துள்ளார். இவரது உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## காத்தான்....

தானிகராலய பிரதிநிதிகளினால் அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டதாக காத்தான்குடிப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். இதனைவிட சில உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சென்று பார்வையிட்டதுடன் நிவாரண உதவிகள் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மருந்துக்....

தீர்மானங்களுக்கு சமர்ப்பித்தும் இதுவரை எந்தப் பதிலும் கெபினட் அமைச்சரவையால் கிடைக்கவில்லை என சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

## நோர்வே....

இரு தரப்பினரது நாடியைப் பிடித்தறிவதற்காக அவர் இங்கு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கூறியுள்ள கருத்துக்களின்படி இவ்விஜயமானது எவ்வித உயர்ந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருக்கவில்லையெனவும், ஆனாலும் கஸ்டமான சூழ்நிலைகளின் போதும் பேச்சுவார்த்தை மேசையில் சம்பந்தப்பட்டிருக்கும் இரு தரப்பினருடனும் தொடர்ந்தும் தொடர்புகளை வைத்திருப்பது அவசியமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர் 12 ஆம் திகதி வரை தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பலதரப்பட்ட...

மேம்படுத்துவது குறித்தும் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்குடனான இச்சந்திப்பின் போது இந்தியா- இலங்கை சுதந்திர பொருளாதார உடன்படிக்கையின் முன்னேற்றம் குறித்து மீள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு நாடுகளுக்குமிடையிலான சர்வதேச பொருளாதார ஏற்பாடுகளை ஸ்தாபித்து

விஸ்தரிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை தவறுதலாக இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிர வேசிக்கும் இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமான ரீதியில் தீர்த்துக் கொள்ள இருவரும் இணக்கம் கண்டுள்ளனர். இவ்விடயத்தைக் கையாள்வதற்காக கூட்டுச் செயற்குழு உருவாக்கப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் எனவும தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கான இந்தியக் கடன்திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கும் அந்நாட்டு அரசு இணங்கியுள்ளது. மேலும் இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்புப் பற்றியும் பாதுகாப்பு உடன்படிக்கை பற்றியும் விரிவாக ஆராயப்பட்ட போதும் பாதுகாப்பு உடன்பாடு கையெழுத்திடுவது பற்றித் தகவல் எதுவும் தெரியவரவில்லை.

நேற்றைய சந்திப்பில் சேது கால்வாய்த்திட்டம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இத் திட்டம தொடர்பான சகல தகவல்களையும் இரண்டு நாடுகளும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இது இலங்கையில் பாதக விளைவுகளை ஏற்படுத்தாது என்பதை ஊர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக இந்தியா உறுதியளித்துள்ளது.

மூன்று நாள் விஜயமாக இந்தியா சென்ற சனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவில் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மின்சாரத் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த ஆகியோர் அடங்கியுள்ளனர். சனாதிபதி அப்துல்கலாம், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜி, சோனியாகாந்தி, ஆகியோரையும் இக்குழுவினர் சந்திக்கவுள்ளார்.

## பாரவூர்தி....

இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ் நோக்கி பத்துப் பயணிகளுடன் பயணித்த கைஏஸ் வாகனம் ஏ-9 பிரதான வீதியில் பயணித்த சமயம் கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி அதி வேகமாக வந்த வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையும் மீறி எதிரே வந்த கைஏஸ் வாகனத்துடன் மோதியதில் கைஏஸ் வாகனத்தில் பயணித்த நால்வர் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி/ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

பருத்தித்துறை நெல்லியடியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை உதயமலர் (வயது 51), கிருஸ்ணபிள்ளை கலைமகள் (வயது 21) இராசையா இராசம்மா (வயது76), இரத்தினம் குணேஸ்வரி (வயது 71) ஆகிய நால்வருமே மேற்படி சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களாவர்.

மேற்படி விபத்துத் தொடர்பாக தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான பாரவூர்தி பாலத்திற்குள் விழும் தறுவாயிலுள்ளது. (09,சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.